கொள்ளவேயிஞ்சிதனைரவியுலரவைத்துக் கூறாகக்கல்லுரலிற்குண
மாகயிட்டு, வள்ளவேயிருப்புலக்கைகொண்டுமேயையா மாசிதறயிடித்து
மேதூளதாக்கிமைந்தா, முள்ளவேமுனசொன்னபீங்கானிலிட்டு மூதண்
டமாகவேமத்தித்துகூட்டி, கள்ளவேயில்லையிதுரவிசாமம்வைத்தால்கரு
தவேசெழுகுமிறகற்பமிதுவாமே (௯௱௮௫)

இதுவானசாதிலிங்கமெழுகுகற்ப மியம்பினேஞ்சீசாவிற்பதனஞ்செ
ய்து, அதுவானசிவயோகஞ்செயுங்காலத்தில் அடவானபிராணயவாசித
னையொட்டி, சதுவானரேசகஞ்சிங்கென்றுகாட்டிச் சம்பிரமதாகவேமவு
னகுருபீடம், ததுவாகத்தம்பித்துக்கும்பித்தாயானுல் தருவாகமவுனகுரு
தேரிசனமாமென்றே (௯௱௮௬)

சிவயோகம்பூசித்தடிபணிதல்.

தெரிசித்துயங்கென்றுகும்பகமேவித் தெளிவாகலிங்கமெழு கற்பத்
துக்கையா, அரிசித்துப்பூசித்துஅடிபணிந்தாகில் அடவானசித்திமுத்தி
யங்கேயெய்தும், பரிசித்துச்சாதிலிங்கமெழுகுகற்பம் பரிவாகக்குன்றிம
ணிப்பிரமாணங்கொண்டு, தெரிசித்துச்சிவகெங்கைபணவிடை தன்னில்
இருமையதாய்க்குழைத்துநீமண்டலங்கொள்ளே (௯௱௮௭)

கொள்ளவேமண்டலமிருபோதுங்கொண்டால் கூரானசடலமிதற் கழிவோயில்லை, துள்ளவேதொண்ணூற்றுற்சட்டையுந்தான் தொகுதி பெறமண்டலத்துரித்தங்கேபோகும், வள்ளலேவாசியமைதயிழுத்தங்கேக ட்டும் வசனித்தோம்தேகமதுகற்போலாகும், தெள்ளவேதேகவச்சிரகா யமாகும் செணப்போதிற்காயசித்துவதுவாமே (௩அஅ)

வாகுமேமண்டலமிருபோதுண்டால் வாழலாம்யுகாயுகாந்திரங்களி துவாகும், சாகுமேபிதுர்க்களெல்லாமோடிப்போகுஞ் சாயுச்சியபதவிவ ந்தெய்துமிதுபாரு, நாகுமேநவநீதமமுர்தமதுபாயும் நலமான குளிகையது சித்திக்கும்பாரு, ஆகுமேதன்வந்திரிகொண்டகற்பந்தான் ஆர்செய்தார்நா ம்செய்தோமவர்செய்தார்பாரோ (௩அ௯)

செய்ததொருதபோபலமிருந்ததேயாகில் சித்திக்குஞ்சாதிலிங்கமெ ழுகுகற்பம், நைததோருகற்பத்தால்நவகோடிசித்தர் நலம்பெறவேகாயசி த்தியதுவானார், எய்ததொருயிக்கற்பம்நன்றாயச்சொன்னோம் யென்குருவ சுவனிதேவருடகற்பம், பொய்ததொருபூமலர்வாசமதுபோலப் புகழாகவ சனிப்போம்புலத்தியனேகேளே (௩௯௰)

அசுவனிதேவருண்டகற்பம் கெந்திமெழுகுகற்பம்.

கேளென்றவசுவனிதேவருண்டகற்பம் கெடியானகற்பமதைக்கி ப்பையதாய்ச்சொல்வேன், நாளொன்றுஞ்செல்லாது நாம்செய்தோம்பா நலமானவசுவனிதேவருடமகிமை, தேளென்றகொட்டுதல்போலேயிக்க பம் செயகற்பமகிமைதனைச்செப்புவோமையா, பாழொன்றும்வாராதுகெ ந்திமெழுகற்பம் பரிந்திதேன் நன்றாகப்பரிவாய்க்கேளே (௩௯௧)

பரிவானகெந்திமெழுகிரண்டுசேர்கொண்டு பண்மைபெறும்பீங்க னில்மெழுகதனையிட்டு, வரிவானகாந்தமெழுசேரதுதானிட்டு வளமா துரிசினுடமெழுகுசேரிட்டு, வரிவானதாளகமெழுகுசேரிட்டு விதமா குருசெயநீர்பலமொன்றிட்டு, அறிவானயதன்மெழுகுபலமொன்றுபோ டு அருளினேன்கிளிசெயநீர்பலமெழுகுவாரோ (௩௯௨)

ஒன்றானயம்மெழுகுபலமொன்றுபோல் ஓ கோகோ ரோமசெயநீ பலமொன்று, அன்றானமெழுகுபலமொன்றுபோடு அடவானகிளிசெய ர்பலமொன்றுவாரு, வன்றானவம்மெழுகுபலமொன்றுபோடு வசனிப்ே முசிசெயநீருபலமொன்று, குன்றுமலதன்மெழுகுபலமொன்றுபோடு திேனும்தேசிசெயநீருபலமொன்றே (௩௯௩)

நீரானவம்மெழுகுபலமொன்றுபோடு நீமகனேரவிசெயநீர்பலமொ ன்றுவாரு, மாரானவம்மெழுகுபலமொன்றுபோடு மதிசெயநீர்பலமொ றுவம்மெழுகுபலந்தான், வாரானரஷியமுர்தப்பலமொன்றுவாரு வச

போமதியமுர்தம்பலமொன்றுவாரு, சேரானசிவகங்கை சிவசத்திகங்கை
செப்புலோமிரண்டுபலஞ்சேர்த்தங்குவாமோ (௯௯௪)

சாதிக்காய்த்தூள்.

வாரப்பாசிவமுப்புச்சுண்ணம்பணவிடைதான் வசனிப்போஞ்சிவச
த்திசுண்ணம்பணவிடைதான், சேரப்பாசிவசெந்தூரம் பணவிடைதான்
சிவசத்திசெந்தூரஞ்செப்பும்பணவிடைதான், காரப்பாயமுகண்ணிச் சா
றுபலமஞ்சு கருதவேவகையெல்லாமொன்றாகச்சேர்த்து, சாரப்பாசாதிக்
காய்பலமாறுவாங்கி சார்வானகல்லுரலிற்போட்டங்குகாணே (௯௯௫)

காணவேசொல்லுகிறேன்கிருப்புலக்கைகொண்டு கருதவேமாவது
போல்தூளதாயிடித்து, வாணவேவடிகட்டித்தூள்கொண்டுநீயும் மகத்தா
னருமன்சொன்னமுறையதனிற்போடு, சாணவேமத்தித்துக்கூட்டியேயப்
பா சார்பானரவிமுகஞ்சாமம்வைத்தாக்கால், நாணவேகருநீலிவன்னமது
போலாம் நலமானலேகியம்வருதலதுகாணே (௯௯௬)

சிவயோகபூசை

வருதலதுகண்டுநீபிங்காவெடுத்து வளமானசேதாவிற்பதனமதாய்ச்
செய்து, அருதலதுபோகாமல்பிராணயமேவி யங்கென்றுரேசகம்கும்பித்
தாயானால், குருதலதுகாணுமதுசிவயோகந்தன்னில் கும்பித்துக்குருவி
னடிபோற்றிநீசெய்து, நருதலதுவாகவேமவுனங்கொண்டையா நந்திபதம்
பணிந்துநீபூசிப்பாய்த்தானே (௯௯௭)

பூசித்துச்சிவபூசைசெய்யுங்காலத்தில் புகழாகக்கெந்தியுட கற்பம
தைக்கொண்டு, வாசித்துயிருபோதுமண்டலமுறைமையா வசனித்தோங்கு
ன்றிமணிப்பிரமாணங்கொண்டால், நாசித்துநந்தியொளிபிரசன்னங்காண்
பாய் நனாதினாயுமற்றுப்போமண்டலந்தன்னில், பாசித்துப்பரமபதமலா
கொடியிற்காண்பாய் பசுபதிபாசவுபகிடமதனைக்காணே (௯௯௮)

மதுவானகற்பமதையுண்டுநீயப்பா மகத்தானசிவயோகம்பிராணய
மொட்டி, வதுவானரேசகம்வாசியதைக்கொண்டு வங்கென்றுயிழுத்துநீ
கும்பித்தாயானால், கதுவானமுத்தியதுகாயம்பெலப்படும் காயசித்தியாகு
மதுதேகசித்தியாகும், அதுவானசடலமதுகற்போலேகட்டும் ஆயுசுக்க
ழிவில்லையெமன்பாரானவைபோச்சே (௯௯௯)

போச்சென்றகெந்திமெழுகற்பமேயுண்டால் பொன்னிறம்போலேதே
கமதுவாகும், வாச்சுதேவாதம்மசித்தியதுவாகும் வாசிசித்திகாயசித்திதா
னுமதுவாகும், ஏச்சென்றவெழுகுவச்சிரகாயமாகும் என்னசொல்வேன்
கோடாகோடிவயதாகும், தூச்சுமீதநோண்றொற்றுசட்டையது தள்ளு
ந் தொகுதிபெறக்கழட்டிவிடுஞ்சுருதிசொன்னேனே (௲

சொன்னமேகெந்திமெழுகற்பமதையா சொல்லுமசுவனிதேவருண்டகற்பந்தான், அன்னேமேயவர்கொண்டகற்பமதனலே அதிதமுறைகற்பங்களகத்தினும்கொண்டோர், முன்னேமேகொண்டதொருமுன்னேர்கள்கற்ப முறைபாகச்சொல்லிவிட்டோம்பாருநீமைந்தா, வன்னேமேயின்னுலுசெளமியந்தன்னில் வசனிப்போம்வாதமுறைசவர்க்காரப்போக்கே()

சவர்க்காரம் பசுமைசிறப்பூமி ஏலகிரிதேசம்.

போக்கானசவர்க்காரவைப்பைக்கேளு பூதலந்தன்னிலேபசுமைசிறப்பூமி, வாக்கானயப்பூமிதேசமதிலுண்டு வளமானதேசமடாயேலகிரிராச்சியம், தாக்கானயக்கிரிசாரலஷுவாரந் தருவானகுளமேரிமடுவுகளிலையா, சாக்கானகிளியூறலேரியெதிர்வாயில் தன்மொழிபோல்பரவும்கிளியானையாமே (௭௱௨)

ஆனகிளிநீளஞ்சாணஞ்சாறுகொண்டு அருளுவோமதனேடு கத்திகொண்டெடுத்து, வானமதினுணையுடசவ்வதனைப்போக்கி வளமானகோரையதுஞ்சதுவும்வாங்கி, கானகிளியானையைநீகல்லுரலிற்போட்டுக் கருதவேயிருப்புலக்கைகொண்டுமேதான், மானமுடன்சாடியொருபாண்டத்திலிட்டு மகத்தானசிவசத்திகன்னகையதில்வாரோ (௭௱௩)

வார்த்துகரமதனலேகனைத்திரோயாகில் மாக்குழம்பதுபோலேபாகமதுவாகும், மூர்த்துமுன்சொன்னதொருசிவசத்தியுப்பு முதண்டவுப்பதனிற்சேர்கொண்டுநீயும், கார்த்துமுன்கனைத்தகுழம்பதுவுலுப்பிட்டுக்கருதவேகுருசெயநீராறுபலம்விட்டு, சேர்த்துவெட்பாலே விறகுகொண்டையா செயமாகவடுப்பேற்றியவித்திடாய்தானே (௭௱௪)

தானகவவித்திட்டுச்சாமமதுவானல் தருவானபாண்டமதை யிறக்கியேநீயும், ஆனகவப்பாண்டமாறவைத்ததனை அதுவாகப்பார்ததையேயாமாகிற்கேளு, பானகப்பானையதுபோலேயதுகட்டும்பரிவாகவதனையேகல்லுரலிலிட்டு, ஏனகக்கிளிசெயநீர்சேர்கொண்டுநீயும் இயம்புவோமுரல்தனிலின்னிருவாரோ (௭௱௫)

ஐந்துமாதக்கடுஞ்சூலபனிக்குடம்.

வாரப்பாயன்னிருவார்த்துக்கல்லுரலில் வளமாகயிருப்புலக்கைகொண்டுமேநீதான், ஏரப்பாசாமமதுயிடித்ததனைக்கேளு இயல்பாகச்சுமிதியதுபிசினிபோலாகும், ஆரப்பாயப்பாகங்கண்டபோதையா அதைத்தோண்டிப்பாண்டமதிலடைவாகயிட்டு, மாரப்பாமாதகஞ்சமதனிற்கேளு மகத்தானகடுஞ்சூலுபாலன்பனிக்குடமே (௭௱௬)

குடமானபனிநீரைச்சுத்தசலமாக்கிக் கூறுவோம்சவர்க்காரம்பாண்
டமதிலிட்டு, மடமாகமத்தித்துக்கூட்டியேஐயா மலையாமறப்பிசைந்ததனை
புண்டைசெய்வாய்நீ, படமானபசுமைநிறச்சவர்க்காரமாச்சு பரப்பிரமவஸ்
ததனைபணிந்துபூசித்து, திடமாகச்சிவபூசையோகஞ்சாதித்துத் திபவொ
ளிசோதிதனில்நேமஞ்செய்திடீரே (எ௱எ)

பிராணயபூசைஞானமூலம்.

செய்திடீர்வாசியைநீபிராணயமொட்டி செயகும்பரேசகம்பூரகமூம்
பாய்ந்து, கைதிடீர்கருணைபெறக்கமலவிதழ்தனிலே கைகுவித்தடிபணிந்
தருள்பெறவேமூட்டி, சைதன்னியவிலைகண்டுகும்பமலர்சாற்றி தாயான
மனோன்மணிபாதமர்ச்சித்து, முய்திடீர்சவர்க்காரஞ் செயசித்திபெறவே
மூலமுதலாறுவரைஞானப்பொருளோதே (எ௱அ)

ஓதவே-சிமயவ ஓம்-நீயுமென்று பூட்டுவாய்லட்சமுருஸ்தாபித்தா
லையா, வாதவேசித்தியதுமூத்தியதுவாகும் மவுனமெய்ஞ்ஞானமுதல்செ
பசித்தியாகும், சேதமொருநாளுமிதுவாராதையா செயமானசவர்க்காரஞ்
செப்பினேம்பாரு, பூதமேவைம்பூதபிறிதிவியினுலே பூநீராக்கைவிடவா
ராதுபாரே (எ௱கூ)

பிண்டசவர்க்காரம் சகதேவிதுருவம்.

பூநீரேகுருவொழியவேறென்றில்லை பூதலந்தனிலேசகதேவிதுருவ
ம், கானீரோயத்தேசமவெளுமைநிறப்பூமி கருதவேயக்கிரிசாரலடிவாரம்
தன்மாரிபொழியும்பனிவெகுதூரமையா செயமானசவர்க்காரஞ்செப்பி
னேம்பாரு, போநீரோயாமாகில்சாரலடிவாரம் புகழான சித்தராறுயிரம்
பேரே. (எ௱ய)

அடிவாரசித்தர் ஆறுயிரம்பேர்.

பேரானசித்தராறுயிரம்பேரும் பெருமையதாய்க்கிரியை விட்டிறங்
குவார்பாரு, வாரானநாற்றிசையுஞ்சூழ்ந்தங்குகூட்டி வாருவார்பூநீரைவச
ரித்தோரு, ஆரானயச்சார்புமலையடிவாரம் ஆறுகுளமேரியெதிர்வாயலது
களு, பேரானபூநீறுமெத்தவுண்டங்கே புகழாகப்புலத்தியனேவேணும
டையா, சூரானசுரக்குடுக்கைகொண்டுநீபோய் சுயம்பெறவேபூநீரை
யடுத்தங்குவாயே (எ௱யக

பூநீறுஆறுமாதப்பிண்டமாக்கறு.

எடுத்துஅதைநீயிருக்குமில்லஞ்சென்று இசைவானபிண்டத்திலிட்
டுநீதாக்கி, தடுத்தவாறுமாதங்கடுஞ்சூலுபாலன் தருவானபனிக்குடஞ்சவ
க்கைவாங்கி, கடுத்துநீகடுக்கான்கடுஞ்சுத்திசெய்து கருதவேபூநீறில்படி
யொன்றுகல்கை, வெடுத்துகவொள்ளாதேயதில்விட்டுநீகரைத்து விளங்க
வமூழுதுமொருநாள்தெளியவையே (எ௱யஉ)

பிண்டக்கருசவர்க்காரவுண்டை.

வைத்துமறுநாள்தனிலேதெளிவைவாங்கி மறுபாண்டங்கொண்டுநீ
வார்த்துநீ ஐயா, வைத்துமடுப்பேற்றியேபாண்டமதையும் தருவாகவை
த்துமேயெரித்திடுவாய்சாமம், பைத்துவதில்வாராது பாகதுபோலாகும்
பாகமதைக்கண்டுநீபாண்டமதையிறக்கி, ஐத்துமாறுமாதங் கடுஞ்சூலபால
ன் அடவாகவுருகுலையாதெடுத்துகுடல்வாங்கே. (எரமங

வாங்குவாயுள்மூலமூத்திரப்பையை மகத்தானபெருக்குடல்மலப்பை
யைவாங்கு, தாங்குவாய்பிச்சதின்சலப்பையைவாங்கு தருவானமண்ணி
ல்கவிச்சதனைப்போக்கு, பாங்குபெறக்கோணையதின் சவ்வதனைப்போக்கி
பானுவென்றரவிதனிலேசாகதுவாயுலர்த்தி, காங்குவாய்பல்லுரலில்மா
துபோலிடித்து கருவானமாத்தோண்டிவடித்துக்கொள்வாயே (எரமச

கொள்ளவேசீஷாவில்மாவனையிட்டுக் கூறுகவம்மாவில்சேர்கொண்
டுநீயும், மூள்ளவேமுன்சொன்னபூநீறுபாகை மூசண்டமாகவேகல்லுர
விட்டு, தெள்ளவேயிம்மாவைக்கூடநீசேர்த்துத் தேசிசெயநீரதிலேசே
கொண்டுவார்த்து, எள்ளவேயிருப்புலக்கையிற்கொண்டையா யிருசாம
டித்திடவேபிண்டக்கருவாமே (எரமரு

ஆமென்றபிண்டக்கருபிசின்போலாகும் அக்கருசீஷாவில் பதன
தாய்ச்செய்து, சேமென்றகருவதனில்சேரொட்டுக்கொண்டு சிவகங்கைமூ
றுசேர்கருவதனிலிட்டு, மாமென்றுமத்தித்துக்கூட்டிப்பிசைந்தக்கால்
கத்தானபிண்டசவர்க்காரமதுவாரும், ஊமெனறுசவர்க்காரமுண்டையத
ய்ச்செய்து உருட்டியேயுண்டை தலைப்பதனஞ்செய்வாயே (எரமக

மூலதியானம்.

பதனமதுசெய்துநீசிவயோகமேவிப் பண்பான்பிராணய வாசிதலை
யொட்டி, சதனமதுநேசகத்தில்சிங்கென்றுநாட்டி. சதுர்முகப்பரப்பிர
வொளிவதனிலேகி, வதனமதுவாய்வுயபானமேலேறி வருஷித்துக்கும்
த்துப்பூரகம்பாய்ந்தால், மதனமதுலேகியரிபோல்வருசிக்கும்பாரு வயக
சி-ஓம் ஸ்ரீறிமடவாய்செபிலட்சம் (எரம

அடவாகமேவுமிதுபூவைப்போல்தோற்றும் அறுகாகயங்கென்றுசெ
ரிசிப்பாய்த்தானே, அடவானபூமலர்கமலயிதழகாணும் அறிமென்றுபூ
த்துயர்ச்சிப்பாய்நீயும், திடமானமனோன்மணித்தாய்பிரசன்னமாம் பூவ
ன்று சவர்க்காரப்பிண்டமதைவைத்து, நடமாடும்தேவியைத்தியானம
லோத ஞானசித்திகைக்குள்ளாகுமிதன் குறியே (எரம

குறியானபிரிதிவியின் கூறினாலே குறிப்படுமண்டபிண்டமதின்கூறு
கும், சிறியானசிவவிந்துவூரறியப்போறார் சிறப்பானவாச்சரியநாதவிந்த
தனால், பிறியாதுவொருக்காலுமதியிதனைவிட்டால் பிரியுமோரவிபிசம்
பேசொண்ணாது, தறியானமடமட்டையுலகப்பேய்காணார் தசைவிந்துசுக்
கிலத்தின்தன்மையறிவாயே (எ௱௰௬

அண்டசவ்ர்க்காரம்-எட்டுத்திங்கள்பிண்டம்.

அறிவோர்க்குயின்னமொருசவர்க்காரங்கேளு அண்டசவர்க்காரமதி
னறிவதனைப்பாரு, பிறியாதமாதமதுயெட்டுதனிற்கேளு பேசவொண்ணா
க்கருவதனைப்பேசுவோநாமும், தெறியாதகருவப்பாவறியா ருலகோர்கள்
தெரியும்படியகத்தியனுந்தெளிவதனைச்சொல்வோம், குறியாகமுன்சொன்
னதுருசுமெழுகையாங்கூறினோம்பணவிடைதானெடுத்துக்கொள்வாயே.()

கொள்ளுவாய்குருசெயநீர்பணவிடைதான்வாங்கி குருவானமெழுக
தனைக்குழைத்துநீயப்பா,தள்ளுவாய்கருப்பற்றும்ஸ்திரீசாதிகெற்பந்தனை
க்கழட்டவுபாயமதாய்த்தருவிப்போம்பாரு,மெள்ளவேபேரீச்சம்பழத்து
ள்வைத்து விளங்கவேயுள்ளுக்குக்கொடுத்திடுமைந்தா, கள்ளமேயில்லை
யிதுகுருவாணைசொன்னேன் கைப்பாகம்பிசகாமல்கருவதனைவாங்கே ()

கெற்பக்கழட்டமருந்துகியாழம்.

வாங்கவேயொருநாழிசென்றதுவுமானால் வசனிப்போம்சிவகங்கை
சேர்கொண்டுநீயும்,தூங்கவேசட்டிதனிற்சலகங்கைவிட்டுத் துதிபெறவே
சுக்குவனைப்பலம்நருக்கிப்போட்டு, ஆங்கவேயடுப்பேற்றியதன்மேற்சட்
டிவைத்து அரைச்சேருசிவகங்கையாகுமட்டுமெரிப்பாய், ஏங்கவேயெரித்
ததனையிறக்கிவைத்து இயலானஸ்திரீசாதிக்குட்கொடுத்தே (எ௨௨)

ஐல்லிய வித்தை.

கொடுத்துவனநாழிக்குள்கடுஞ்சூலபாலன் கூறினோம்வீறிட்டுப்பூ
மிதனில்வீழும், அடுத்ததன்மேல்மாக்கருவென்னசொல்வோம் அதைவ
ழித்துச்சுணப்பாண்டில்பதனஞ்செய்து, இடத்தனமாய்த்திரியாதேசல்லி
யவித்தை யிதனாலேயாடுமடாயியம்பினோம்பார்,கடுத்துநீயில்லாதேகுரு
செயநீர்பலந்தான் கருவானமாககருவில்விட்டுமததித்தே (எ௨௩)

மத்தித்துயெக்கலாதேவியுடஇியானம்மண்டலமிருபோதும்வசனிக்
கக்கேளு, அத்தித்து-அங்-சிங்-அறிங்-உங்-ஐ-ஓ-யவசிமங-கிலியும்-சவ்வும்

வாவாதேவி, எத்தித்துயெக்கலாதேவியைத்தான்ஞெழுந்து இயம்பிஞேமி ருபத்தையாயிரஞ்செபித்து, வத்தித்துவந்துமுன்பூவைப்போற்றேன் மும் வாவாவாதேவியெனவசியங்கொள்வாயே (எ௨௪)

எட்டாந்திங்கள்.

கொள்ளுவாயெட்டாமாதக்கடுஞ்சூலபாலன் கூறுவோமதைக்கொண்டுசொல்லக்கேள்மைந்தா, நள்ளுவாயொருநாழிக் குள்ளேதான்கேளு நாவறண்டுவுயிரதுவும்போய்விடும்பாரு, அள்ளுவாயதைக்கொண்டுகத்தியிஞற்கீறி அதன்குடல்மூத்திரப்பையைநீவாங்கி, மள்ளுவாய்மலப்பையும்பிச்சுசவ்வும்போக்கி மகத்தானகோமாயதினஞ்சதுவுமவாங்கே (எ௨௫)

நாட்டுசலசுத்தி.

வாங்கியேநாட்டுசலங்கொண்டுசுத்திசெய்து வளமானபொட்டிலுப்புடிகாரவுப்பு, தாங்கியேகறியுப்புமூன்றுப்புங்கொண்டு தருவாகத்தூளாக்கிமஞ்சள்தூக்கி, ஆங்கியேயதன்வாயிலுப்புத்தூளிட்டு அடவானவயிறதனிற்றூளுமிட்டு, நாங்கியேதம்பகஸ்தூரிகந்தகம் நவிலுவோமுட்கொண்டுபூசிட்டாயே (எ௨௬)

பரிமளவாடை.

பூசியேமணிதருட அரவம்படாதபூமிதனில்வைத்துரவிசரகுலரச்செய்து, பாசியேகல்லுரவிலிட்டுமைந்தா பருத்தயிருப்புலக்கையதனுலநீசாடு தாசியேமுச்சாமஞ்சாடிஞலயா சம்பிரமதாகவேயண்டமாத்துளாம், வாசியேவடிகட்டிமாவதனையெடுத்து வளமானசொவிற்பதனஞ்செய்யே (

அண்டமாக்கரு.

பதனமதாய்ச்செய்துநீயண்டமாத்தூளில் பண்மைபெறச்சேர்கொண்டுமாவதனையெடுத்து, விதனமதாயிராதேமுன்சொன்னபாகில் விளம்குவோமுன்றுசேர்விபரமதாய்க்கொண்டு, கதனமென்றகல்லுரவிலதனையிட்டுக் கைபாகமாக்வேகுருசெயநீர்சேர்தான், அதனமதாய்முச்சாமஞ்சாடிஞயா அண்டசவர்க்காரமெனும் பிசின்போலாமே. (எ௨அ

அண்டப்பிசின் அண்டசவர்க்காரம்.

ஆமென்றசவர்க்காரப்பிசின்தனைத்தானும் அருளுவோஞ் சொவிற்பதனஞ்செய்தையா, வாமென்றஅண்டக்கருவிதற்கெதிருண்டோ வசப்போமிக்கருவில்மூன்றுசேர்கொண்டு, போமென்றபாண்டத்தில்கருவனையிட்டுப் பெருமைபெறவூசிசெயநீருசேர்வார்த்து, கோமென்றுகாமஞற்கூட்டிமத்தித்தால் கூறுலோமண்டசவர்க்காரமிதுவாமே (எ௨௯

பிண்டசவர்க்காரவைப்பு.

மித்துவான சவர்க்காரப்பிசினைத்தானும் மேலானவுண்டைய துவிளங் காய்போலச், சிதறுமற்செய்துநீயுடையதாய்ச்செய் துசிவயோகவாசிகொ ண்டிழுத்துப்பூசிப்பாய், வதுவானரோசகமுனைசுழிபிலையா வங்கென் றுபர ப்பிரமவொழிவதனிலேகி, நதுவானகும்பகம்பிராணயமொட்டி நங்கென் றுபூசித்துயர்ச்சிப்பாய்தானே (எ௩0)

அர்ச்சித்துஅண்டசவர்க்காரவைப்பை அனுதினமுமாயிபதமவள்ப தமேவைத்து, பர்ச்சித்துவவள்பதமேபணிந்திட்டாலையா பரமபதமுனக் களிப்பாலவள்தான்பாரு, துர்ச்சினவுலகதுறமாற்கரறிவாரோ துதிபெற லாமணடசவர்க்காரமதனுலே, வர்ச்சித்துச்சவர்க்காரவுண்டையதைத்தா னும் வசனித்தோம்பதனமதாய்ச்செய்திடீரே (எ௩க)

மலைப்பாடிதுருகம்.

செய்திடீர்புலத்தியனேயின்னமொருகாரஞ் செயலானபிண்டமதின் சவர்க்காரவைப்பை, மைதிடீர்நாம்சொல்வோம்நாட்டிலேகேளு நலமான கிரியொன்றுமலைப்பாடிதுருகம், மைதிடீரதில்வாழுஞ்சித்தரவர்கேளு மக் களையவர்பெருமைமனிதறிவாரோ, எய்திடீரோழாயிரம்பேர்களையா இறங் குவார்கிரிவிட்டுயின்னஞ்சொல்வோமே (எ௩உ)

மஞ்சள்நிறப்பூமி.

சொல்வோம்நாமக்கிரிமலையடிவாரஞ் சொற்பெரியகுளமடுக்கள்தா னுண்டு, அல்வோம்நாம்குளமேரியெதிர்வாயில் அலர்ந்தசெந்தாமரைய துமகிமைமெத்த, கல்வோம்நாம்புலத்தியனேயம்மலைராச்சியம் நலமானம ஞ்சணிறப்பூமியதுவாகும், சொல்வோமேயம்மலைராச்சியந்தன்னில்செய லானகருவேங்கையதுமகிமைகாணே (எ௩௩)

பூநீறுநாதம்.

காணுநீகருவேங்கைப்புலியதுவுமாகில் காணார்களுலகமதில்மானிட ர்கடானும், சேணுநீசித்தரவர்கானுமவராகில் செயலானயக்கிரிச்சாரலடி வாரம், தோணுநீசிறியாநங்கையதனைகம் தேவிநாதசத்திப்பூநீறுவிளையும் ஆணுநீடங்நீறுபூநீறுநாதம் அப்பூமிநாதமதினருடனைப்பாரே (எ௩ச)

பாருநீசித்தரோழாயிரம்பேரும் பண்மைபெறுஞ்சித்தரையில்கிரிவிட் டிழிவார், ஏருநீகிரிவிட்டுப்பூநீறுநாத மெடுப்பார்கள்நாற்றிசையுஞ் சூழ்ந் தங்கேயைந்தா, சூருநீசுணாக்குடுக்கையதனிற்பூநீரை சோரவதிற்பூநீறு

டைத்துக்கொண்டையா, வாரிநீயெடுத்தங்கனேமலேப்பாடிதருகம் வச
னித்தோங்குகையேகிச்சொல்லுவார்பாரோ .(௭௩௫)

மூன்றுதிங்கள்பனிக்கும்.

பாரப்பாபுலத்தியனேயின்னங்கேளையா பரிசுடையபூநீற்றை வேண
மட்டுங்கொண்டு,சூரப்பாசுணாக்குடுக்கையதனில்ரொப்பி சிவயோகக்குகை
க்குநீசென்றங்குயேகி, மாரப்பாபாண்டமதிற்பூநீற்றையிட்டு மகத்தான
மூன்றுதிங்கள்பனிக்குடங்களேறு, மூரப்பாமுன்சொன்ன தருசுமெழுகூ
ட்டி முலைமாதர்க்கியாமற்பனிநீரைவாங்கே (௭௩௬)

வாங்கியேபாண்டத்திலன்னீரைவிட்டு மத்தித்துக்கூட்டிகரவளமா
ய்க்கரைத்து, ஆங்கியேயங்காள்முழுதுந்தெளியவைத்ததனை அருளினேம
றுநாளில்பாண்டமதையெடுத்துநீ,தூங்கிநீதிரியாதேயத்தெளிவைத்தாலு
ந துதிபெறவேமறுபாண்டந்தெளிவிறுத்துநீ, தாங்கியேயடுப்பேற்றியது
மேற்பாண்டம்வைத்து தணல்மூட்டிமுச்சாமமெரித்திடுவாய்நீயே (

எரித்துயப்பாண்டமதையிறக்கிவைத்ததனை இயல்பாகவாறின லது
பாறையாகும், மறுத்துநீயெடுத்ததனைக்கல்லுாலிலிட்டு மகத்தாகமுன்
சொன்னமாக்கருவையா, தரித்துநீயிரண்டுசேருால்தனிலிட்டுத்தளமாகத்
தேசிசெயநீருசேரொன்று, குறித்துநீவிட்டதிலேயுலக்கைகொண்டைய
கூறுகமுச்சாமஞ்சாடுவாய்த்தானே (௭௩அ

சாடவேபிசின்போலவருதலாகும் சார்பாகவதைக்கண்டு தோண்டி
யெடுத்ததனை, ஆடுவாயண்டமதிலிட்டுநீயப்பா அருளினேன்குருசெய
ருசிசெயநீர்தான், வாடவேயொவ்வொன்றுசெயநீர்பலமாறு வசனித்தே
ம்பாண்டமதில்வளமாகவிட்டு, நாடவேமத்தித்துபிசைந்ததனையையா
வியிலனைச்சாமம்வைத்திடீர்தானே (௭௩

ஆறுதாரபூசைஅட்டமாசித்திமூலசுழிவாசிபதம்.

வைத்திடவேசற்போலாம்பிண்டசவர்க்காரமதையெடுத்துவுண்ண
யதாய்ச்செய்திடீரையா, ஐத்திடவேபிண்டசவர்க்காரமதுவர்ச்சு அரு
னேம்பதனமதாய்வைத்துநீர்பாரீர், கைத்திடவேபிராணயவாசிதனையெ
ட்டி கருணைபெறரேசகமங்கென்றுநாட்டி, மூத்திபெறமூலசுழிமூனைய
குநின்று மூலமுதலாறுவனைபூசிப்பாய்தானே (௭௪

பூசித்துநயனமிருமனக்கண்ணைலொட்டிப் பூரணமாம்வாலைமனோ
மணிபாதம், ஆசித்துவவள்பதமேதெரிசித்தாயானால் அட்டமாசித்தியு
க்கருளுவார்பாரு,பேசித்துத்தவப்பொருளிருந்தநேயாகில். பிண்டசகர்

காரமதுசித்தியதுவாகும், மூசித்துயதுசாருபமுனக்கெய்தும்பாரு மூலசு
ழிமுனையருகில்வாசியதுகாணே (எசுக)

காணுநீபிண்டசவர்க்காரஞ்சொன்னோம் கருணைபெருஞ்சித்தர்களே
கைலாசமுத்தி, காணுநீவாசிபதங்கண்டதேயாகில் நால்மறையில் கருவி
னுடகுருவினருள்காண்பாய், ஆணுநீபுலத்தியனேயதுவப்படியென்றால்
அருளுவோமின்னமொருசவர்க்காரங்கேளு, வாணுநீபிறிதிவியின் வலு
மையினாலே வஸ்துவுடமகிமைதனைவசனிப்போங்கேளே, (எசுஉ)

பத்மினிசாதியில்நாதம்வாங்க.

வசனிப்போம்பிரமகுலவங்கிஷந்தன்னில் வடிவானபதிவிருதா பத்
மினிசாதி, அசனிப்போம்சாதிதலைச்சனதுவாகும் அடவாகப்பந்தானுள்
மெத்தநன்று, கசனிப்போங்கன்னியுடநாதமதைக்கழட்ட கருதுவோம்வீ
ரமெழுபணவிடைதான்கொண்டு, நசனிப்போம்புளியாரையரைத்துவரை
ப்பலந்தா னதற்குள்ளேமெழுகதனைநவிலுவோங்கேளே, (எசுஙு)

கேளப்பாபுலத்தியனே மெழுகதனைக்கொண்டு கெடியாகவதிகாலை
மூட்டியையா, வாளப்பாயவ்வுண்டையுண்டுவனாநாழி வளமாகக்கெடுவீத
மாறலதுகேளு, சூளப்பாமுன்சொன்னசுக்குக்கியாழம் துடியாகவுள்ளு
க்குக்கொடுத்திட்டுநீயும், ஆளப்பாவதனபிறகுபுலத்தியனேகேளு அருளு
வோங்குய்யபீடம்பீங்கான்வைகக்சொல்லே (எசுச)

புவனைமும்மூலத்தியானம்நாதக்கரு.

சொல்லவேபீங்கான்வைத்திட்டாலையா சொரியுமதுவருவிபோல்நா
தவிந்தையா, அல்லவேயவ்விந்துசொரியுமதன்பிறகு அப்பீங்கான்வாங்கி
யொருசீஷாவிற்கேளு, நல்லவேநாதமதைச்சீஷாவிலிட்டு நவிலுவோம்பு
வனையுடமும்மூலத்தியானம், உல்லவே-ஓம்-றீயும்-அவ்வும்-உவ்வும்- நவ்
வென்றுவுருவேட்சஞ்செபிப்பாயே (எசுரு)

செபித்துநீபுலத்தியனேசொல்லக்கேளையா செப்புவோம்பற்பினிக
ளைவந்துளய்தும், அபித்துமுன்சொன்னதொருசிவகங்கையதனி லாறுப
லங்கொண்டுபசும்பாலரைப்படிதான், ஒபிதது அதையொன்றாகக்கலந்துவு
ள்ளுக்கு ஓ கோபார் கொடுத்துவிடக்களைதெளியும்பாரு, தபித்தமொரு
முன்சொன்னமாக்கருசேரண்டு தருவானபாகுசேர்சரிவிதமாய்த்தானே()

சவர்க்காரவுண்டை.

தானானகல்லுரவிரண்டையுமிட்டுத் தருவானபத்மினிநாதமதுசே
ர்தான், வேனுநவிட்டதிலேயிருப்புலக்கைகொண்டு விசிதமதாய்முச்சா

ம்விளங்குவாய்பாரு, காணுகக்கருப்போலாமப்பாகங்கண்டு கருணைபெற
ாதகருசிஷாவிலிட்டு, தானுனதுபதியமதுகொடுத்து துதிபெறவேயதில்
சேரிவண்டுவாங்கே (எசள)

வாங்கியேபாண்டமதில்கருவைவிட்டு வளமாகக்கிளிசெய்நீர்பனிர
ண்டுபலந்தான், ஆங்கியேயக்கருவினரிைவிட்டு அருள்பெறவேமத்
தித்துக்கூட்டிநீவாங்கி, நாங்கியேரவிழுகமிருகாழிவைத்தால் நவிலுவோ
மதன்கசிவுர்த்தம்போலிறங்கும், தாங்கியேபாண்டமதிறகசிவையிறுத்துத்
தருவாகவுண்டையதாய்சசெய்திடீராமே (எசஅ)

ஆமப்பாபுலத்தியனேநாதசவர்க்காரம் அதனுடையமகிமைதனையா
ரறிவார்பாரு, ஓமப்பாசொல்லிவிட்டோம்சிவயோகஞ்சென்று ஒருமித்து
வாசியதைப்பிராணயமொட்டி, வாமப்பாவங்கென்றுகும்பகம்நாட்டி வச
னித்தோஙகும்பித்துத்தம்பிததாயானல், கோமப்பாவாமப்பால்வழிந்தரு
விபாயுங் குருபூசைபங்கென்றுதெரிசிப்பாய்தானே (எசகூ)

தானென்றகுருவினுழ்கண்டதேயாகில் சவர்க்காரசித்தியதற் கெய்
துமதுபாரு, நானென்றகுருமொழிதான்யோகிகட்கையா நளினமதாய்ச்
சௌமியமாய்நண்பாகச்சொன்னேம், ஏனென்றவிந்தமொழியாகவெயது
ம்பாரு என்போலமனமுடையோர்க்கெய்துமின்னூல்தான், மானென்ற
மொழியுடையோரறிவாளியாகில் மவாக்கெய்துமொன்றுணசேதியிதுபா
ரே (எருய)

வைசியகுலம்-மீனராசி-சுவாதி புருஷர்
விந்துவாங்கயிடுமருந்து.

பாருமிதினுலுடையபெருமைதனைக்கண்டோம் பாடினேம்நாதசவ
ர்க்காரமதைச்சொன்னேம், ஆருமறியார்களிந்நூல்பொருளையேகாணு
அசடர்மெத்தவுலகமதிலனேகம்பேருண்டு, கூறுமவரோடேயொருநாளு
ஞ்சேராதே குரும்பர்சண்டாளருடபேச்சுங்கேளாதே, தேறுஞ்சிலயோகி
யுடமறுமமதையறியுந் தெளிவதற்கவருடையதிறத்தையறிவாயே (எருக)

திறமானகாரமிதுசாரமிதுபோலச் செகந்திலேமனிதரறியார்களிது
பாரு, வறமானவைசியகுலமீனமதின்ராசி வசனித்தோஞ்சோதிசுக்கிரவி
யாழமாகும், பரமானபங்குனிசோமசூரியனும் பண்ணைபெறுயிந்திரனுட
பார்வையதுகேளு, சரமானவங்காளில்வைசியகுலபாலன் சமபிரமதாயுற்ப
விக்குஞ்சைதன்னியங்கேளீர் (எருஉ)

சைதன்னியமென்றபதினுறுவயதானல் தருவாகயவனைநீநல்லகுண
மாக, சைதன்னியகுருபீடங்கொண்டுமேயேகித் தாயானமனேன்மணி

ந்சயதனில்தான், கொன்னியமென்றவனாநீகொண்டுசென்று கூறினோமா
ன்தமாம்பூசைதனிலே, கன்னியமாம்பூரணதிசெந்தூரங் கருதவேபணவி
டைகொண்டுநீகேளே (எ௫௩)

கொண்டுசெந்தூரமதைமுன்சொன்னமெழுகு குருவான்மெழுகதனி
ல்பணவிடைவாங்கி, செண்டுசெந்தூரமதைமெழுகினில்வைத்துச் செய
லானபுளியாரைத்துண்டையதற்குள், கண்டுகைபாகமாயவரைநீயுழைத
துக் கருதவேயுள்ளுக்குமெள்ளக்கொடுப்பாய், வண்டுநீகொடுத்தலாழு
ன்சொன்னஇயாழும் மைந்தனேகொடுத்துவிடுவளமாகத்தானே (எ௫௪)

சலவிந்து.

கொடுத்துஞானாழியதுசென்றதேயானால் கூறுவோமண்யுட் கார
வைத்துப்பீங்கான், அடுகததபீங்கான்வைத்து அடுத்தடவாகக்கேள் அந்
லியதுமலசலம்போல்குடிக்குபெனய்பாயும், வெடுத்தமொருவிந்தவுமணி
ரிட்டுப்பாயும் விளக்கினேம்விந்ததனில்சிவமுப்புச்சுண்ணம் தடுத்துஅ
ரைபணவிடைதானிட்டீரானால் சைதன்னியசுத்தசலம்விந்துவாமே ()

ஆமென்றவிந்ததனைச்சீஷாவிலிட்டு அடனானதேவியுடபூசைசெய்
கப்பா, மூமென்றமுன்சொன்னமாக்கருவையா மூர்க்கமதாயச்சேரவேகே
ல்லுறவிட்டு, பாமென்றபூநீறுபாகுசேரண்டு பண்மைபெறக்கூட்டிசே
ர்த்துமேவையா, வேமென்றவிந்துசேர்விட்டதிலேநீயும் விளங்கவேயிரு
ப்புலக்கையதுவுமாமே (எ௫௬)

கசிவிறுக்க.

அதுவாகமுச்சாமஞ்சாடியதைத்தோண்டி அன்பானபாண்டமதிலி
ட்டுக்கேளு, விதுவானகுருசெயநீர்தேசிசெயநீர் விதம்பலமஞ்சுவொவ்
வொன்றாய்க்கொண்டு, பதுவானபாண்டத்திலிட்டுநீயப்பா! பண்பமைபெற
மத்திததுக்கூட்டிப்பிசைந்து, கதுவாகரவியிலரைச்சாமம்வைத்ததனை நல்
லகசிவிறங்கிவிடும்நவிலுவோங்காணே (எ௫௭)

காணுநீகசிவதனையிறுத்து விட்டையா கருணைபெற வுண்டையத்து
செய்திடீர்தானும், நானுமிந்தப்படியாகவிந்துசவர்க்காரம் நன்பாகச்சொ
ல்லிவிட்டோம்பாருமிதுமைந்தா, தோணுமதுசிவயோகஞ்செயுங்காலத்
தில் துதிபெறவேவிந்துசவர்க்காரமதைவைத்து, பேணுநீபிராணயவாசி
யதையொட்டிப் பெருமைபெறச்சிக்கென்றுகும்பிப்பாய்தானே (எ௫௮)

தானென்றரோசகந்தம்பித்தாயானால் தாயானமனோன்மணி தனிலே
யைக்காண்பாய், நானென்றபெருமையதனுவிதைச்சொன்னோம் நா த

லேஞானிகளேநண்பாகச்செய்வீர், தேனென்றமொழியதனாற்சொல்லினா ம்விட்டோம் தேசமதிமவுனிகளேசெயமாகப்பாரும், வானென்றவிந்துச வர்க்காரமதல்லையர் வாலைமனோன்மணியினுடபூசையதுசெய்யே(எ௫௯)

வாலைபூசைமிதுன்ராசி.

செய்துபார்சென்மராசிபலனிருந்தால் சித்திக்குமித்தொழில்கள்செ யசித்தியாகும், மைந்துபார்விட்டகுறைதொட்டகுறையாகில் நவிலுவோ மிந்தப்படியிருந்ததேயாகில், சைதுஞ்சைதன்னியப்பொருளிதுவேயாகும் சாமீபசாரூபசாயுச்சியம்பெறுவாய், பெய்துமிதுசாலோப மிதுனமிதின்ரா சி யியம்பினோம்விந்துசவர்க்காரமிதுவர்ச்சே (எ௬0)

ஆச்சென்றவிதன்பெருமையாரறிவார்மைந்தா யவனிதனில்சிவயோ கியவரறிவார்பாரு, கோச்சென்றமிருசெயினானுகிறகத்தினாலேகூறினோ ம்சௌமியசாகரமிதாகும், வேச்சென்றதிந்நூலையார்க்குமீயாதே விவேக வானறிவாளியவர்க்கீயுமிந்நூல்,வாச்சென்றகழுதைமாந்தருக்கீயந்தால் வ ருகுமண்டயிடியுந்தலைசிதறுமதுவென்றே (எ௬௧)

சரக்குவைப்புமுறைசீனக்காரவைப்பு.

அன்றானயஞ்சுவிதசவர்க்காரஞ்சொன்னோம் அருளுகிறோம்வைப் புமுறையதிதமிதுவாகும், சென்றானசீனக்காரமதின்வைப்பு செகத்திலே யாரறிவார்சிவயோகிகாண்பார், தென்றானவிவ்வைப்புநானுமினைதச் செய் தேன் தெளிவானபுலத்தியனேசெப்பும்வகைகேளும், பன்றானபாறையுப் புபடிக்காரவுப்பு பருங்கம்பிபொட்டிலுப்புவிதுநாலுஞ்சேரே (எ௬உ)

சேர்த்துயிதைக்கல்லுறலிலிட்டுச் செவகங்கைசெப்பும்வகைசேரொ ன்றுவார்த்துநீயப்பா, கார்த்துநீயிருசாமஞ்சாடினாலப்பா கருப்பற்றுமதின் சினக்கைபாகக்காண்பாய், நார்த்துசலமதனாலேசாமமிகமாட்டி நலமான குருசெயநீர்சேர்கொண்டுவையா, வார்த்துநீகல்வமதில்மறுதரமுஞ்சாமம் மைந்தனேயாட்டிவழித்திடுவீரதுபாரே (எ௬௩)

பாருமிக்கொருபாண்டமதனிலிதைவைத்து பண்மைபெறுமேற்சல சச்சீலையேழுஞ்செய்து, ஆருமிதையறியாமற்குழிதோண்டியெருவை யத ற்குள்ளேபாண்டமதையருள்பெறவேவைத்து, மேருபதினொருவடுக்கிக மாதியக்குகையில் மேன்மைபெறவாலையுடதியானமதைச்செய்வாய், மா றுமதின்மண்டலம்பாண்டமதுவிருந்தால் மகத்தானசீனக்கார வைப்பது தானுச்சே (எ௬௪)

வைப்பானசீனமதுபூர்த்துவைப்பாகும் மப்பாகங்கண்டுநீபாண்டம தையெடுத்து, கைப்பானகவசமதுசீலையேழும்வாங்கிக் கருணைதருஞ்சின மதைச்சீஷாவிலிட்டு, செப்பான-சிறி-அறி-மென்றுவுருலட்சம் செபித்த தனைச்சித்திபெறமுத்தியுண்டாக்கி,மப்பானபிராணயவாகியதையொட்டி வங்கென்றுயிழுத்துநீதெரிசிப்பாய்தானே (௭௬௫)

வெண்காரவைப்புவகை.

தானென்றவெண்காரவைப்பதனைக்கேளு தாரணியிலாரறிவார்தவ சிகள்தான்காண்பார், வேனென்றபிறிதிவுதான்பூமியுடனாதம் விளங்குகின் றநாதமடாபூநீராகும், கானென்றகாரமதுசாரமதுவாகும் கருவாகுக்குரு வாகுருகுருலவதுவுமாகும், தேனென்றதெளிவாகுமத்தெளிவினாலே தேறி னதோர்கல்லுப்புதேசியதுவாமே (௭௬௬)

வெண்காரப்பலகை.

வதுவானகல்லுப்புசிலவுப்புகேளு மகத்தானவழலையடா மறியுப்பு மூன்று, ஒதுவானவொவ்வொன்றுசேரதுதானகொண்டு ஒருமித்துக்கல் லுரலிலிட்டுநீஐயா,ச்துவானசிவகங்கைதேசிசெயநீருசார்வாகவொவ்வொ ன்றுபலமாறுவாங்கி, கதுவானவுரல்தனிலிருநீரும்விட்டுக் கருணைபெற மூச்சாமமிடித்துநீசாடே (௭௬௭)

சாடயிலேகருப்போலமாக்கருவைத்தோண்டி சம்பிரமதாய்ப்பாண் டமதிலிட்டுநீதாக்கி, ஆடயிலேசிவசத்திருசேருவிட்டு அப்பாண்டமதி லிட்டுக்கனைத்துநீயப்பா, மாடயிலேயடுப்பேற்றியக்கினியைமூட்டி வள ாகயிருசாமமெரித்திடாய்பாரு, வேடயிலேயோர்கொதிகொதிக்குமதுபா ந விளங்கினேம்பாண்டமதையிறக்கிநீவையே (௭௬௮)

வைத்ததனையண்டச்சில்சாய்த்தேயானல் மருவிப்பாய்ந்ததுபோ லையருவியதுபாயும்,வைத்ததனையிருநாழிசென்றெடுத்தாக்கால் பண்மை பறும்வெண்காரப்பலகையதுவாகும், நைத்ததனையிப்பலகைகொண்டுநீ யையா நலமானசிவபூசைசெய்திடீர்தானும், கைத்துவதின்வெண்காரப்ப கைதனைக்கொண்டு கருதவேபதனமதாயவைத்திடீர்காணே (௭௬௯)

பூரவைப்பு

காணப்பாவெண்காரவைப்பதனைச்சொன்னேன் கருதவேபூரமதின் வப்பதனைக்கேளும், நாணப்பாசொல்லுகிறேன்நாம்வெளியதாக நலமா சௌமியசாகரமின்னூலில், சேணப்பாசினகாரஞ் சேரொன்றுதானும் சயலானவெண்காரஞ்சேர்கொண்டுநீயும், வாணப்பாசிவவுப்புபலமாறு காண்டு வசனித்தோமிதுமூன்றுங்கல்லுரலிற்குக்கே (௭௬௬)

ழெ

மாவைபிரமகுலநாதம்

தாக்கியேபிரமகுலநாதவிக்கையா சைதன்னியநீரதிலேசேர்கொண்டுவார்த்து, ஆக்கியேமாவதுபோல்தூளதாயிடித்து அம்மாவைக்கொண்டுவொருபாண்டத்திலிட்டு, நாக்கியேகுருசெயநீர் சிலகெங்கையிரண்டும் நவிலுவோமொவ்வொன்றுக்காறுபலந்தூக்கி, பார்க்கியேபாண்டமதிலிந்நீணாவிட்டுப் பண்ணமபெறமத்தித்துக்கூட்டியதைக்காணே (௭௭௧)

கலசம்-தானியம்.

காணவேவய்ந்தக்கொண்டுகலசமதிலிட்டுக் கருவானபண்டமெழுகவசமதுசெய்து, சேணவேசீலையதுநீயேழுஞ்செய்து செயலாகமறுபாண்டஞ்செயம்ாகக்கொண்டு, மாணவேமணக்கத்தைநெல்லதுதான்கேளு வளமாகயிருபத்தைந்துபடிநெல்லு, ஏணவேயிட்டதனில்சலமாறுபடித்தான் இயல்பாகவார்த்ததனிற்கலசமதைவையே (௭௭௨)

மாவிற்கு.

வைத்துமேவடுப்பின்மேற்பாண்டமதைவைத்துமாவிற்குகொண்டு நீயிருசாமமாகில், எத்துபடயெரித்துதணவிருசாமமூட்டி என்னசொல்வேன்பூரவைப்பதுவுமாகும், மத்துபெறவித்ததனைப்பாண்டமதையிறக்கி மடவானகலசமதின்சீலையதைவாங்கி, புத்துபெறப்பார்த்திரோ யாமாகிலையா பூரவைப்பிதற்கிடோபுனிதமிதுவாமே (௭௭௩)

பூரவைப்பின்பெருமை.

புனிதமென்றும்பூரமதைச்சீஷாவிலிட்டுப் பூரகக்கட்டநீவாசியதைக்கொண்டு, உனிதமெனும்உங்கென்றுதம்பித்தாயாரால் உறுதிபெறப்பூரமதுசித்தியதுவாகும்,வனிதமெனும்வங்கென்றுரோசகமொட்டி வாலைமனோன்மணியினுடபூசையதுசெய்து, கனிதமெனுங்கருணைபெறப் பூரகமதற்கையா கைதொழுதருள்பெறவேகருதுவாய்த்தானே (௭௭௪)

கருதுமதின்பூரகத்தின்வைப்பின்பெருமை காணார்களுலகமதிற்கசடரவர்கேளும், விருதுபெறும்பூரமிதைவிட்டா லொன்றுமாகா விசையானவேதைக்குப்பூரமிதுவேணும், வருதுமிதுவழலைக்குமிப்பூரம்வேணும வளமானமுப்பூவுக்கிப்பூரம்வேணும், சருதுமிதின்சாரத்துக்கிப்பூரம் சவர்க்காரமிதற்குமிப்பூரந்தானே (௭௭௫)

தானென்றமுப்பூவுக்கிப்பூரம்வேணும் சார்வானசெயநீருக்கிப்பூரம் வேணும், மூனென்றவாசியதற்கிப்பூரம்வேணும் மூலவனாயாறுக்குமிப்பூரம்வேணும், தேனென்றதிராவகத்துக்கிப்பூரம்வேணும் செயலானச

ண்ணமதற்கிப்பூரம்வேணும், சேனென்றகற்பமதற்கிப்பூரம்வேணும் செ ந்தூரமிதற்கெல்லாமிப்பூரந்தானே (எஎசு)

தானானதொழிலெல்லாமிப்பூரத்தாலே தருவானசித்துகளுமிப்பூரத் தாலே, நானானஞானமதுமிப்பூரத்தாலே நலமானமவுனமதுமிப்பூரத்தா லே, கோனானயோகமதுமிப்பூரத்தாலே குருவெல்லாமிதனாலேகூறினே ம்பாரு, கானானகாயசித்தியிதனாலேதானும் கனயோகமிதனாலேகருவுமித னாலே (எஎஎ)

நாலானசதாகோடிவித்தையிதனாலே நவகோடிசித்துகளும்பூரமித னாலே, வேலானவேதமறைபூரத்தினாலே விளங்கினேமந்திரசித்துமிதனா லே, கோலானபூரமிதைக்கைவிடலாகாது கூறினேன்கைவிட்டால்குருசி த்தியில்லை, மாலானமப்பூவுமுப்பூமதனாலே வசனித்தோம்பூரத்தின்வை ப்பிதுவுமாச்சே (எஎஅ)

ஆச்சப்பாபூரமதின்வைப்பிதோசொன்னேம் ஆரறிவார்வையகத்தி லாருமறியார்கள், பேச்சப்பாவெறும்பேச்சுபேணியேதிரிவார் பேரின்ப சாத்திரமிதின்மகிமையறியார், வேச்சப்பாவெறும்பேச்சாய்வேடங்கள்பூ ண்டு வேதாந்தியவர்போலவிளங்குவாரையா, வாச்சப்பாயனேகம்பேருல கமதிலுண்டு மயக்கியேதிரிவார்கள்வைப்பையறியாரே (எஎகூ)

குருவின்மகிமைமவுனகேசரக்குளிகை.

அறிவானகுருவதனைச்சொல்லக்கேளையா ஆரணியிலெளியோர்போ லதிதமாய்த்திரிவார், வறிவானவுலகமதில்பிச்சையுண்டெடுப்பார்மாய்கை யிலேயதிதமதாய்மாராட்டஞ்செய்வார், குறிவானகுருவவர்தா னவர்மகி மைமெத்த கூறினேன்காணரிதுகண்டதேயாகில், மறிவானமையதனைத்தி லர்தங்கொண்டையா மவுனகேசரக்குளிகைபாய்வாரவர்தானே (எஅ0)

கருநாய்மை.

அவரானயவர்மகிமைகாணவொருமைதான் அருளுகிறேன்புலத்தி யனேயன்பாகக்கேளும், சவரானதலைச்சனுடகபாலவோட்டையா சைதன் னியமாகவேபெருநாட்டாய்க்கொண்டு, கவரானகருநாயின்பிச்சதின்கண் ணும் கருதவேயதனுடையகொழுப்பைமிகக்கொண்டு, பவரானநாலுகன சட்டிதனிலிட்டுப் பனிநீருபலஞ்சட்டிதனில்மிகவும்வாரே (எஅக)

வார்த்ததையடுப்பேற்றியேசட்டிதனைவைத்து வளமாகயேரழிஞ்சிக் கம்பதனாலையா, ஆர்த்துவதினக்கினியைமூட்டியொருசாமம் அடவாகப்பு த்தியனேயதைநன்றாய்க்கருக்கி, நீர்த்துஅதைநீறுக்கிப்பாகமதாய்க்கொ

ண்டு நிமிஷத்திலெடுத்ததனைப்பிங்கானிலிட்டு, சேர்த்துநீசிவசெந்தூரபூ
பதியே செணத்திலேவிராகனெடை பிங்கானில்தாக்கே (எ௮௨)

தாக்கியேகுருசெயநீர்சேர்கொண்டுமிட்டுத் தருவாக மத்தித்துக்கூ
ட்டிக்கரமதுவால், ஆக்கியேயசெம்புவகல்தனிலேவார்த்து அடவான
செந்தாமணாநூலைத்திரியாக்கி, மாக்கியேயக்கருவில்தோய்த்துநன்றாக வ
சனித்தோஞ்செப்பகதில்திரியதனையிட்டு, நாக்கியேதீபமதையேற்றிமிக
ன்றாய்நவிலுவோங்கபாலவோடதனின்யேற்கவிழே (எ௮௩)

கவிழ்த்துநீயிருசாமந்தீப்மதையையா கருணைபெறவேற்றியேயெரி
த்தாயேயானல், அவிழ்த்துமேயவ்வோடுஅதன்மேலேவைதான் அருளி
னேம்பற்றுமதுமையினுடபெருமை, தவிழ்த்துயதைவழித்துமாங் கொம
ம்புபாண்டியில்தான் தருவாகப்பதனமதாய்வைத்துநீகேளு, பெவிழ்த்து
நீயிராஜயவாசியதையொட்டிப் பேறாக-ஒங்-சிங்-அறியும்ஐயுமென்னே ()

மை.

என்னவேயிவ்வெழுத்தோதவேகாலு மியம்பினேம்லட்சமுருசேசக
முமொட்டி, நன்னவேகும்பித்துச்செபித்துமிகப்பாரு கலமானகருநாயின்
மைசித்தியாகும், புன்னவேபூவைப்போலங்கனேதோற்றும் பூசித்துவா
லையைத்தெரிசிப்பாய்நீயும், கன்னமொழிமாதுசிரோன்மணிவாலைதானும்
கனவசியமாய்விடுவள்கண்டுநீபாரே (எ௮௫)

கண்டுநீதூபதீபமதுகொடுத்துக் கருணைபெறக்கருநாயின்மையதனை
க்கொண்டு, சென்றுநீசிவகெங்கைபணவிடைதான்வாங்கிச் செயலான
கைமயதனையுஞர்ந்தின்வீதமெடுத்து, துண்டுபோகாமலேமந்திரத்துக்குழை
த்து அதிபெறலேஸ்ரீறிமென்றுநூற்றெட்டோதி, வண்டுநீநெற்றிதனில்
திலர்தக்கொண்டையா வளமானநகரோகியேநீயேசெண்ணே (எ௮௬)

சென்றுநீபோவதற்கின்னமொன்றுகேளு சித்தருடமறைப்பெல்லா
ஞ்சணத்திலேகாண்பாய், மண்டுதற்கின்னமொரு மையெதிருமுண்டோ
மாற்றமாமென்றதொருமைகளுக்கெல்லாம், அண்டுமேநீமாற்றமையதனை
யிட்டு அனேகம்பேர்திரிவார்களசித்தரவனையா, தொண்டுசெய்யவேண்
டாங்குருமையிதாகுந் தொகுப்பாகக்கோடாகோடிகாண்பாரே (எ௮௭)

வாசி சித்தி.

காண்பார்கள்சித்தர்வுனைக் கண்டுகைதொழுவார் கருநாயின்மையி
னுடபொருள்தனையேகேட்பார், வீண்பாகச்சொல்லாதேதலைதெறிக்கும
ப்பா விநதானசித்தரவநனக்கடுமையாவார், சாண்பார்களிம்மையாற்சக

ஸ்மைசித்து தறிக்கலாம்வெள்ளரிக்காய்கள்போல, ஆண்பார்களவருடை யபொருளெல்லாங்கேளு அருளுவார்வாசிசித்தியதுதானே (௭௮௮)

தானென்றவாதசித்தியதைச்சொல்வார் தருவானஞானசித்திங்கரு வதனைச்சொல்வார், பேனென்றபெருமையாயதனைச்சொல்ல பேரானமவு னகுருநிலையதனைச்சொல்வார், வானென்றமூக்கருவுமக்கருவிலாச்சு மகத் தானகோடிவித்தையிதிலேதோன்றும், கானென்றகருக்குருவுங் கைபாக ஞ்சொல்லிக் கனயோகஞ்செய்யும்விதங்காண்பிப்பாரே (௭௮௯)

பாரப்பாவாதத்தின்குருவதனைச்சொல்வார் பண்மைபெறுந்தெசதீ ட்சைபகருவார்மைந்தா, பேரப்பாயவர்பெருமைமகிமைதனைச்சொல்வார் பேரானகெவுனகேசரகுளிகைசொல்வார், தேரப்பாரசகுளிகை காயாதிகற் பந்தெளிவானயட்டமாஞ்சித்துமவரளிப்பார், பாரப்பாவறுபத்துநான்குக லைசொல்வார் பண்பாகயாதாரமேலாதாரஞ்சொல்வார் (௭௯௰

மறைப்புமை.

சொல்லுவார்சகலசித்துமுனக்களிப்பார் சொல்லவொண்ணக் கரு வெல்லாஞ்சொல்லுவாரையா, அல்லுவார்யுகாயுகாந்தரங்கள்மிகவாழ்வார் அருளுவார்சாயுச்சியமென்றும்பதினாறாய், நல்லுவாரவருடையகருவெல் லாஞ்சொல்லி நவிலுவார்கருநாயின்மையதனைக்கேட்பார், சொல்லொணு யப்போறாய்நீயின்னமொருசேதி சொல்லுகிறேன்புலத்தியனே நன்றாகத் தானே (௭௯௧)

நன்றாகக்கருநாயின்மையிலெள்ளிடைதான் நலமானதேசிசெயநீரு முளுந்திடைதான், கன்றானவுள்ளங்கரமதுவில்வைத்துக் கருதவேமத்தி த்துக்குழைத்துநீமைந்தா, நென்றானநெற்றிதனில்திலர்தங்கொண்டையா நீமகனேகுளிகைட்டேறுவாய்கேசரம், வன்றானவன்போகமாகவேயேகி வ சனிப்போம்பொதிகைதனில்வந்துவிடுவாயே (௭௯௨)

பொதிகைகிரிச்சாரல்கருவேங்கைமரம்தியானம்.

வந்துநீபொதிகைகிரிச்சாரலடிவாரம் வசனிப்போங்கருவேங்கைமர மாறுவுண்டு, அந்துநீயம்மரமடிவாரந்தன்னில் அடவானயாசனமாந்தோலி ன்மீதில், குந்தியுட்கார்ந்துநீயென்னுடையதியானங் கூறுவீர்-ஓம்வசியநம வென்றுதானும், அந்துநீ-அறீம்-ஐயும்-கிலியும் கிறிசவ்வும் அருளுவாய் கிலியும அங்குஷாயாவென்றுருவே (௭௯௩)

நவகோடிசித்து.

உருவானதியானமது நூற்றெட்டாக உச்சரிப்பாய்நீயும்புலத்தியனே கேளும், கருவானகரடிபுலிசிங்கம்வெருவாளி கண்டபேரண்டமிருகமெ ல்லாந்தான், குருவானவென்னுடையதியானஞ்செபித்தால் கூறினேமிரு

கக்கமோடிவிடும்பாரு, சருவானவென்னுடையபிரதிமையகமீடஞ் சார்வாகவாரும்புலத்தியனே நீகேளே (எகூசு)

கேளப்பாவென்னிடம்வந்தையாவென்றக்கால் இருமைபெறுஞ்சாயுச்சியபதவியுனக்கீய்வேன், சாளப்பாசௌமியசாகரத்தின்பொருளைச் சார்வாகவெளியரககமாகவுநாம்சொல்வோம், ஏளப்பாகுருவாணை யென்மீதிலாணை யேறும்பிராணயபீடகருசொல்வேன், நாளப்பாசெல்லாதுநவகோடிசித்துநவதீட்சைகுருதீட்சைநாமளிப்போமே (எகூரு)

அளிப்போமேயாதாரம்நிராதாரஞ்சொல்வோம் அதனுடையவுபதேசமருளுவோம்பாரு, களிப்போநாம்ஞானகருமவுனக்கருசொல்வோம் நவகோடியுகாந்திரங்கள்நிலைகள்மிகசொல்வோம், களிப்போமேசாகரத்திலனேகவிதப்பேறு கருவிதொண்ணூற்றாறுதத்துவமுஞ்சொல்வோம்,அளிப்போமேமகத்தானபொருள்களெல்லாந்தான் அகத்தியனைப்போலேநாம்வாழவிப்போங்காணே (எகூசா)

காணப்பாகருநாயின்மைபெருமைமெத்த கண்டாக்காலவன்யோகிசித்தனவனாகும், நாணப்பாநாம்சொன்னோம்கருநாயின்மையை நாடதிலேமனிதர்செய்வாரதிதாகுமையா, வீணப்பாமற்றொருமை யெல்லாமைந்தாவிருதாகுமிம்மைபோலொருமைமிகயுண்டோ, ஆணப்பாயிம்மையைச்செய்வோயாகில் அவர்காண்பார்சித்தருடமாய்கையறிவாரே (எகூஎ)

வெண்காரவைப்பு-சந்திரன்வாளம்.

அறிவதற்கின்னமொருகருவதனைக்கேளு அருளுவோம்வெண்காரஞ்சந்திரன்போல்வாளம்,அறிவதற்கருளுவோம்வெண்காரவைப்பு அறைகிறேன்புலத்தியனேவண்மையிதுபாரீர், தரிவதோராருமறியார்களிதுபாருந்தைதன்னியமாகவேசொல்லக்கேளையா,அறிவதிதுவெடியுப்புமாக்கருவையா நலமாகமுன்சொன்னபாகுவதுவாமே (எகூஅ)

ஆமேதானெவ்வொன்றுசேர்கொண்டுநீயும் அருளானகல்லுரலிலிட்டுகிகதாக்கி, நாமேதான்முன்சொன்னவெண்காரஞ்சேரு நவிலுமோமதுகூட்டியிட்டுநீதாக்கி, சேமேதானசிவகெங்கையிரண்டுசேர்விட்டுச் செயமாகவிருப்புலக்கைகொண்டுமையா, வாமேதானிடித்ததனைமாத்தூள்போலவசமித்தோம்தோண்டியொருபாண்டமதிற்போடே (எகூகூ)

போடப்பாபுலத்தியனேசிவசத்திகெங்கை புகழானபூசிசெயநீர்குருசேபநீரு, தேடப்பாவொவ்வொன்றுபலம்நாலுவாங்கிச் செயமானபாண்டமதில்விட்டுநீகேளு, நாடபபாமத்தித்துக்கூட்டிகரமதனால் நவிலுவோங்கலத்துநீலவ்பாகக்கேளும், ஆடப்பாயடுப்பின்மேல்பாண்டம்வைத்து அருளுநீவாங்குறிசல்விறகுதீயெரியே (அ௱)

எரித்துநீமுச்சாமமிவ்விதமானால் வெனசொல்வேனப்பாகொதிகொ
திக்கும்பாரு, அரித்துநீயப்பாண்டமிறக்கிமேவைத்து அண்டயச்சிமிழைதச்
சாய்த்திடாய்மைந்தா, சரித்துநீயப்பாண்டஞ்சாய்த்ததேயாகில் சலநீருவ
ற்றியொருபாறைபோலாகும், மரித்துநீயப்பாறையாரினதோர்பிறகு மகத்
தானவெண்காரவைப்பையெடுத்திடாயே (௮௱௧)

வாலைபூசை காயசித்தி.

திடமானயிப்பாறைவெண்காரவைப்புச் செகத்திலே யார்வைப்பார்
செப்பினேன்மைந்தா, மடமாதுமேதவிமீறுன்மணிவாலையையா மவள்பத
ம்வைத்துநீபூசிப்பாய்பாரு, நடமாடுஞ்செகமாயியவளுடையகிருபை நாள்
தோறுமவள்பதந்தெரிசிப்பாய்மைந்தா, செடமானதிரேகமதுசெண்பகம்போ
லையா செயலானகாயசித்தியதுவாமே (௮௱௨)

மெய்ஞ்ஞானபரகெதி.

சித்திக்கயின்னமொருவயனமொன்றுகேளு செப்பியதோர்வெண்
காரப்பலகைதனைக்கொண்டு, முத்திதருமெய்ஞ்ஞானப் பிராணயபீடம்
மூலமுதலாறுவனை சிமகயவ வென்று, சித்திதரும்போசகம்பிராணயத்தோ
டி சரமாகத்தம்பித்துக்கும்பித்தாயானால், வெத்திதருசகலசித்தியுனக்
கெய்தும் மெய்ஞ்ஞானபரகதியுமிகவெய்தும்பாரே (௮௱௩)

காரவைப்பு.

பாருமிதுவெண்காரப்பலகைதனைக்கொண்டு பதனமதாய்வைத்துநீ
பணிந்துபூசித்து, தேறுநீகாரவைப்பதனைக்கேளு செகத்திலேயார்செய்
வார்செப்புகிறேன்பாரு, சேருநீசிவவுப்புசிவசத்தியுப்புச்செயலானயிரண்
டுப்புமொவ்வொன்றுசேர்தான, பாருநீசவர்க்காரவுண்டையதிற்சேர்தான்
பரிவாகயிவ்வகைகள்கல்லுரலிற்ருக்கே (௮௱௪)

தாக்கியேசுத்தசலம்படியொன்றிட்டுந் தருவானவிருப்புலக்கைகொ
ண்டையா, சாக்கியேமுச்சாமஞ்சாடினைதுவுந் சார்வாகப்பிசினதுபோ
லதுவுமாகும், வாக்கியேயதைக்கொண்டிப்பாண்டத்திலிட்டு வளமான
ராமசெயநீர்சேயொன்று, ஆக்கியேகிளிசெயநீர்சேயொன்றுவார்த்து அ
தைக்கூட்டிமத்தித்துக்கரமதனுல்வாரே (௮௱௫)

கரைத்துநீகரைத்ததொருபாண்டமதைக்கொண்டு கருதவேயடுப்பி
னமேலேற்றியேயப்பா, நினைத்துநீயக்கினியைமூட்டி நீநன்றாய் நிலைபெற
வேதனைல்மூட்டியெரித்திடாய்பாரு, வரைத்துஅந்நீர்வற்றி மாக்குழம்பு
போலா மடவாகச்செய்வோர்கொதிகொதிக்கும்அதுபாரு, இரைத்துநீயப்பா
ண்டமெடுத்துநீயையா இயலானயண்டச்சில்சாய்த்திடுவே (௮௱௬)

சாய்த்திடீர்சாய்த்திடுமப்போதுமையா சார்வாகக்காரமது பலஙை போல்பார்யும், ஆய்த்திடீராறினதோர்பிறகெடுத்ததனை யருளானசிவயோ கக்குகைக்குட்சென்றையா, பார்த்திடீர்பிராணயபீடமேசென்று பருவா னியனாசேகம்வங்கென்றுநாட்டி, ஏர்த்திடீரோழுத்துக்கும்கும்பித்தால்த னும் யேகவுபதெரிசனமாமிதுதான்பாரே (அ௱ச

பாரப்பாபுலத்தியனேயங்கெஞ்சேகிப் பரபூசைகுருபூசைபணிந்திட் டுநீயும், காரப்பாபதனமதாய்க்காரவைப்பதனைக் கருணைதரப்பூசித்துக்க ணிந்துபாரையா, நாரப்பாகாரவைப்பதனைச்சொன்னோம் நாடதிலேஞானி களேசெய்துபாரிதனை. வேரப்பாவேதைக்குவேகமிதுபாரு வெட்டவெளி யாகவும்நாம்விளம்பினோங்காணே (அ௱டு

சாரவைப்பு

காணடாசாரவைப்பதனைச்சொல்வோம் காரஞ்சேர்கல்லுப்புச் சேரொன்றுவாங்கி, வேணடாவெடியுப்புச்சேர்கொண்டுநீயும் விளம்புவோங் கம்பியுப்புசேரொன்றுகொண்டு, நாணடாயிவ்வகைகள்கல்லுரலிலிட்டுகோ தநீர்சேரொன்றுநன்பாகவார்த்து, கோணடாவார்த்துமேயிருப் புலக்கை கொண்டு குமுறவேமுச்சாமமிடித்துத்தூளாக்கே (அ௱சு)

ஆக்கியேயத்தூளைத்தோண்டியொருபாண்டம் அடவாகத்தூளதனை ப்பாண்டத்திலிட்டு, தேக்கியேதேசிசெயநீருசேரண்டு தெளிவாகப்பாண் டமதில்தென்பாகவிட்டு, வாக்கியேகனாத்ததனைக்குழம்புபோலாக்கி வடு ப்புமேலிப்பாண்டம்வளமாகயேற்றி, நாக்கியேயக்கினியைமூட்டிநீநன்றாய் நலம்பெறவேமுச்சாமமெரித்திடாய்தானே (அ௱எ)

எரித்திட்டுப்பாண்டமதையிறக்கியேநீதான் இயல்பெறவேயண்டச் சில்சாய்த்துநீபாரு,அரித்திட்டுவாறினபின்னெடுத்ததனைப்பார்த்தால்அத ன்பெருமைமெத்தவுண்டுயாருமிதைச்சொல்லார், குறித்திட்டசாரமதின் வைப்பதனைக்கொண்டு குருபூசைபரபூசைசெய்துநீயப்பா, பறித்திடவே வைப்பதனைப்பதனமதாய்ச்செய்து பணிந்துநீவாலையைத் தெரிசிப்பாய்த தாமே (அ௱அ)

தெரிசித்துவாலையையர்ச்சித்தவள்பாதம் தினமவள்கமலபதம்பணி ந்துநீபோற்றி, வரிசித்துப்பிராணயவாசிகொண்டையா வசனித்தோம்ரே சகம்வங்கென்றுநாட்டி, தரிசித்துக்கும்பித்துத்தம்பித்தாயானால் தலமா றுதெரிசனமுந்தான்காணும்பாரு, உரிசித்துவுள்மூல தெரிசனமேவாச்சு ஓகோகோ சாரத்தின்வைப்பதுவுமாச்சே (அ௱௯)

முப்பூவின்மார்க்கம்.

ஆச்சென்றயின்னமொருகருவதனைக்கேளும் ஆச்சரியமாறிவாருப் பினுடசேர்மை, மூச்சென்றமுப்பூவின்மார்க்கமிதைபாரு முறையாகக்கா

ஞர்கள்காணக்கருச்சொல்வோம், வாச்சென்றவெள்ளைக்கல்கல்லினேர்மை வளமானபிரமகற்பமதுதான்பாரு, மூச்சென்றமூலமதுவுருவையாகும் முறுதிபெறுங்கோசபீசமதுதான்பாரே (அ௱௰௪)

பாரப்பாயப்பீசம்அகாரமதுவாகும் பண்மைமெறுங்கோசமதுஉகாரமதுவாகும், தேரப்பாகருவுருவோங்காரமதுவாகும் திருவானநகாரமதுவுயிரதுதானாகும், பேருமதுபிண்டமதுவகாரமதுவாகும் பேரொளிபோல்நின்றதொருமகாரமதுவாகும், ஆருமறியார்களிதுபிரமவொளிகாணர் அகாரமது அண்டக்கல்லடிமுடிநடுவாமே (அ௱௰௫)

ஆமென்றசிந்துவும்அகாரபீசந்தான் ஆனோரசவிந்துவுமதற்குட்பீசந்தான், நாமென்றநாதமதுவுகாரபீசந்தான் நாதவிந்துமூலமதற்குட்பீசந்தான், ஓமென்றவோங்காரபிண்டபீசந்தான் உட்காருநகாரமெனு மூருள்பீசந்தான், பேமென்றசுருபமதுயெங்குநிலைகாணர் பேரானயண்டக்கல்பேசாவுயிராமே (அ௱௰௬)

உயிரானகல்லுக்குப்பேர்தானுமென்ன உடன்சேர்ந்த கருவுக்குப்பேர்தானுமென்ன, உயிரானகல்லதுவும்அண்டக்கல்லாகும் உடன்சேர்ந்தகருவதுவும்நாதவிந்தாகும், உயிரானவடிவென்னவுப்புக்கருவென்ன வுறுதிபெறுமுடிவென்னமூலநடுமென்ன, உயிரானமுடிவிந்துவென்ன நிறமாகும் ஓகோகோநாதமதுமஞ்சளதுவாமே (அ௱௰௬)

கோழிமுட்டைமனிதர்கருபூமிபூநீறு.

அதுவானஅண்டமென்றுஞ்சென்னமெத்த அதுவாறுயென்ருவேருருவீர்தானும், பதுவானபுலத்தியனேபாகமாய்க்கேளு பாடுகிறேன்சௌமியசாகரயின்நூலில்,நதுவானவெண்கருக்கோழிமுட்டைப்பார் நாதவிந்ததுவுமனிதருடகருபார்,சதுவானபிறிதிவுதான்பூமியதுவாகும் சார்வாபூநீறிதுதானபடருமென்றே (அ௱௰௭)

மேல்கவிமுறையர்வன

என்றுனயிதுமூன்றுல்முப்பூவுமாச்சு யேமென்றபரியேமமதுவுமாசு, கொன்றுனகோழிமுட்டையென்பார்சிலர்பேர் குருடர்களேவயித்தித்துக்குருவதுவுமாச்சு, உன்றுனவுன்னுணையென்னுணையதுதான்ஓகோகாபாரதினுலேவயித்தியஞ்சித்தி, கன்றுனபனிநீருசுத்தசலங்கேளு கருவிதொண்ணூற்றுறில்பனிநீருமாச்சே (அ௱௰௭)

ஆச்சப்பாமனிதருடசடலமதிலுண்டு அருளினேம்பனிக்குடம் பெண்ணுடலிலாகும், பேச்சப்பாகுருவாணையிதைவிடப்பனிநீர் பேரானவுலகனிலில்லைபாரு, போச்சப்பாபூநீறுபூமிதனிலுண்டு பிறுதிவியின்சாரம

துபூமிகாதந்தான், வாச்சப்ப்ாயி துமூன்றுல்சகலசித்துமாச்சு மாராட்டமா
ய்ச்சொன்னோர்மூன்னேர்களாமே (அ௱௯௯)

முன்னோர்கள்பாடியதோர் நூலெல்லாந்தான் முறைபதனைச்சொன்
னோர்கள்கருவதனைமறைத்தார், வன்னோர்கள்பாடியதோர் நூன்முறைக்கெ
ல்லாம் வசனித்தோம்சௌமியசாகரமிதாகும்; பின்னோர்கள்கருவதனைக்
கண்டுநாமைய்யா நீடுலகுசித்தருக்குநிலைபெறவேசொன்னோம், அன்னோ
ர்களிம்முறைமூன்றதுவினாலே அருளுவோங்கோடாகோடியுப்புமுறை
யாமே (அ௨0)

உப்புப்பிங்கானெட்டு

முறையான்திங்களெட்டினிலையாகேளு முன்சொன்னபனிநீருமூன்
றுப்டிகொண்டு, அறையானவிந்துசேரதுதான்கொண்டு அடவர்னபெண்
விந்துநாதஞ்சேர்கொண்டு, பறையானயிந்நீருவிதமெல்லாந்தான் பண்மை
மைபெறும்பாண்டத்திலிட்டுநீதாக்கி, வெறையான்வெண்கோழியஸ்தியா
கும் விளங்குவோமதினண்டம்பதிறுவாங்கே (அ௨௧)

வாங்கியிருபிங்கானில்விந்துநாதத்தை வள்மாகவெவ்வேறுவாங்கிதா
க்கி, ஆங்கியேயண்டோட்டின்சவ்வதனைப்போக்கி அடவாங்கல்லுரலிலி
ட்டுநீதாக்கி, மூங்கியேமுன்சொன்னபூநீர்சேரண்டு மூர்க்கமதாயண்டோ
ட்டில்கூடநீசேர்த்து, நாங்கியேமூன்றுதிங்கள்பனிநீரிருசேரு கலமாகவத
ன்கூடவார்த்துநீதாக்கே (அ௨௨)

தாக்கியேமுச்சாமமிருப்புலக்கைகொண்டு தருவாகயிடித்துமாத்தூ
ள்போற்சாடி, ஆக்கியேமுன்சொன்னபாண்டப்பனிநீரில் அடவானயித்
தூளைத்தோண்டியதிலிட்டு,சாக்கியேகரமதனுற்கரைத்ததனைமைந்தா சார்
வாகவேநாள்முழுதும்வைத்துமறுநாளில்,தேக்கியேபார்த்தாக்காலையாகே
ளுதெளிவாகுமத்தெளிவைமறுபாண்டத்தில்வாரோ (அ௨௩)

வார்த்ததனைப்பாண்டமதையடுப்பிலேற்றி வளமானகிச்சிலிவிறகத
னாலே, ஏர்த்ததனையிருசாமமெரித்துநீயப்பா மியம்பினேன்கொதிகொதித்
தானபிறகையா, பார்த்ததனைப்பாண்டமதையிறக்கிவைத்தந்தப் பரிவாக
வாறியதுசமயமிதுகண்டு, வேர்த்ததனைப்பத்துபிங்கானதனிலிட்டு விசித
மதாய்ரவிமுகமெட்டுநாள்வையே (அ௨௪)

வைத்திடவேகாளொன்றுக்கிருசாமம்வைத்து வசனித்தோமதைக்
கொண்டுபார்த்தாயாகில், முத்துப்போலெண்ணெய்கசிவதுதானிறங்கும்
மூறையாகயிவ்விதம்பத்துமுறையையா, சத்துமதையிலுத்துப்போடோ

த்தவுப்பாகுஞ் சார்வாகவாரமதுயில்விதமாய்ச்செய்தால், உத்துப்பிங்கா ணைப்பார்த்துநிறையப்பா மோகோகோபிங்காணெட்டுமெடுத்திடே (அ௨௫)

சதுர்முகசித்து.

எடுத்திட்டுப்பிங்கானதையெட்டுங்கொண்டையா யியம்புவோம் - ம சிவயந-கிலியுங்-கிலிரிம்லுமென்று, தடுத்திடாய்பிராணயம்வாசியனைநாட் டி தனையேறிகும்பகம்பூரகம்பாய்ந்து, நடுத்துநீயித்தியானம் நூற்றெட் டோதி நவப்பிரமசதுர்முகனைப்பணிந்துபூசிப்பாய், அடுத்துஅவர்பிரசன் னமாவார்சதுர்முகனும் அதிதசித்தியுனக்களிப்பாரவர்தான்பாரே (அ௨௬)

வெடியுப்புவைப்பு.

பாரும்புலத்தியனேநீயின்னங்கேளையா பரிசுடையவுப்புமுறைவை ப்பதனைக்கேளும், ஆருமிதையறியார்கள்வெடியுப்பினேர்மை அடவாகமு ன்சொன்னவெட்டுப்பிங்கானில், ஊருமொருபிங்கானதுவெடுத்தையாகே ளு ஓகோபார்கல்லுரலிலுப்பதனையிட்டு, வாருபெறமுன்சொன்ன மாக்க ருவுசேர்தான் வாங்கியேயுப்பதனிற்கூடவதைச்சேரே (அ௨௭)

சேர்த்துநீசிவகங்கை குருசெயுநீரையா செயலாகவொவ்வொன்று வைத்துபலம்வாங்கி, ஊர்த்துநீயுரலிலிட்டுஅந்நீரைவார்த்து ஓகோபாரியி ருப்புலக்கையதனிலிருசாமம், வார்த்துநீசாடுவாய்சாடையிற்கேளு மகத் தானதுளாமாவதுபோல்மைந்தா, கார்த்துநீயம்மாவைத்தோண்டிபொரு பாண்டங் கைபாகந்தவறுமலதிலிட்டுநீபாரே (அ௨௮)

இட்டுநீசிவகங்கைநாதநீரொவ்வொன்று இன்பமுடன்சேருவிதமாக வதிலிட்டு, செட்டுநீசெயசித்தியதுபலிதமதுவாகச் செயலானகரமதனால் கரைத்ததனைமைந்தா, வெட்டுமதுபாண்டமதையடுப்புமேலேற்றி வசனித் தோமிருசாமந்தணல்மூட்டிட்டு, எட்டுநீயெரித்திடுவாயோர்கொதிகொதி க்கும் இயல்பாகவப்பாகங்கண்டுமிதையிறக்கே (அ௨௯)

ஐங்கோலநீர்

இறக்கியேயாறவைத்ததனையேசேளு இபலானபிங்கானிலிட்டுநீதாக் கி, வறக்கியேவார்த்ததனைரவிபத்துநாளும் வளமாகயிருசாமம்வைத்தீரா னால், புறக்கியேவைங்கோலரவிநீரிறங்கும் புனிதமதாய்ப்பாண்டமதிலரு வியதையிருப்பாய், கறக்கியேயுவ்விதம்பத்துநாளுந்தான் நலமாகவைங் கோலநீரிறக்கிடீர்பாரே (அ௩௰)

இறக்கிட்டுப்பார்த்திடவேபத்துநாளானால் இயல்பானவெடியுப்பு ம ல்லிகைப்பூப்போலே, பிறக்கிடவேபூத்தூர்க்குமபூவைத்தானும் புனிதமதா ய்சீஷாவில்பதன மதாகச்செய்செய்வீர், அறக்கிட்டுமூலர்தாரமே புக்கு

யருளானவெடியுப்பைப்பருகுநீவைத்து, மறக்கிட்டுஷங்கென்றுவாசியதை
க்கொண்டு வருவிப்பாய்ரோசகம்தம்பிப்பாய்தானே (அ௲௧)

தானான தமர்வாசல்மூலமேபுக்கித் தம்பித்துவொருநிலையாய்க்கும்பி
த்தாயானால், ஆனான குண்டலித்தாய்பிரசன்னமாவாள் அவள்பதமேபூசி
த்தாலெல்லாஞ்சித்தி, ஓனுமென்றசித்திதனையுனக்கீவாள்பாரு ஓகோ
கோவெடியுப்பின்மர்மங்கள்செய்வாள், வேணுமென்றபொருடந்துரட்சி
ப்பாளப்பா விளம்பினேம்வெடியுப்பின்வைப்பிதுவுமாச்சே (அ௲௨)

பொட்லுப்புவைப்பு.

ஆச்சப்பாவெடியுப்பின் வைப்புமுறைசொன்னேம் யருளுவோம்
பொட்லுப்புவைப்பிதைக்கேளும், பேச்சப்பாபின்னுமொருபீங்கானிலுப்
பைப்பேராகிக்கொண்டுநீகல்லூரலிலிட்டு, மூச்சப்பாமுன்சொன்னமாக்க
கருசேர்தான் மூதண்டமாகவேயுப்பதனிலிட்டு, பாச்சப்பாசிவசத்திகக்
கைகூடித்சேரு பண்பாகவூசிசெயநீருசேர்வாரோ (அ௲௩)

வார்த்துநீயிருப்புலக்கைகொண்டாலேயா வளமாகயிருசாமஞ் சாடி
னலப்பா,மார்த்ததுவுமாப்போலாமம்மாவைத்தோண்டி வசனித்தோம்பா
ண்டமதிலிட்டுநீதாங்கி, சேர்த்துநீயெட்டுதிங்கள்பனிநீருசேருசெயலான
நாதவிந்துவொவ்வொன்றுசேர்தான், கார்த்துநீமாட்டாடபாண்டமதிலிட்
டுக் கருணைபெறக்காமதனுற்கலக்கியடுப்பேறம்றே (அ௲௪)

ஏற்றியேயிருசாமம்விறகிட்டையா யெரித்திரோயாமாகிலோர்கொதி
கொதிக்கும், வாற்றியேயப்பாகங்கண்டுநீயீர்தா வளமாகப்பாண்டமதை
யிறக்கியாறவைத்து, நாற்றிசையும்புகழ்பெறவேபிங்கானில்வார்த்து நல்ல
ரவிபத்துநாள்வைத்துயிருசாமம், பூர்த்துமலருப்பாகுமைங்காலநீரு புக
ழ்பெறவேயிருக்குமதுயிறுத்திடீர்தானே (அ௲௫)

தானென்றமுன்பாண்டநீரதிலேவையாசைதன்னிடமாகவேபத்துவி
சையிறுப்பாய், பானென்றபத்துவிசையிறுத்திராகில் படருமதுபொட்லு
ப்புபீங்கானிறையத்தான், வானென்றயப்பூவையெடுத்துவேசீஷா வளமா
கவதிலிட்டுபிரடையதுபோடு, நானென்றபிராணயுவாசிகொண்டையா ந
ல்லசுவாதிட்டானம்-நங் கென்றுயேகே (அ௲௬)

ஏகியே-ஓம்-நமசிவாயமென்றுருநூறு இயம்பினேம்ரோசகம்கொண்
டுசெபித்தால், பாகியேபாப்பிரமம்பிரசன்னமாவார் பணியுமவர்கமலபத
ந்தெரிசிப்பாய்நீயும், தேகியேதெரிசித்துயர்ச்சித்தாயானால் தெளிவாகம
வுனசித்தியதுதருவார், ராகியேகெவுனகுளிகையதுமீவார் நலமானவாதசி
த்தி (அ௲௭)

படிகாரவைப்பு.

தருகவேயின்னமொருவைப்பைக்கேளு சைதன்னியமாகவேபடிகா ரவைப்பு, நருகவேநாம்சொல்வோம்புலத்தியனேயையா நாடதிலேயிவ் வைப்புயெவர்செய்வார்பாரு, புருகவேயின்னுமொருபீங்கானிலுப்பை பு னிதமதாய்க்கொண்டுகேல்லுரலிலிட்டு, சருகவேமுன்சொன்ன மாக்கரு மைந்தா சார்வாகச்சேர்கொண்டுகல்லுரலிற்றுக்கே (அ௩௮)

தாக்கடாரோமசெயநீருசேரொன்று தருமானநாதவிந்துபலமுமஞ் சு, சேக்கடாசிவகங்கைசேரொன்றிட்டுசெயலானயிரும்புலக்கையதனிலு லே, நாக்கடாயிருசாமந்தாக்கினுலையா நல்லமாத்துரளாதுபோளாகுமிதுபா ரு, வாக்கினுலமூர்தமதாய்நாம்சொன்னேம்பாரு மம்மாவைத்தோண்டி யொருபாண்டமதிற்போடே (அ௩௯)

போட்டுநீமாசமெட்டில்பனிநீராயா புனிதமதாய்ச்சேரண்டு பாண் டமதில்வார்த்து, காட்டிநீசிவசத்திகெங்கைபலமாறு நலமாகவிருநீனும்வி ட்டுக்கரைக்கிட்டு,திட்டமதாய்ப்பாண்டமதையடுப்பின்மேலேற்றித்தியெரி ப்பாயிருசாமம்நீயுமதுவாக, நாட்டிநீயததனையெரிததபேதயாகில நல்லகொ திகொதிக்கும்பார்பாண்டமதையிறக்கே (அ௪௰)

இறக்கியேயாறவைத்ததனையையா இயலானபீங்கானிலதை யெடுத் துவார்த்து, நறக்கியேரவிமுகம்நாள்பத்துவிதம், நல்லவொருநாளுமிருசா மமதுவைத்தால், அறக்கியேபீங்கானிலங்கோலநீ ரருவிபோலிறங்குமது முன்பாண்டந்தனிலே, நிறக்கியேநீரோடேநீரதனைவார்த்து நிலையாகபத் துமுறைஇப்படியேயிறுததிடே (அ௪௧)

இறுத்திட்டுநாள்பத்துஞ்சென்றதேயாகில் என்னசொல்வேனதிற் பீங்கான்றனிலே, பறுத்திட்டபடிகாரவுப்பதுவும்பூர்க்கும் பளிச்சென்று சந்திரன்போல்வர்ணமாகும், அறுத்திட்டுவெப்பாகக்கண்டீரானல் அருளா னபடிகாரவுப்பதனைக்கொண்டு, செறுத்திட்டச்சிசாவிலுப்பதனையிட்டுச் செயலானமேல்பிரடைசெய்புவீராமே (அ௪௨)

செப்புவோம்புலத்தியனேமணிபூரஞ்சென்று சிவநயவ ஓம்மென்று ாசியதையொட்டி, நப்புவோம்பிராணயைபிடமேசென்று நலமாகமங்கெ ாறுரேசகம்பாய்ந்து, அப்புவோமங்குநின்றுதம்பித்தாயானல் அருளான விஷ்ணுவும்பிரசன்னமாவார், கப்புவோமவருடையகமலபதமேவிக் கை தாழுதர்ச்சித்துப்பூசிப்பாய்த்தானே (அ௪௩)

பூசித்தால்விஷ்ணுவும்வேண்டுதுமளிப்பார் புகழானபடிகாரசித்தியும ளிப்பார், ஆசித்தாலாதாரமுத்தியுங்கொடுப்பார் அடவானவாதமேசததியு ங்கொடுப்பார், காசித்தால்காயாதிகற்பமுமளிப்பார் காயசித்திகைகூடும்

பொருளதுவுஞ்சொல்வார், வாசித்தால்வாதசித்தியுமளிப்பார் வாசிசித்தி
கெவுனகுளிகையதைக்கொடுப்பாரே (௮௪௪)

இந்துப்புவைப்பு

பாரப்பாபுலத்தியனேபடிகாரவைப்பு பண்மைபெறச்சொல்லிவிட்
டோமின்னமொன்று, வாரப்பாயிந்துப்புவைப்பதனைக்கேளும் வசனிப்
போமின்னமொருபீங்கானிலுப்பை, தேரப்பாயவ்வுப்பைக்கொண்டுநீமை
ந்தா தெளிவானகல்லுரலிலிட்டுநீதாக்கி, சேரப்பாயெட்டுதிங்கள்மாக்கரு
த்தான் செயலாகச்சேர்கொண்டுவுப்பதனிற்சேரே (௮௪௫)

சேர்த்துநீகிளிசெயநீர்சேர்கொண்டுவார்த்து செயலானநாதவிந்து
சேர்வார்த்து, பார்த்துநீயிருப்புலக்கைகொண்டிருசாமஞ்சாடு பரிவான
மாத்தூளுபோலதுவாகும், கார்த்துநீயம்மாவைப்பாண்டத்திலிட்டுக் கரு
வானவைந்துதிங்கள்பனிநீருமேதான், வார்த்துநீரதிசெயநீர்கொண்டுதா
க்கி வளமானகரமதனுக்கணைத்திடர்பாரே (௮௪௬)

கணைத்ததம்மாவிருந்தபாண்டமேகொண்டு கருணைபெறவடுப்பேற்
றித்தீபமிடுமையா, தணைத்ததீமூட்டியேயெரிப்பாயிருசாமம் தெளிவாக
வோர்கொதிகொதிக்குமதுபாரு, அணைத்ததீகொதித்ததேயாமாகிலையா அ
ப்பாண்டமிறக்கியேயாறவைத்ததனை, பொணைத்தபீங்கானிலேவார்த்தத
னையையா போராகநாள்பத்து ○ரவிமுகமேவையே (௮௪௭)

னைத்துநீநாளொன்றுக்கிருசாமம்வைத்தால் வளமாகவைங்கோலநீர
விபாயும், வைத்துநீமுன்பாண்டநீரிலிந்நீரைப்பரிவாகவிறுத்துவிடுபண்மை
யாதுவாக, னைத்துநீநாள்பத்துமிவ்விதமாயிறுத்தால் நலமானயிந்துப்பூ
ரிக்குமிதுபாரு, கைத்துநீயிவ்வுப்புபீங்கானிலூறையத்தான் கருணைபெறப்பூ
ரிக்குமதுகைபாகமறியே (௮௪௮)

அறியவேயப்பீங்கானெடுத்துமூவையா அருளானயிந்துப்பைச் சீ
ஷாவிலிட்டு, மறியவேயச்சிஷாயருகுநீவைத்து மகத்தானவாசியையனுக
தொட்டி, செறியவே சிவயநம வென்றுவுருநூறு நேரானரோசகங்கொண்
டுநீயோட்டி, வறியவேயங்குமேநின்றுகும்பித்து வளமாகச்செபிப்பாய்ரு
த்திரனைத்தானே (௮௪௯)

செபிக்கச்சேருத்திரனும்பிரசன்னமாவார் தெரிசிப்பாயவனைநீபூசிப்
பாய்மைந்தா, செபிக்கவேயவரொளிவுநன்றாகக்காணும் தேகசித்திகாயசித்
தியளிப்பாமிகபாரு, நபிக்கவேயிந்துப்புமகாசித்தியாகும் நவகோடிசித்தி
யுமனைக்களிப்பார்பாரு, கபிக்கவேயவனைநீகைதொழுதுமைந்தா கருணை
பெறயிந்துப்பைக்கைதொழுவாயே (௮௫௰)

○ ரவியென்பது-சூரியன்.

வளைகிலுப்புவைப்பு.

கைதொழுவாயிந்துப்பின்வைப்பதனைச்சொன்னோம் கருதுவோம்வ
ளைகிலுப்பினதுவைப்பு, கைதொழுவாய்புலத்தியனேயின்னமொருபீங்கா
ன் கருவானபீங்கானிலுப்பதனைக்கொண்டு, கைதொழுவாய்கல்லுாசிலுப்
தனையிட்டுக் கருணைபெறுஞ்சாரஞ்சேர்கூடச்சேர்த்து, கைதொழுவாய்
ாதவிந்துபலமாறுவிட்டுக் கைபாகமாகவேசுத்தசலஞ்சேரே (அடுக)

சேரானரவிசெயநீர்சேர்கொண்டுவார்த்து செயமான மாக்கருசேர்
கொண்டுவிட்டு,ஏரானயிருப்புலக்கைபதனுலேதான் யிருசாமமாவதுபோ
ல்சாடுவாய்மைந்தா, சாரானசாடயிலேமாத்துாள்போலாகும் சமர்த்தான
ம்மாமைத்தோண்டிநீயைய்யா, வாரானபாண்டமதிலிட்டுநீதாக்கி வளமான
சிவகங்கைவார்த்துச்சேர்கணையே (அடுஉ)

கணைத்திட்டுவடுப்பின்மேற்பாண்டமேற்றிக் கனலானதீமூட்டியிரு
சாமமெரித்தால், அணைத்திட்டகுழம்பாகுமோர்கொதிகொதிக்கும் அப்
பாகங்கண்டுநீபாண்டமதையிறக்கி, வணைத்திட்டவாறினபின்பிறகதனைக்
கேளு வளமானபீங்கானில்வார்த்துநீமைந்தா, நணைத்திட்டரவிபத்துநாள்
மூன்றுமுறைதான் நண்பாகவைத்ததனையங்கோலநீரே (அடுங)

நீரானநாளொன்றுக்கிருசாமம்வைத்தால் நேர்மைபெறுமைங்கோல
நீரிறங்கும்பாரு, ஆரானயங்கீழ்முன்பாண்டநீரில் அருளினேம்நாள்பத்
துமுறையிவ்விதமாயிருத்தால்,சேரானவுப்பதுவுமிதுக்குள்ளேயாச்சுசெ
ப்புவோம்வளையலுப்புவிதிற்படரும், வேரானயவ்வுப்பூர்த்துப்பீங்கானி
ல் மேல்நிறையநின்றுவிடும்வளையிலுப்பாமே (அடுச)

உப்பானவுப்பதனையெடுத்துசீஷாவில் ஓகோகோயிட்டுநீசொல்லக்
கேளையா, அப்பானயிவ்வுப்பையருகினில்வைத்து அருளுவோம்-மகயவ
சி-ஓம்-சவ்வும்-ஐயும, செப்புநீயிருநாலுவிசுத்தியதுயேகிச் செயலானபி
ராணயபீடமதிற்சென்று, வப்பானவாசியதைவிசுத்தியதிலொட்டி வங்
கென்றுரோசகமேகிச்செபிப்பாயே (அடுரு)

செபித்துநீகும்பிததாலங்குநின்றையா செயலானமகேசுரனும்பிரச
ன்னமாவார், கபிதகணைக்கைதொழுதுதெரிசிப்பாய்மைந்தா கருணையவ
கூர்ந்துனக்கருள்செய்வார்பாரு, குபித்தவனைப்பூசிந்துதெரிசித்தாயா
னால் கூறுவாரதீதசித்தியதுபாரு, பபிந்துநீவளைகிலுப்பதனையப்பா பணி
ந்துநீபதனமதாய்வைத்துநீபோற்றே (அடுசு)

ஐங்கோலத்தயிலம்.

போற்றியேவளைகிலுப்பினிடவைப்பு புனிதமதாய்ச்சொல்லிவிட்டோ
ம்பாரு, ஏற்றியேயின்னமொருகருவதனைக்கேளு மியல்பானவைங்கோ

லத்தயிலமதைஐயா, காத்துநீமுன்சொன்னபாண்டமதினிலாக்கருவானபீ
ங்கானிலெடுத்துநீவிட்டு, ஆத்தியேமாக்கருசேர்கொண்டுயிட்டு அருளா
னபிண்டக்கருசேரதிற்றுக்கே (௮௫௭)

தாக்கியேமத்தித்துக்கூட்டிப்பிசைந்து திருவானகல்லுரலிலிட்டுநீய
ப்பா, மூக்கியேமுன்சொன்னபொட்டிலுப்புசேரு முறையானபடிக்காரவு
ப்புசேனாயா, நாக்கியெவெடியுப்புயதிலொருசேரு, நலமானயிர்துப்புவதி
லொருசேர், வாக்கியேவளைகிலுப்பதியொருசேர் வளமானமுப்பூவுமாறுப
லமாமே (௮௫௮)

பலமானசிவவுப்புவதிற்பலமைந்து பண்மைபெறுஞ்சிவசத்தியுப்பு
பலமஞ்சு, சலமானசிவகங்கையாறுபலமாகுஞ் சார்வானசிவசத்திகங்கை
பலமாறு, புலமானபூநீறுபாகுபலஞ்சேர்தான் புனிதமென்றநாதவிந்துப
லமிகுமேவைத்து, அலமானவாணவிந்துபலம்பத்துமாகும் அருளினோ
முப்புசுண்ணம்பலமொன்றுசேரோ (௮௫௯)

ஒன்றானமுப்புசெந்தூரம்பலந்தானாறு உறுதிபடுஞ்சிலைசெந்தூரம்ப
லந்தான். நன்றானரவிசெயநீர்மூன்றுபலமாகும் நலமானமதிசெயநீர்மூன்
றுபலமாகும், வன்றானநஞ்சுக்கொடிசுன்னம்பலந்தான் வசனித்தேர்மாக
வகையிருபத்தொன்றையா, குன்றாமற்கல்லுரலிலிட்டுநீதாக்கி கூறுவோ
மிருப்புலக்கையதுதானே (௮௬௰)

ஐங்கோலமெழுகு.

தானானவுலக்கைகொண்டிருசாமஞ்சாடச் சாதுரியமாகவேமாத்தா
ளுபோலாம், தேனானவம்மாவைத்தோண்டியொருபீங்கான் செயலாகவி
ட்டதனில்குருசெயநீரையா, மானானமுச்சேருவார்த்ததிலேதான் வளமா
கமத்தித்துக்கூட்டிப்பிசைந்து, ஆனானவிதனிலேபூச்சாமம்வைத்தால்
அருளுவோம்விறிட்டுப்பாயுமதுதானே (௮௬௧)

ஐங்கோலமெழுகு.

பாயுமதுவருவிபோலத்தயிலமதுயிறங்கும் பரிவாகயெடுத்த தனை
யேஐயா, சேயுமதின்சிஷாவிற்றயிலமதையிட்டுச் செயமாகவடியில்நின்ற
குழம்பதனைக்கொண்டு, தேயுமதின்தேசிசெயநீரதனிற்சேர்தான் செய
லானமதியமூர்தமாறுபலமாகும், பேயுமதின்பீங்கானிலிவ்வகைகளிட்டுப்
பெலமாகமத்தித்தூரவியில்வைத்திடுவோ (௮௬௨

வைத்ததனையிருநாழிசென்றதேயா வளமானவைங்காய மெழுக
துவாகும், செத்ததனைச்செப்புப்பரண்டில்வைத்துச் செயலானவைங்கோ
லத்தயிலமிதிரண்டும், எத்திதனையுமிருக்குமில்லத்தில் என்மகனேசெ
ன்றுநீயருகிதைவைத்து, மைத்ததனையறுபத்துநான்குசித்துமாட மாயவ
ஸ்ரீ சிறீ-ஐயும்-கிலியும்-சவ்வென்னே (௮௬௩)

என்னப்பாபுலத்தியனேபிராணயபீடம் யேகியேகாசிகொண்டிமு
த்ததன்னையயா, கனனப்பாரேசகங்கொண்டதிவதனைக் கருதுவாயீத்திய
ரமவுனங்கொண்டையா, தன்னப்பாதம்பித்துச்சுடரொளியில்நின்று தரு
ாக நூறுருச்செபித்தாயானல், பொன்னப்பாயாக்கினையில்சதாசிவருக்
ி. புரிவாரவர்பிரசன்னம்பூசிப்பாய்தானே (௮௬௪)

பூசித்தாலென்மகனேபுலத்தியனேகேளும் புரியட்டம்நீக்கியேயுப
தசஞ்சொல்வார், ஆசித்துவுபதேசமருள்தருவார்பாரு அறுபத்துநான்கு
த்துமாடத்தான், வாசித்துவுபதேசம்வாங்கிநீமைந்தா வளமாகவவர்பத
பணிந்துநீபோற்று, தெரிசித்துவவருடையகமலபதந்தன்னில் தினந்
தாறுமவர்பதமேபூசிப்பாய்தானே (௮௬௫)

பதமானவைங்கோலத்தயிலமிதைச்சொன்னேம் பரிவானவைங்காய
மழுகதனைச்சொன்னேம், அதமானவைங்காயமெழுகதனாலே ஆடலாம
டமாசித்துமுதற்கொண்டு, மதமானமாரணமிதனாலேயாகும் மவுனகே
ரம்பாய்வாருமிதனாலேதான், சதமானவைங்கோலத்தயிலமதனாலேசதா
உண்மைகேளுமுரைக்கிறேன்மாந்தர்க்கு, தண்மையானதனி யறுகன்வேரு, வண்மையானவரட்பூலாவேர்சமன், திண்மையாய்ப் பாண்டந்திறமாயிடித்திடே. (௫௬)

இடித்துப்பாண்டமெழிலாய்ப்பொதிந்துமே, வடித்துமேசலம் வாகாயிருநாழி, தடுத்திடாமல்தனிப்பதமாய்க்காச்சி, அடுத்துமாவி ன்பாலன்பாய்ச்சரிசேரோ. (௫௭)

சேர்த்துமெழுகுபதமாய்வடித்திடு, தூர்த்துமீசனூர்துப்பயபதம் போற்றி, ஆர்த்தந்தயிலமறையுமோர்மண்டலம், பார்த்துப்பதமாய்ப்பாங்காய்முழுகிடே. (ருஅ)

முழுகும்போது முறைகாச்சலோடிடும், அழுகுங்கண்ணீ ரையுநீர்ப்பாச்சலும், புழுகுவெட்டுப்புகலுநரைமறை, நழுகும் ரோகம் நவின்றோடிப்போகுமே. (ருகூ)

போகுமண்டைப்புகைச்சல்கணப்போடும், ஏகும்பித்த மெழிலாகநாற்பதும், வாகுரோகம்வகுக்குங்கணக்காச்சல், சாகுமாந்தைசடலம்விட்டோடுமே. (சூய)

மிளகுதயிலம்.

ஓடுமாந்தர்க்குறுதியாயுரைக்கிறேன், நீடுமிளகுநேர்ந்தநன்மிளகாம், ஆடுமேபலமறுபதுதானெடு, கூடுந்தக்காளி குறுகச்சமனேடே. (சூக)

எடுத்துப்பாண்டமெழிலாகக்காய்ந்தபின், தொடுத்தக்கியாழந்தோன்றச்சமனதாய், அடுத்துமேபசும்பாலுஞ்சமன்சேரு, விடுத்தவெள்ளெண்ணெய்மேவச்சமன்கூட்டே. (சூஉ)

கூட்டியொன்றாய்க்குறுகவேகாய்ச்சிடு, நீட்டிமண்டலநோராய்முழுகிடு, கூட்டும்ரோகங்குறிக்குங்கயரோகம், பூட்டுமேகம்புகலப்பறக்குமே. (சூரு)

கருஞ்சீரகத்தயிலம்.

பறக்குமாந்தர்ப்பகருங்கருஞ்சீரம், சிறக்கமாகவேசேர்ந்தபலம்நூறு, திறக்கமாகவே தேர்ந்தகியாழஞ்செய், முறக்கமாகவேமுசியப்பாண்டமிடே. (சூச)

இட்டேதீபமெழிலாகமூட்டியே, கட்டேகியாழங் கருதவேகாய்ந்தபின், சட்டமானதோர்சார்ந்தபசும்பாலும், வட்டமாகவேவாகாய்ச்சமன்கூட்டே. (சூரு)

கூட்டிப்பாண்டம்குலாவியேகாய்ச்சிட்டு,நீட்டிமண்டலம்நேராய்முழுகிடில், பூட்டுமேகம்புகலுங்கருமேகம், வாட்டுஞ்சீதம் வரைத்தோடிநீங்குமே. (சூசு)

நீங்குமீளைநெருங்குங்கடமீளை, ஓங்குமேசொரி வுவர்ந்தபெருஞ்சொரி, தீங்குபித்தந்தெறித்திடுநாற்பதும், பாங்குமேனி பதிவிட்டேயோடுமே. (சூஎ)

கார்போகவரிசித்தயிலம்.

ஓடுமாந்தர்க்குறுதியுரைக்கிறேன்; ஆடுங்கார்போகவரிசிநூறு பலம், தேடுநெல்லித்தெளிந்தமாசிக்காயும்,பாடுநாலதில் பாங்காயெ டுத்திடே. (௬அ)

எடுத்துப்பாண்ட மெழிலாயிடித்துமே, தொடுத்துக்கியாழம் தோன்றவேகாய்ச்சிடு, அடுத்துமேபசும்பாலிற்சமன்சேரு, நடித்த யெள்ளெண்ணெய்நலமாய்ச்சமன் தூக்கே. (௬௯)

தூக்கித்தயிலந்துவளவேகாய்ச்சிடு, தாக்கிதேவியின்தாமரைத் தாள்போற்றி, போக்கில்லாமல்புகழாய்மூழ்கிடு, வாக்குதப்பாதுவ றைந்தார்முனிவரே. (௭௰)

அறைந்தமாமுனி ஆயுறுவேதமாம், நிறைந்தசூலை நெருங்கு ங்கபசூலை, பறைந்தவாயு பகரும்பித்தமுடன், துறைந்தசேத்துமந் தொண்ணூறகலுமே. (௭க)

அகலும்ரோகம் அறையுமதமூர்ச்சை, நிகலும்வாந்திநெருங் குங்காசமுடன், புகலும்மாலைபுகைக்கண்திரையறும்,சகலமானநோ ய்த் தாண்டிப்பறக்குமே. (௭உ)

விஷமுஷ்டித்தயிலம்.

பறக்குமுஷ்டி பகரும்விஷமுஷ்டி, திறக்கமாகவேசிறக்கநூ றுபலம், முறக்கமானதோர்முசுக்கைசரிபலம், சிறக்கமானநெய்ச்சி ட்டிசமன்சேரே. (௭௩)

சேர்த்துக்கியாழம்சிறக்கப்பதமதாய், கூர்த்துப்பாண்டங்குலா வியிறக்கிடு, ஆர்த்துமேயிளநீரும்நிம்பச்சாறு, பார்த்துப்பதமாய்ப் பாங்காகக்கூட்டிடே. (௭௪)

கூட்டியெள்ளெண்ணெய்குலாவும்சரியெடை, நீட்டித்தீயும் நெருக்கமாய்மூட்டியே; பூட்டுமேபதம்புகலவேகாய்ச்சிடு, மீட்டும ண்டலம்நுவலமுழுகிடே. (௭௫)

முழுகும்போதுமுறைகாய்ச்சலோடிடும், வழுகுமாந்தைவகு க்குங்கணக்காய்ச்சல், பழுகுமேணிபடிகம்போலேமின்னும், அழு கும்ரோகம் அவனிவிட்டோடுமே. (௭௬)

ஓடுங்கிரந்தி முற்றபெருஞ்சூலை, ஆடிப்வெள்ளை அறைய மரையாப்பு, சாடுரோகம்தணிக்கழல்வாதம்போம், நீடுப்வியாதிநெரு ங்கப்பறக்குமே. (௭௭)

பறக்குமென்றல்லோபாடினூர்சித்தரும், சிறக்கமானதோர்தே ர்ந்ததின்னூலாகும், திறக்கமாந்தர்க்குத் தெளியவுரைத்தது, பறக்க வியாதிபகர்ந்தனர்சித்தமோ. (எஅ)

பொன்னாங்கண்ணித்தயிலம்.

சித்தர்வாக்குத்திசையிலும்பொய்யாது, சுத்தமானசுகந்தபொ ன்னாங்கண்ணி, துத்திமூலி சுகந்தபெருமூலி, மூத்தக்காசுமுயலச்சு மன்தூக்கே. (எகூ)

தூக்கிப்பாண்டநீதுகளவிடித்துமே, நோக்கிக்கியாழம் நுவல வேகாய்ச்சிடு, போக்கில்லாமல்பொருந்தும்பழரசம், வாக்குத்தப்பா யல் வாகாகக்கூட்டிடே. (அ௰)

கூட்டுமிளநீர்குறிப்பாய்சமனதாய், மூட்டுப்பாண்ட முசிய வேகூட்டிடு, பாட்டுமெண்ணெய்பகரும்நல்லெண்ணெயாம், ஆட் டுமேசரி யன்பாகச்சேர்த்திடே. (அக)

சேர்த்துக்காச்சி திறமாயிறக்கிடு, பார்த்துமண்டலம் பகிருமண்டலம், பூர்த்தியாகப்புகழாய்முழுகிடில், கோர்த்துமேபிணிகுண மாகநீங்குமே. (அஉ)

கீழாநெல்லித்தயிலம்.

நீங்குமாந்தர்பிணியகலும்படி, ஓங்குங்கீழ்க்காயிநெல்லிபதக் கெடு, தீங்கில்லாதமெளிந்தபொடுதலே, பாங்குதக்காளிபகரச்சமனெ டே. (அங)

எடுத்துப்பாண்டமெழிலாய்க்கலந்துமே, தொடுத்துமெள்ளெ ண்ணெய்தோன்றச்சமன்கூட்டு, அடுத்துமேபத மன்பாகக்காச்சிடு எடுத்துமண்டலமெழிலாய்முழுகிடே. (அச)

முழுகும்போதுமுறையும்வாதரோகம், நழுகும்பித்தம்நவிலு ம்நாற்பதுவும், ஒழுகுங்கண்ணீருமோங்குந்திமிரமறை, பழுகுமே சொறி பறக்குங்காண்பாரீரோ. (அரு)

பாரீரோகம்பகருஞ்சிரோபாரம், நாரீரோகம் நவிலும்படை ரோகம், தேரீர்மாந்தை தெறிக்குநேத்திராஞ்சனம், சீரீர்பல்நோய் சிறக்கப்பறக்குமே. (அசு)

ஓமத்தயிலம்.

பறக்குமோமம் பகருந்தசபலம், சிறக்குமேசலஞ்சேரவிருதா ணி, திறக்கமானதோர்தேர்ந்தநற்சீரகம், அறக்குதாரமுமவ்விடை கூட்டிடே. (அஎ)

கூட்டுபாண்டங் குலாவிப்பொதிந்துமே, நீட்டுமேசலம்நோரா யொருதூணி, சூட்டுமேபசும்பாலிற்சமனுடன், மூட்டுபாண்ட மூசியவேயேற்றிடே. (அஅ)

ஏற்றித்தீபமெழிலாகமூட்டியே, தூற்றுமக்கினிதுய்யபதமதாய் ஆற்றிக்காச்சியறையவிறக்கிடு, போற்றிமாயனைப் புகழ்ந்துபணிந் திடே. (அகூ)

பணியுமெண்ணெய் பகருமோர்மண்டலம், தணியும்வாரந்து டியாமிருமுறை, அணியுமேனியடவாய்முழுகிடில், வணியுமேபிணி யடர்ந்தவனம்போமே. (கூ0)

போமேசன்னிபுகலும்பதின்மூன்றும், தாமேநீர்பேதிதணியுந் தணியுங்காண், நாமேசொன்னோம்நன்றாகமாந்தர்க்கு, ஆமேசித்த ருமன்பாயுரைத்ததே. (கூக)

ஏலக்காய்தயிலம்.

உரைத்தேனுயுறு வேதமாமிந்நூலு, திரைத்தேன்தன்வந்திரி தெளியவுரைத்திட்டேன், மறைத்தபொருள்களி யாவுமிதிற்றோன்று ம், உரைத்தயேலக்காயுற்றபலம்நூறே. (கூஉ)

நூறுடனேநுவலும்லவங்கமாம், கூறுமேலக்காய்கொள்ளுமதி ற்பாதி, நீறுபோலநெருங்கவிடித்துமே, ஆறுமேபடிசலமுமெடுத் திடே. (கூ௩)

எடுத்துப்பாண்ட மெழிலாய்க்கலந்துமே, தொடுத்துமேபதந் தோன்றவேகாச்சிடு, அடுத்துச்சந்தனமதிற்பலமூன்றிடு, கொடுத்து தீபங்குலாவியிறக்கிடே. (கூச)

இறக்கிமீசனெழிற்பதம்போற்றியே, சிறக்கமண்டலஞ் சீராய் முழுகிடில், பறக்குஞ்சன்னிபகரப்பதின்மூன்றும், துறக்கமாகவே துலைந்தோடிப்போகுமே. (கூரு)

போகும்பித்தம்பொருந்துஞ்சிலேத்துமம், ஏகும்வாதமெழிலா னரோகமும், நோகுமேனிநொறுங்குமதிசாரம், வாகுதன்வந்திரிவ குத்ததுவுண்மையே. (கூகூ)

ஆவாரைபஞ்சாங்கத் தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன்மாந்தர்க்கு, தண்மையானதனிப் பஞ்சமாவாரை, வெண்மையானவிரும்புபசும்பாலில், திண்மையா கத்தெளிவுறக்காச்சிடே. (கூஎ)

காச்சியெண்ணெய்கருதச்சரிசமன், தீச்சிடாமல்தெளியப்பத ம்வடி, மூச்சிடாமல்முழுகவோர்மண்டலம், போச்சுமேபிணி புகல வகலுமே. (௯அ)

அகலுமேகமறையுமந்தாரம்போம், புகலுமீளை பொருமலினை ப்புடன், நிகலும்வெட்டைநெடியகயரோகம், சகலநோய்களுந் தா ண்டிப்பறக்குமே. (௯௯)

துவரங்குச்சித்தயிலம்.

பறக்குமூலம்பகருந்துவரையாம், சிறக்கசுக்குடன்சேர்ந்தபற ங்கியாம், அறக்குச்சந்தனமகிற்கட்டைநன்றாரி, திறக்கமாகவே சே ரச்சமன்கூட்டே. (௱)

கூட்டிப்பாண்டங்குமுறவிடித்துமே, கூட்டுமேசலங் குறிக்க விருதூணி, கூட்டுமேபதங்குலாவியிறக்கிடு, கூட்டுமெண்ணெய்கு ணமாய்முழுகிடே. (௱௧)

முழுகும்போதுமுறைக்காச்சல்தானறும், முழுகும்போது மு சியாப்பித்தமறும், முழுகும்போதுமுறைசன்னிதானறும், முழுகு ம்போது முழுமேனிறுகுமே. (௱௨)

வேலம்பட்டைத்தயிலம்.

இறுகுமேனியிணங்கும்பிணியற, குறுகும்வேலமாம்பட்டை யறுபலம், அறுகன்வேருமறையச்சமனெடை, சிறுகவேசலஞ்சிறக் கப்படிகூட்டே. (௱௩)

கூட்டிப்பாண்டங்குலாவியுழக்கதாய், நீட்டுமெள்ளெண்ணெ ய்நேராய்ச்சமனெடை, மூட்டிக்காய்ந்துமுதிரவிறக்கிடு, சூட்டிம ண்டலஞ்சிறக்கமுழுகிடே. (௱௪)

சிறக்குமேபிணிசேராதொடுங்கிடும், பறக்குஞ்சன்னி பகரப்ப தின்மூன்றும், உறக்கமானவுயர்ந்தமேகப்படை, திறக்கமாகத்தெளி யவறைந்ததே. (௱௫)

நொச்சிலித்தயிலம்.

அறைந்தமாமுனியாயுறுவேதமாம், நிறைந்தமூலிநெருங்கு மிக்காவியம், பறைந்தநொச்சிலி பகருஞ்சமூலமாம், முறைந்தபா ண்டமுசியப்பொதிந்திடே. (௱௬)

பொதிந்துமேசலம்புகலவிருநாழி, வதிந்தகியாழம்வாகாயிறக் கிடு, சதிந்தநிம்பத்தின்சாறுபடியனை, முதிர்ந்தவிளநீர் முறையாய் ச்சரிகூட்டே. (௱௭)

கூட்டுமெண்ணெய்குலாவுஞ்சரியெடை, மூட்டுபாண்டமுதி ரவேகாச்சிடு, நீட்டுமண்டல நோய்புழுகிடு, கூட்டுசன்னிகுறிப் பாய்ப்பறக்குமே. (௩௮)

குறிக்குஞ்சன்னிகுணமாமுகசன்னி, தெறிக்குநேத்திரந்தே ர்ந்தபுழுவெட்டு, முறிக்கும்நரம்புமுனையாம்பிடரியில், தறிக்குமே பிணிதரியாதொடுங்குமே. (௩௯)

மலைவேம்புத்தயிலம்.

ஒடுங்குமாந்தர்க் குறுதிபிணியற, நடுங்குமேசுரம் நவிலவே யோடிட, மடுக்குவேம்புமலைவேம்புசமூலமாம், தடுங்கிடாசலந்தா ணிருதாணியே. (௩௰)

தாணிநீரில்துணிவாய்க்கியாழஞ்செய், காணீராடாதோடைக் கருந்துஞ்சமன், பூணீரெண்ணைபுகன்றிடவவ்விடை, தோணக்காச் சித்துடிப்பாயிறக்கிடே. (௩௰௧)

துடிக்குமண்டலந்தோன்றவொருமுறை, நடிக்கத்தானஞ்செ ய்நவிலும்பிணியறும், முடிக்குமெண்ணெய்முறைதப்பாதொருநா ளும்; படிக்கச்சன்னிபதின்மூன்றும்போகுமே. (௩௰௨)

சன்னி பதின்மூன்றுக்கும் மேற்பூசுந்தயிலம்.

போகசன்னிபுகழாகமாந்தர்க்கு, ஆகவெள்ளெருக் கன்சமூல மெடு, பாகச்சாம்பிராணிபதமாய்பொடித்திடு, வேகக்கியாழம் விரு ம்பியேகாச்சிடே. (௩௰௩)

காச்சும்வேப்பெண்ணை கருதுஞ்சரிசமன், தீச்சிடாமல்சிறக்க ப்பதமதாய், தேச்சுமேனிசிறக்கவேபூசிடில், போச்சுசன்னி புகல்பதி ன்மூன்றுமே. (௩௰௪)

வாதுமைக்கொட்டைத்தயிலம்.

புகலுந்தயிலம் புகழாகமாந்தர்க்கு, நிகலும்வாதுமைக்கொட் டையறுடலம், அகலுமாமணக்கெண்ணெய்சரிசமன், புகலும்ரண் டையும்பொருந்தவரைத்திடே. (௩௰௫)

அரைத்தமேகுழித்தயிலமிறக்கிடு, நிரைத்ததயிலம் நோய்மு ழுகிடில்,மறைத்தகண்புகைமாதர்பிணியறும்,முறைதப்பாமல்முழு கியேகண்டிடே. (௩௰௬)

கண்டமாலைகதறியொடுங்கிடும்,கண்டமேற்படக்கழறும்வியா திபோம், கண்டகாந்தல்கதறியலறிடும்-கண்டசகலநோய்கடுகப்பற க்குமே. (௩௰௭)

பறக்குமென்றுபகர்ந்தேனுயுற்வேதம்; பறக்குமென்றுபகர்ந் தேனேயிம்முறை, பறக்குமென்றுபகர்ந்தேனேசித்தர்க்கு - பறக்கு மென்றுபகர்ந்தேனேமாந்தர்க்கே. (௱௰௮)

சித்தாமுட்டித்தயிலம்.

மாந்தர்க்காகமறைத்தபொருளெல்லாம்-சாந்தமாகத்தனியாயு ரைக்கிறேன்-தேர்ந்தமுட்டிசிறந்தசித்தாமுட்டி- போர்ந்தவேடலம் புகல்நூறுதூக்கிடே. (௱௰௯)

தூக்கிப்பாண்டத்திற்றுய்பநறுக்கிடு-தாக்குமேசலந் தண்ணீர றுநாழி-போக்கில்லாமற்பொருந்தக்கியாழஞ்செய்- வாக்குதப்பாமல் வறையும்பழச்சாறே. (௱௨௰)

சாற்றிலெண்ணெய் தனியாஞ்சரியெடை-ஊற்றிப்பாண்டமு றையவேகாச்சிடு-போற்றிபம்பாள்புகழ்பதம்போற்றியே- தூற்றிதூ பந்துவளக்கொடுத்திடே. (௱௨௧)

கொடுத்துமண்டலக்குறிப்பாய்முழுகிடில்-அடுத்துமேபித்தம கலுஞ்சிரோபாரம் - கடுத்தகாந்தலுங்கண்ணீருகலும் - தொடுத்த ரோகமுந்தொடர்ந்தோடிப்போகுமே. (௱௨௨)

லவங்கப்பட்டைத்தயிலம்.

போகுமாந்தம்பொருமலிளையறும் - ஆகுப்பட்டையருஞ்சன் னலவங்கமாம்-பாகுசீரம்பகரும்நற்சீரகம்-ஏகுமஞ்ச ளெழிலாம்பன் னீர்ப்பூவே. (௱௨௩)

பூவுங்கூட்டிப்புகல்விடித்துமே - மேவும்பாண்டத்தில்விரும்பி யேகாச்சிடு-ஆவுமென்றபசும்பால்சரியெடை-பாவுமெண்ணெய்பத மாகக்கூட்டிடே. (௱௨௪)

கூட்டுமெண்ணெய்குலாவியேகாச்சிடு - சூட்டுமண்டலஞ்சுக மாய்முழுகிடு-வாட்டுபித்தம்வகையாமிருமல்போம்- பாட்டுதன்வந் திரிபாடினதுண்மையே. (௱௨௫)

நன்னாரித்தயிலம்.

உண்மையாகவுரைக்கிறேன்மாந்தர்க்கு-வண்மையாகவருக்கு நன்னாரியை-தண்மையாகத்தனிப்பலம்நூறெடு- திண்மையாகத்திற மாயெடுத்திடே. (௱௨௬)

எடுத்துப்பாண்டமெழிலாய்ப்பொதிந்திடு - தொடுத்தமதுரந் தோன்றுலவங்கமாம்-வடித்தசூஞ்சாந்துவருக்குங்கிளியூறல் - நடித்த பச்சிலைகிச்சிலிதூக்கிடே. (௱௨௭)

தாக்கியகஸ் தூரிதுய்யதாளிசமும், தாக்குமிருவேலி தனியக்கி ராகாரம்-போக்கில்லாமற்பொருந்துமுத்தக்காசு- வாக்குசர்தனம்வளமாகத் தூக்கிடே. (௱உஅ)

தூக்கியேசரக் கொன்றுவரைப்பலம்-தாக்கியேபசும்பாலிலரைத்திடு-போக்கில்லாமற்பொருந்துங்கியாழத்தில்-தேக்குமெண்ணெய்திறமாய்ச்சரிகூட்டே. (௱உக)

கூட்டுமூலிகுறிக்கும்வல்லாரியாம்-வாட்டுங்கையான்வகையாம்பொன்னாங்கண்ணி-ஊட்டுமூலியுழக்குச்சமன்சேரு-பாட்டுமேபகம் பாங்காய்வடித்திடே. (௱கூ௰)

வடித்துயெண்ணெய்வளமாய்முழுகிடில்-நடித்தசோகை நவிலுங்காமாலைபோம்-வெடித்தமேனிவிரும்பும்பொன்னிறமாம்-துடித்தபித்தமுந்தோன்றுமேகம்போமே. (௱கூக)

போமேமேகம்பொருந்தும்பிரமியம் - ஆமேகிரந்தியறையும்திரிழிவு-சாமேமருந்திடுதணியமுறிந்திடும்-நாமேசொன்னேம்நலமானமாந்தர்க்கே. (௱கூஉ)

மாம்பட்டைத்தயிலம்.

மாந்தர்க்காகவேமாம்பட்டைத்தயிலமொன் - றேர்ந்தபட்டையிருநாற்பலமெடு-சார்ந்ததிலப்பனைசாற்றும்பலமைந்து-போர்ந்தபிட்டான்புகலச்சரிகூட்டே. (௱கூ௩)

கூட்டிப்பாண்டங்குலாவியிடித்துமே-நீட்டுங்கியாழ நீரையாக்காச்சிடு-பாட்டுமெண்ணெய்பகருஞ்சரியெடை-மூட்டிக்காச்சிமுதிரவடித்திடே. (௱கூச)

வடித்தயெண்ணெய்வளமாகமூழ்கிடு-நடித்தமேகம்நவிலும்பிரமியம்-கடித்தசில்விடங்காணுதொடுக்கிடும் - முடித்ததயிலமுறையும்பொய்யாதிதே. (௱கூ௫)

கையாந்தகரைத்தயிலம்.

பொய்யாதயாபுகலுங்குருமொழி-அய்யாதன்வந்திரியறியவுரைக்கிறேன்-கையாந்தகரைகருதுந்தயிலமாம் - மெய்யாமாந்தர்க்குவிரும்பியளித்ததே. (௱கூசு)

விரும்புமூலிவிளக்குந்தசபலம்-கரும்புந்தகரை காட்டுஞ்சரிபலம்-பொருந்துமிளகுபூணவொருபலம் - திருந்துமேபசும்பாலிற்சமன்சேரே. (௱கூஎ)

சேர்த்துக்கியாழந்திறமாய்வடித்திடு, பார்த்துமெண்ணெய்ப கருமவ்விடையாம், தீர்த்துமேபதந் தெளிவாகக்காய்ச்சிடு, ஆர்த்து மாயனடியிணைபோற்றிடே. (௩௩௮)

போற்றிமண்டலம்புகழாய்முழுகிடு, தூற்றுமேகந் தொடர்ந் தபித்தமறும், ஆற்றுங்கோபமழலைதணலறும், சாற்றுந்தயிலஞ்சரிமு றைதப்பாதே. (௩௩௯)

மருதம்பட்டைத்தயிலம்.

தப்பாதையாதரணியில்மாந்தர்க்கு, ஒப்பாமருதம் பட்டைத்த யிலங்கேள், செப்பாமூலிசிறந்தபொடுதலை, அப்பாமூன்றுமறையப் பாண்டமிடே. (௩௪௰)

பாண்டந்தன்னிற்பதக்குசலமிடு, பூண்டகியாழம் பொருந்த வேசெய்திடு, ஆண்டுமெண்ணையறியச்சமனதாய், தீண்டுமேபதந் தெளியவேகாச்சிடே. (௩௪௧)

காச்சும்வாலை கருதுமஞ்ஞேன்மணி, ஆச்சிபாத மடிவணங்கித் தொழு, மூச்சிடாமல்முறையுடன்முன்முழு, போச்சுமேகம்புகன் ஞேடிப்போகுமே. (௩௪௨)

போகும்பாண்டுபுகலுங்காமாலைபோம், ஏகும்ரோமமெழும்பு ம்பெருஞ்சிரங், காகுமேசொரிகருமேகந்தானறும்-பாகுதன்வந்திரி பாடினதுண்மையே. (௩௪௩)

கொழிஞ்சிப்பட்டைத்தயிலம்.

உண்மையாக வுரைக்கும்பரஞ்சோதி - வெண்மையானதோர் வெண்கொழிஞ்சிரசம்-தண்மையான தனிநெல்லிக்காய்ரசம் - திண் மையானதெளிந்தகியாழமே. (௩௪௪)

மேவுமெண்ணெய்விளக்குஞ்சரிசமன்- தாவுமேபதந்தவறுமற் காச்சிடு-பாவுமண்டலம்பண்பாய்முழுகிடில்-ஏவும்பித்த மிறங்கியே யோடுமே. (௩௪௫)

ஓடுஞ்சூலையொடுங்குமேகச்சூலை- நீடுங்கிரந்திநெருங்குஞ்சிற ங்குபோம், கூடும்ரோகமுங்கூண்டோடொடுங்கிடும் - பாடுதன்வந் திரிபாட்டுபொய்யாதிதே. (௩௪௬)

அழிஞ்சில் தயிலம்.

பொய்யாதையாகுருவின்பகர்மொழி, அய்யாஅழிஞ்சில்தயில முரைக்கிறேன்-மெய்யாசமூலம்விரும்பும்நூறுபலம்-செய்யாநொச் சிச்சிறக்கச்சமன்கூட்டே. (௩௪௭)

கூட்டுப்பாண்டக்குமுறப்பொதிந்துமே - நீட்டுக்கியாழம்நே ராய்க்காய்ந்துமே - பூட்டுமெள்ளெண்ணெய் புகலவேகாய்ந்தபின் சூட்டுத்தயிலம்சுறுக்காய்முழுகிடே. (௱சஅ)

முழுகும்போதுமுசியாப்பெரும்பாடு-வழுகுமிசிவுவாங்காத்தி மிர்நோயும்-தழுகும்பாண்டுவுந் தரியாதொடுங்கிடும்-தொழுகுமாந் தர்க்குத்தோன்றவறைந்ததே. (௱சகூ)

பஞ்சமூலித்தயிலம்.

அறையும்பஞ்சமூலித் தயிலமுறைப்பேன்பார்-வரையுமூலிவ குக்கும்பொடுதலை-நிறையுந்தக்காளிநேர்ந்தமுசுக்கையும்-திறையும யிற்பீலிசேரவேதூக்கிடே. (௱ரு0)

தூக்குங்கொத்தான்துடியாய்ச்சமனெடு-தாக்குமூலிதணியக்கி யாழஞ்செய்-நோக்குமெண்ணெய்நொருங்குஞ்சமனடை - வாக் குதப்பாமல்வாகாகக்காய்ச்சிடே. (௱ருக)

காய்ச்சிமாயன்கருதும்பதாம்புயம்-மூய்ச்சிடாமல் முழுகவோ ர்மண்டலம்-போச்சுவியாதிபொருமலீளையறும்-பாச்சுரோகம் பகரு ம்ரோகம்போமே. (௱ரு௨)

போமேசூலைபொருந்தும்வாதசூலை, சாமேபிரமியம்சாராதொ ருநாளும்-தாமேபித்தமுந் தாண்டிப்பறந்திடும்-நாமேசொன்னோம் நவிலுமுனிவரே. (௱ருங)

பஞ்சபூசணத்தயிலம்.

முனிவர்வாக்குமுறைபொய்யாதொருநாளும்-கனிவுடன்மது ரம்லவங்கப்பட்டை-தொணியுநன்னாரிதோன்றுக்கருஞ்சிரம் - தனிய மானதகுந்தமுத்தக்காசே. (௱ருச)

காசுடன்சமன்கருதவெடுத்திடு - மாசில்லாத மகிழச்சலம்படி கைசிநீருமுறையுஞ்சமனதாய்-வாசமெண்ணெய் வகுப்பாய்ச்சமன் கூட்டே. (௱ருரு)

கூட்டிப்பாண்டங் குமுறவடித்துமே-பூட்டுமண்டலம்புகழாய் முழுகிடில்-காட்டுமேகங்கதறியேயோடிடும்-கோட்டுவாயுங்குலைந் துபறக்குமே. (௱ருசா)

பறக்குஞ்சூலைபகருங்கசரோகம்-திறக்கும்பிரமியஞ்சேராதொ டுங்கிடும், திறக்கும்வியாதிநெருங்குநேத்திராஞ்சனம்-சிறக்கப்போ மெனச்செப்பினர்முனிவரே. (௱ருஎ)

பித்தந்திரத்தயிலம்.

செப்பும்பித்தந்திறமாகநீங்கிட - ஒப்புஞ்சீரகமோக்குமதுரமாம்-தப்பில்லாததனிலவங்கமுடன்-மெப்புக்குட்டோரி விரும்புங்கொத்தமல்லி. (௩௫௮)

மல்லிசந்தமணக்குமிருவேலி - கொல்லிமூலிகுறிக்குமகிற்கட்டை-மல்லிகோஷ்டம்வகுக்குங்கருவாவாம்-பல்லிமூலிபகருஞ்சமன்தூக்கே. (௩௫௯)

தூக்கிச்செங்கழுநீர்கொத்தமல்லியாம் - தாக்கிப்பாண்டந்தணியக்கியாழஞ்செய்-போக்கில்லாதபொருந்தும்பசும்பாலாம், வாக்குத்தப்பாமல்வழங்குமிளநீரே. (௩௬௰)

நீராம்நிம்பத்தின்பழச்சாற்சரியெடை, சாரமூலித் தனியச்சரியெடை, கூராமெண்ணெய் குறித்திடுமவ்விடை, நேராய்க்காய்ச்சிநெகிழவெடுத்திடே. (௩௬௧)

எடுத்துவாணி யெழில்பதம்போற்றியே, தொடுத்துமண்டலந்தோன்றமுழுகிடில், நடித்தரோகம்நவிலுங்கயரோகம், துடித்தயிருமல்துகன்றேடிப்போகுமே. (௩௬௨)

சிலேத்துமந்தொண்ணூற்றுறுக்குத்தயிலம்.

போகுஞ்சேத்துமந் தொண்ணூற்றுறுமற, ஏகுஞ்சந்தமெழிலானநன்னாரி, ஆகுங்கோஷ்டமறையுமதுரமாம், வாகுபற்படம்வாகாய்ச்சமன்சேரே. (௩௬௩)

சேர்த்துக்கார்போகஞ் சிறந்தவாலுழுவை, பார்த்துப்பூண்டுபகருங்கருஞ்சிரம், ஆர்த்துமிளகுஅரியசுக்குடனே, கோர்த்துவிளங்கங்குலாவுமுந்திரியே. (௩௬௪)

ஏகும்பட்டையெழிலானசங்கம்வேர்-ஆகுஞ்சீர மறையுஞ்சல்லிவேரு, பாகுஞ்சாக்குபகர்ந்தசரியெடை, வாகுபாண்டம்வகையாயிடித்திடே. (௩௬௫)

இடித்துக்கியாழமெழிலாயிறக்கிடு, அடுத்துமேபசும்பாலிற்சமன்சேரு, தொடுத்துமெள்ளெண்ணெய்தோன்றிடவவ்விடை, சடுத்தமாகத்தனிப்பதங்காச்சிடே. (௩௬௬)

பதமாமெண்ணெய்பகருமோர்மண்டலம், நிதமாம்வியாதிநெருங்கமுழுகிடு, விதமாம்ரோகம் விரும்புஞ்சயரோகம், மதமாமீளையொடுங்கிடுஞ்சன்னியே. (௩௬௭)

சன்னிநேத்திரஞ்சாரும்பிடரிநோய், வன்னிபித்தம்வருக்குஞ் சயகாசம், பன்னுரோகம்பகரும்பெருஞ்சூலை, சென்னிநீர்ப்பாய்ச்ச ல்சேராதடங்குமே. (௱௬௮)

அடங்குரோகமறையும்பெருரோகம், முடங்கும்வாயு முயன் றபிடிப்பறும், தொடங்குநீர்ப்பாய்ச்சல்தொடாதடங்கிடும், அடங் குமாந்தர்க்கறியவுரைத்ததே. (௱௬௯)

சோகை காமாலைக்குத்தயிலம்.

உரைக்குஞ்சுக்குமுயர்ந்தமிளகுடன், திரைக்குமோமந்தெளி ந்தசீரகமும்,உரைக்குஞ்சாதிக்காயோங்குரோகணியும், நிரைக்குந் தேக்குநிறைந்தவரத்தையே. (௱௭௰)

அரத்தையிஞ்சியறையுங்கடுக்காயும், காத்தையேலங் கழறுங்கி ராம்புடன், குறைத்திடாமல்குறிக்குஞ்சமனதாய், நிறைத்துமேபல ம்நெகிழவே தூக்கிடே. (௱௭௧)

தூக்கியேபசும்பாலில்லரைத்திடு, தாக்குமெண்ணெய் தனியாய்க் கலந்துமே, போக்கில்லாமற்பொருந்தவேகாச்சிடு, நோக்குமனோ ன்மணித்தாயைப்பணிந்திடே. (௱௭௨)

பணிந்துபோற்றிப்பகருந்தயிலத்தை, துணிந்துமண்டலந்தோ ன்றமுழுகிடில், அணிந்தமேனி யறையுங்காமாலைபோம், பணிந்த வாய்வுபறந்தோடிப்போகுமே. (௱௭௩)

போகுங்குன்மம்பொருந்துநீர்ச்செரிப்பு, ஆகுமக்கினிமந்தம் நெஞ்செரிவு, வேகுமேனிவினைபறந்தோடிடும், வாகுதன்வந்திரி வ குத்தமுறைபாடே. (௱௭௪)

பித்தவாந்தி கண்ணோய்தீரத்தயிலம்.

டாடும்வாந்திபகருங்கண்ணோயற, நீடுமாந்தர்க்கு நெருங்கும் பிணியற-கூடும்பொன்னாங் குறிக்குஞ்சிறுகீரை-ஆடுஞ்சண்பகமரிய சீரகமே. (௱௭௫)

சீரம்பூநாகஞ்சிறந்தமதுரமாம், காரமாங்கருஞ்சீரம்நற்கோஷ் டமாம்-சாரமாஞ்சீந்தில்சாற்றுஞ்சண்பகமாம்-கோரநிம்பங் குலாவும் பசும்பாலே. (௱௭௬)

பாலுஞ்சரக்குபகருமொருபலம், மேலுமவ்விடை மேவுஞ்சரி யெடை, நாலுமெள்ளெண்ணெய்நவிலப்பதமதாய், சாலுபாண்டந் தனிப்பதமிறக்கிடே. (௱௭௭)

இறக்கியம்டாளெழில்பதம்போற்றியே, சிறக்குமண்டலஞ்சேர முழுகிடில், முறக்கமானவியாதிமுடியறும், பறக்குங்கண்ணோய்ப கருந்தயிலமே. (௱௭௮)

பகரும்வாந்திபகர்பித்தம்நாற்பதும், நுகரும்வெட்டைநொறு ங்குழயக்கமும், தகருஞ்சேத்துமந் தாண்டிப்பறந்திடும், முகருஞ் சோகைமொழியவே நீக்குமே. (௱௭௯)

கண்ணோய்க்குத்தயிலம்.

நீங்குமதுரநெருங்குஞ்சண்பகமாம்,ஓங்குசீரமுயர்ந்தவாலுழு வை, வாங்குகார்போகவரிசிதேவதாரம், ஆங்குசந்தனமகிற்கட்டை சேர்த்திடே. (௱௮௰)

சேர்த்துவேலிசிறக்கும்விலாமிச்சு, பார்த்துவறுகன் பகருமரம ஞ்சள், கோர்த்துநொச்சிகுலாவுங்கருநொச்சி, ஆர்த்துசெங்கத்தாரி சமனெடே. (௱௮௧)

எடுத்துமேபசும்பாலிலரைத்திடு, தொடுத்துமெண்ணெய் துவ ளக்கலக்கியே, அடுத்துமண்டலமன்பாய்முழுகிடில், விடுத்தகணத்தி ன்வியாதியகலுமே. (௱௮௨)

அகலுங்கண்ணோ யறையுந்தொண் ணூற்றாறும், பகலுஞ்சூரி யன்பனிபோலகன்றிடும், நிகலுஞ்சூலை நெருங்கும்பீனிசம்போம் ககலுந்தும்மல் கருதுங்கபாலமே. (௱௮௩)

மேவுநாசிகா பீடரோகமறும்· காவுதேசிகங் காதினிற்சீழறும் நாவுதந்தம் நவிலும்ரோகமறும், சாவுஞ்சூலைசனிகுஷ்டமேகுமே()

சொரிசிரங்குக்குத்தயிலம்.

ஏகுமாந்தர்க் கெழிலாஞ்சொரிசிரங், காகுநாற்றங் கதறியே யோடிட, ஆருஞ்சுக்குவரியரோகணியும், தேகுங்கண்டங்கத்திரியுந் தூக்கிடே. (௱௮௫)

தூக்கியேமருந்துடியாம்பெருமருந், தாக்கிக்கூந்தல்தனியிரு வேலியாம், போக்கில்லாமற்பொருந்துமிளநீரால், வாக்குதப்பாமல் வாகாயரைத்திடே. (௱௮௬)

அரைத்துமேபசும் பாலிற்சமனெடை, திரைத்தமுக்கண்ணின் பாலுஞ்சரியெடை, உரைத்தவெள்ளெண்ணெ யோங்குமிரண்டெ டை, கரைத்துமேபாண்டங்கழறியேயூற்றிடே. (௱௮௭)

ஊற்றிப்பாண்டத்தி லோக்குங்காடாக்கினி, ஆற்றியேதயிலத் தையிறக்கிமுன், போற்றியீசனுர் பொற்பதத்தாள்பணிந், தேற்றித் பதாபமுங்கொடுத்திடே. (௱அஅ)

கொடுத்துமண்டலங்குமுறமும்முழுகிடில், அடுத்துமேக சிறங்கு முதலறும், தொடுத்துமேசொரி தோன்றுதொடுங்கிடும், வடுத்ததன் வந்திரிவாக்குபொய்யாதிதே. (௱அகூ)

பொய்யாதையாபுகலுந்தன்வந்திரி, அய்யாபத்தியமன்பாயுரை க்கிறேன், மெய்யாய்வெள்ளாட் டிறைச்சியுப்புக்கண்டம், துய்யா நெய்யுந்துவளவேகூட்டிடே. (௱கூ0)

கூட்டுமேபசும்பச்சைப்பயறுடன், நீட்டுமுள்ளங்கி நேர்ந்தப சும்பாலும், ஆட்டுமூளையறையும்புருமுதல், கூட்டுமாந்தர்க்குக்கு லாவவறைந்ததே. (௱கூக)

மேகம்-உக-க்கு-தயிலம்.

அறையுமேகமலறியேயோடுதற், குறையும்பத்திரி கூறுங்கிரா ம்புடன், நிறையுஞ்சாதிக்காய்நேர்ந்தபறங்கியு, மறையும்வேலிமதி ப்பாகத்தூக்கிடே. (௱கூஉ)

தூக்கிகோஷ்டமுந்தய்யமுத்தமுடன், தாக்குந்தாளிசந்தனி யாமிலாமிச்சு, தேக்குமாஞ்சில்திறமானசீந்திலும், வாக்குதப்பாமல் வகையாய்ச்சமனெடே. (௱கூ௩)

எடுத்துமேபசும்பாலிலரைத்திடு, தொடுத்துமெள்ளெண்ணெ ய்தோன்றவேநாலெடை, விடுத்தசெவ்விளநீரதிற்பாதிடை, அடுத்த நிம்பத்தின்சாற்றிற்கால்கூட்டிடே. (௱கூச)

கூட்டிப்பாண்டங் குமுறவேயூற்றிடு, நீட்டித்தீபாக்கினியா யெரித்திடு, பூட்டியேபதம்புகலவேகாச்சிடு, சூட்டிமாயன்றுகள்பத ம்போற்றிடே. (௱கூரு)

போற்றியெண்ணெய்புகலுமோர்மண்டலம், ஆற்றிவாரமறை யுமிருமுறை, சாற்றுஞ்சித்தர்தனிவாக்குபொய்யாமல்,போற்றியிரு முறை பொருந்தமுழுகிடே. (௱கூசு)

பொருந்தயெண்ணெய் புகழாய்வியாதிபோம், குருந்தும்பிர மியங்குறுகியடங்கிடும், திருந்துமோகமுந்தீராப்பிணியறும்- சொரி ந்துமேபடைசுருக்காய்ப்பறக்குமே. (௱கூஎ)

பறக்குமென்றல்லோபாடினுனொன்குரு, பறக்குமென்றல்லோ பாடினுனொன்முனி, பறக்குமென்றல்லோபாடினூர்சித்தரும்,பறக்கு மென்றல்லோபாடினூர்மாந்தர்க்கே. (௱௯௮)

சகலவாய்வுக்குந்தயிலம்.

மாந்தர்க்காகவறைகிறேன்தயிலங்கேள், ஆர்ந்தசிரமரியதிப்பி லியும், போர்ந்தசுக்குபொருந்துநற்சீரகம், தேர்ந்தமிளகு சிறந்ததி ப்பிலியே. (௱௯௯)

சிறந்தவிளங்கஞ்சிறியதான்றிக்காயும், வறந்தநெல்லிவகுக்கு மாசிக்காயும், பறந்தரோசன் பகர்கடுக்காயுடன், துறந்தநன்னுரி தோன்றச்சமன்கூட்டே. (௨௱)

கூட்டும்நொச்சிக்கியாழத்திற்றுனனே, பாட்டுமேபசும்பாலிற் சமனெடு, ஆட்டும்வேப்பெண்ணெயன்பாயதிற்பாதி, கூட்டுமெள் ளெண்ணெய்குறிப்பாய்நாலுகூட்டே. (௨௱௧)

கூட்டிப்பாண்டங்குமுறவேகாச்சிடு, நீட்டிமண்டலம் நேரா ய்முழுகிடு, வாட்டுகுன்மம்வளைகடந்தோடிடும், மாட்டும்வாத ம றைந்தோடிப்போகுமே. (௨௱௨)

போகும்வாயுவு பொல்லாக்கழல்வாதம், ஏகும்வாயுவிறங்கும் நரிவாதம், பாகும்வாதம்பகரும்பட்சவாதம்,நோகுமண்டத்தின்வா யுவகலுமே. (௨௱௩)

சூரிவித்துத்தயிலம்.

அகலுமாந்தர்க்கறையுந்தயிலங்கேள், நிகலுமேசூரிவித்துதச பலம், புகலுமேபாண்டம் பொதிந்துவிடித்துமே, தகலுமேதனிவிற காலெரித்திடே. (௨௱௪)

எரித்துமேயதிலெண்ணெயொருநாழி, பொரித்துமேகற்கம் பு கலுமுறைகேளு, அரித்துமேயாறுமாதக்காடிநாழி, கரித்துமேசுக்கு க்கடுகவோர்பலமிடே. (௨௱௫)

இட்டேயடுப்பிலிதமெழுகானபின், தொட்டேயோர்மண்டல ந்தோன்றமுழுகிடில், விட்டேயகன்றிடும் வீறுனகிரந்தியும், பட் டேயோடிடும்பாழானகுட்டமே. (௨௱௬)

குட்டமுடன்சூலை குன்மம்பதினெட்டும், கிட்டமுடன்கிரா ணிதிறமானவுள்மூலம், கெட்டகுடுமுதல்கெக்கரித்தோடிடும்,சட்ட மாகவேசாற்றினதுண்மையே. (௨௱௭)

உண்மையானமலக்கட்டகன்றிடும், தண்மையான சகலவியாதியும், கண்மையாகவேகலங்கிப்பறந்திடும், வண்மையாகவகுத்தார்முனிவரே. (உ௱அ)

கீழ்க்காய்நெல்லித்தயிலம்.

முனிவர்வகுத்த முறையானதயிலங்கேள், கனிவாய்க்கீழ்க்காய்நெல்லிகருதுசமனதாய்; நணியாதிடித்துநல்லாற்றுநீர்விட்டு,முனியாய்க்கியாழமுயற்சியாய்ச்செய்திடே. (உ௱௯)

செய்துமேயெட்டொன்றாய்ச் சிறக்கவேகாச்சிடு, வைதுமேயென்னெண்ணெய்வாகாய்ப்படிரண்டு, பெய்துமேசர்க்கரை புகழாய்ப்பலமைந்து, நைதுமெண்ணெய்நலமாகக்காச்சிடே. (உ௱ய)

தீரும்வியாதி.

காச்சுமண்டலங்கருதமுழுகிடில், போச்சுபித்தம் புகலும்வாதமறும், நீச்சுவாந்திநெடியகபமறும் - ஆச்சுதைல மறைந்தார்முனிவரே. (உ௱யக)

காசரோகத்தயிலம்.

முனிவராயுறுவேதமுறையிது, கனிவுடன்காசரோகத்தயிலங்கேள், வனியும்நன்னாரிவரையுங்கோட்டாசிலே, தனியன்மூலமுஞ்சாற்றும்றுகெடே. (உ௱யஉ)

எடுத்துநன்னாரியெழிலானசுக்குடன்,தொடுத்தபூஞ்சாந்துந்தோன்றுங்கிளியூறல், அடுத்தகொம்பறக்கானசெஞ்சந்தனம், கொடுத்துப்பாண்டங்குமுறப்பொதிந்திடே. (உ௱யங)

பொதிந்துமேசலம்போற்றுமறுநாழி,வதிந்துங்கியாழம்வளமாகக்காச்சியே - கதிந்துமண்டலங்களிப்பாய்முழுகிடில், கொதிந்தமேனிகொதிப்புமடங்குமே. (உ௱யச)

அடங்கும்ரோகமறையுங்காசரோகந், தொடங்குமேகந்தொல்லைப்பிரமேகம், நடுங்குங்காச்சல்நவிலும்பித்தரோகம், ஒடுங்குமேனியுடல்தளிர்காணுமே. (உ௱யரு)

காணும்வெள்ளைகருதுங்கயரோகம், தேர்ணும்வாந்தி தொட்டரும்பித்தரத்தம், ஊணுமூலவியாதிப்பிணியறும், சாணுமேனிச்சடப்பிணிபோகுமே. (உ௱யசு)

போகும்பத்தியம் புகலுங்காடைபுறா, ஆகுமிறைச்சியரியவுப்புக்கண்டம்- வாகுங்கச்சல்வகுக்குமுருங்கையும் - பாகுஞ்சீதளப்பண்டமகற்றிடே. (உ௱யஎ)

கிராணிக்குத்தயிலம்.

அகற்றுங்கிராணிக்கறையுந்தயிலங்கேள், புகற்றும்பத்திரிபோ ற்றுஞ்சாதிக்காயும், நிகற்றும்லவங்கம்நேருங்கசகசா,சகற்றும்விடை யஞ்சாற்றுஞ்சமன் தூக்கே. (உாய௮)

தூக்கிப்பாண்டத்திற் றுய்யநொறுக்கிடு, தாக்கியேசலந் தண் ணீரறுபடி, போக்கில்லாமற் பொருந்தக்கியாழஞ்செய், வாக்குதப் ப்பாமல்வாலுழுவையெடே. (உயய௧)

எடுத்துக்கியாழ மெழிலாயரைத்துமே, தொடுத்தவாமணக்கெ ண்ணெயொருநாழி, விடுத்தயெள்ளெண்ணெய்மேவுமிருநாழி,அடு த்தபாண்டத்திலன்பாகக்காச்சிடே. (உஉய)

காச்சியம்பாள்கரு துமனேன்மணி, ஆச்சிபாத மடிவணங்கித் தொழு, மூச்சிடாமல் முழுகுமோர்மண்டலம்,வீச்சுங்கிராணிவிரை ந்தோடிப்போகுமே. (உஉ௧)

போகுங்கிராணிபுகலுமதிசாரம், ஏகும்பாண்டுமெழும்புநீரா ம்பலும், வாகுபித்தம்வரையுங்காடுறங்கும், போகுமாமுனிபுகன்ற னர்சித்தரோ. (உஉஉ)

சித்தர்வாக்குத் திசையிலும்பொய்யாது, பத்தர்மாந்தர்க்குப்ப கருமொருமுறை, சித்தமிரங்கித்தெளியவுரைத்திட்டேன், நித்தஞா னிநெகிழவறிந்திடீர். (உஉ௩)

திமிர்ப்படைக்குத்தயிலம்.

அறிந்தபோது அறையுமொருபாகம், செறிந்ததாமரைசேரும் வெண்துளசி, முறிந்தவேம்புமுயலும்நிலவேம்பு, தறிந்ததிப்பிலி சாற்றும்பருத்தியே. (உஉ௪)

பருத்திவெந்தோன்றிபகரும்நாகமல்லி, சிறுத்தசந்தனஞ்சிற ந்தபொன்னுங்கண்ணி, தரித்தபுள்ளடிதாங்குஞ்சமுத்திரா, ஒருத்தர் சொல்லவும்வேணும்பறங்கியே. (உஉ௫)

பறங்கியாச்சாபகருஞ்சுரையுடன், அறங்கமான வறையும்புல் லுருவி, முறங்கமாகமுகிழ்சிறுமாஞ்சியும், துறங்கமாகவேதோன்று மேலந்தானே. (உஉ௬)

ஏலம்பட்டை யெழிலாமெட்டிக்கொட்டை, வேலம்பட்டைவி ரும்புங்கருவாவும், தாலமேபுகழ்தாங்கும்பூனைக்காலி, கோலந்தில்லை யாங்கூறச்சமன்கூட்டே. (உஉ௭)

கூட்டிப்பாண்டங்குலாவியிடித்துமே, நீட்டிக்கியாழம்நெருங் கவேகாச்சிடு, பூட்டுமெண்ணெய்புகலுஞ்சரியெடை, தீட்டுமேபத ந்திறமாயிறக்கிடே. (உஉஅ)

இறக்கியம்பாளெழிலடிபோற்றியே, உறக்கமண்டலமுற்றுமு ழுகிடில், கறக்கும்வியாதிகழறுந்திரிபலை, பறக்குமென்றல்லோ பா டினார்முனிவரே. (உஉகூ)

குசிகாவாயுவுக்குத்தயிலம்.

முனிவர்வாக்குமுழுமையும்பொய்யாது, கனிவுடன்மாந்தர்க ழறும்வாயுவுக்கு, வனிதனுவலின்பட்டைவிடையமாம், தனியனுனை தழைக்கோனைகொன்றையே. (உகூ0)

கொன்றைதிப்பிலிகூறுங்கொல்லன்கோவை, அன்றெரித்தான ஊறயுமரத்தையாம், குன்றுநெல்லிகுலாவும்நிலவாகை, தன்றுபுன் குதனிமாவிலிங்கையே. (உகூக)

விலங்குதொண்டைவிரும்புங்கரும்புடன், அலம்புஞ்சீந்திலினு வாளைபஞ்சாங்கம், புலம்புமேசுரைபுகலுமரசுடன், சலம்புமுட்டி யுந்தனியச்சமனெடே. (உகூஉ)

எடுத்துப்பாளைமெழிலானசந்தனம், அடுத்ததாமரையானதிரிப லை, தொடுத்தருரையுந்தோன்றப்புளிமாவும், விடுத்தழுங்கிலின்விரு ம்புமெட்டியே. (உகூகூ)

எட்டிநீர்ச்சுண்டியெழிலாம்பூனைக்காலி, கட்டியானகங்கருது ம்விடத்தேறி, தொட்டிதும்பைதுடருநெருஞ்சிலும், மட்டிப்பாலு ம் வளமாகத்தூக்கிடே. (உகூச)

தூக்கிவெட்டிவேர்துய்யகாத்தொட்டி, தாக்குகஸ்தூரிதனியா மரமஞ்சள், போக்கில்லாதபெருங்காயம்நீர்முள்ளி, வாக்குதப்பாம ல்வன்கடம்பன்கூட்டே. (உகூரு)

கூட்டிநாயகங் குலவுஞ்சிலந்தியாம், நீட்டுவெந்தயம்நெரும் பெருமருந், தாட்டிநன்னாரிசகுந்தவெட்பாலையாம், வாட்டிநொச் சிவருக்கின்றமுல்லையே. (உகூசா)

முல்லைதான்றிமுகிமுமிலந்தையாம், அல்லிமாஞ்சிலரியகடம்ப னும், மல்லியின்பூராயணக்கும்விலாமிச்சு, கொல்லிகோஷ்டமுங் கூ றுமதுரமே. (உகூஎ)

கூறும்வேலிகுறிக்குஞ்சதாவேலி, நீறும்வில்வம் நிகழும்நாய் வேளையாம், தூறுந்துத்தியுந்தோன்றச்சமூலமாம், ஆறுமிரஞ்சனம ழகாகச்சேர்த்திடே. (உ௩அ)

சேர்த்துவொன்றாய்ச்சிறக்கயிடித்துமே, பார்த்துப்பாண்டம்ப தமாய்ப்பொதிந்திடு, ஆர்த்துமேசலமாறிருநாழியாம், கோர்த்துக்கி யாழங்குலாவியிறக்கிடே. (உ௩௯)

இறக்கிக்கொழு மெழிலாய்வடிசெய்து, சிறக்குமெள்ளெண் ணெய்சேர்த்திடுமவ்விடை, திறக்குமாமணக் கெண்ணெயாம்பாலி டை, உறக்கமூன்றையுமொன்றாய்க்கலந்திடே. (உ௪0)

இட்டேயெண்ணெயெழில்பதங்காச்சிடு, கட்டாய்மண்டலங்க ருதமுழுகிடில், இட்டமாய்சூதவாயுந்தானறும், சட்டமாகதன்வந் திரியுரைத்ததே. (உ௪௧)

உரைத்தார்மாமுனியுற்றவாயுற்வேதம், திரைத்தநாலாயிரத்து ச்சில்வாணமும், வரைத்தமேபிணிவாகாய்வினையறும், குரைத்திடா துகுறிக்குந்தயிலமே. (உ௪௨)

குறிக்கும்பத்தியங்கூறும்புளிதள்ளு, தெறிக்கும்வெள்ளாட்டி றைச்சியுப்புக்கண்டம், முறிக்குங்காடைமுயலும்புறாவாகும், தெ றிக்கும்வவ்வாலுந்திறமாகவுண்டிடே. (உ௪௩)

சீரகத்தயிலம்.

உண்டபோதுவுடலைவிட்டேகவே, கண்டுமேசீரங்கழறுநற்றை லம்ம், அண்டுநற்சீரமறையுந்தசபலம், விண்டுமதுரம் விளம்பிடக் காலெடே. (உ௪௪)

எடுத்துமேயெலுமிச்சம்பழத்தினில், தொடுத்துமேசாமந்துவ ளவரைத்திடு, கடுத்துமேபசும்பாலிலரைத்திடு, அடுத்தயெள்ளெண் ணெயன்பாகக்கூட்டிடே. (உ௪௫)

கூட்டிப்பாண்டங்குலாவிப்பதம்வடி, நீட்டுமண்டலம்நேராய் முழுகிடில், பூட்டுமேதம்புகலப்பறந்திடும், வாட்டுநீர்ப்பாச்சல்வரை ந்தோடிப்போகுமே. (உ௪௬)

போகும்பித்தமும்பொருமலுடன்வாய்வு, ஏகும்வெட்டையெ ழிலானரோகமும், சாகும்பிரமியந்தணியாவழலையும், நோகுங்கண் ணோய்நொறுங்கியேயோடுமே. (உ௪௭)

கிச்சிலித்தயிலம்.

ஓடுமாந்தர்க்குறையுந்தலைவலி, நீடுமுட்டலைவிட் டேகுதற்கெண்ணெயொன், ருடுமேதயிலமுமுரைக்கிறேன், பாடுகிச்சிலிப்பழம்நூறுதூக்கிடே. (உசஅ)

தூக்குமேபழச்சாற்றைப்பிழிந்துமே, தாக்குமேகருஞ் சீரமதுரமாம், நோக்கும்வில்வமும்நொறுங்குமேலமுடன், போக்குவறுகும்புகலவெடுத்திடே. (உசக)

எடுத்துமேயெடையொன்றுயொருபலம், அடுத்துமேபழச்சாற்றுலரைத்திடு, தொடுத்துமேபசும்பாலிற்கலக்கியே, கொடுத்துமெள்ளெண்ணெய்கூறச்சமன்தூக்கே. (உருய)

கூட்டிப்பாண்டக்குமுறவேகாச்சிடு, நீட்டிமண்டலம்நெருங்கமுழுகிடில், பூட்டும்பிரமியம்புகலப்பறந்திடும், வாட்டும்ரோகம்வரையுங்கிரந்தியே. (உருக)

கிரந்திமேசிரங்கேங்கிப்பறந்திடும், நிரந்தரமாய்நெருங்குங்கபாலநோய், வரந்தவாய்நீரருகலும்பித்தமும், சிறந்தகாசமுஞ்சேர்ந்தவிரும்பலே. (உருஉ)

இருமலீளையிசையுங்கபமுதல், பொருமல்வாந்தியும் புகலுமயக்கமும், கருமவழலையுங்காணுதொடுங்கிடும், பருகநேத்திரவாய்வுமகலுமே. (உருரு)

எலுமிச்சம்பழத்தயிலம்.

அகலுமாந்தர்க்கறைவேன்றயிலமொன், றிகலுமெலுமிச்சங்காயதுநூறதாம், புகலச்சாற்றதனைப்பூட்டிப்பிழிந்துமே, நிகலும்நன்றுரிநேராய்ப்பலமெடே. (உருச)

எடுத்துவேலியெழிலாம்விலாமிச்சு, கொடுத்தமதுரமுங் கூறுநற்சந்தனம், அடுத்தவாலுமுவையகிற்கட்டையாம், விடுத்துநிம்பத்தின்சாற்றுலரைத்திடே. (உருரு)

அரைத்துமேயிளநீரிற்கலக்கியே, திரைத்தயெள்ளெண்ணெய்சேரச்சமனதாய், குறைத்தவாமணக்கெண்ணெயுங்காலதாய், உரைத்தமூன்றையுமொன்றுகக்காச்சிடே. (உருசு)

காச்சியேபதங்கருதவடித்திடு, ஆச்சிபாதமடிவணங்கித்தொழுமூச்சிடாமல்முசியவோர்மண்டலம், தேச்சுமூழ்கத்தெறிக்கும்வியாதியே. (உருஎ)

தெறிக்கும்பித்தந்தெளிந்திடுமூர்ச்சையாம், கறிக்கும்நேத்திரங்கண்ணழல்கிழறும், முறிக்குங்கைகால்முயன்றவெரிச்சலும், தரித்திடாமல்தாணிவிட்டோடுமே. (௨௫௮)

ஓடுங்காச்சலுறையுங்கிரந்தியும், நீடும்வாதக்குட்ச்சலுந்தானறும், சூடுமேனிசுகிக்கத்தழலறும், பாடுமாமுனிபகர்ந்ததுவுண்மையே

கோரோசனைத்தயிலம்.

உண்மைகேளு முறைமையாய்மாந்தர்க்கு, தண்மைகோரோசனந்தாடுனருபலம், வெண்மையான விரும்புநல்வெண்ணையாம் நண்மையாகவே நவிலப்படலந்தூக்கே. (௨௬0)

தூக்கியாமணக்கெண்ணை தசபலம், தாக்குமெள்ளெண்ணெய் தனியவேயவ்விடை, போக்கில்லாமற்பொருந்தவிருவிடை, நோக்கிவெண்ணெயில்நுவலவரைத்திடே. (௨௬௧)

அரைத்துமுக்கூட்டுயெண்ணெய்கலக்கிடு, திரைத்தமாகவேதிறமாகக்காச்சிடு, முறைதப்பாமலேமுசியாமல்முழுகிடு, நிறையும்வியாதிநெருங்கப்பறக்குமே. (௨௬௨)

பறக்குஞ்சன்னிபகரப்பதின்மூன்றும், திறக்கமானதோர்தேர்ந்தகாசரோகம், சிறக்கப்பித்தமுஞ்சேர்ந்தகழல்வாதம், வறக்குங்கிரந்திவரைந்தோடிப்போகுமே. (௨௬௩)

போகும்வெட்டையும்பொல்லாதநீராம்பல், ஏகுங்கிராணியெழிலானகுன்மமும், வாகுமேசொரிவழங்கும்பெருஞ்சொரி, போகுமென்றுபுகன்றனர்முனிவரோ. (௨௬௪)

கஸ்தூரித்தயிலம்.

முனிவர்வாக்குமுறைபொய்யாதொருநாளும், கனிவுடனேகஸ்தூரியோர்வராகனும், தனியவேபசும்பாலாலரைத்துமே, வனிதமாயெண்ணெய்வறையுமாமணக்கே. (௨௬௫)

ஆமணக்குமறையுந்தயிலத்தில், பூமணக்கவே புகலவேகாச்சிடு, தாமணக்குந்தனியவித்தயிலத்தை, வாமணக்கவேவளமாய்முழுகிடே. (௨௬௬)

மூழ்கும்போதுமுறையும்பெருரோகம், நீழுங்காந்தல்நெருங்குங்கபரோகம், பாழுமேனிபகரும்பொன்னிறமாம், வாழுமண்டலமன்பாய்முழுகிடே, (௨௬௭)

குங்குமப்பூத்தயிலம்.

முழுகுமாந்தர்க்கு முறைபொய்யாதொருநாளும், வழுகுங்குங்குமம்வாகாயொருபலம், பழுகவெண்ணெயிற்பாங்காயரைத்துமே தொழுகுமாமணக்கெண்ணெயிற்காச்சிடே. (உசுஅ)

காச்சியேபதங்கமழவிறக்கிடு, தேச்சுமண்டலந்திறமாய்முழுகிடில், போச்சுநாசியிற்புகலும்பீனிசமும், ஆச்சியம்பா ளறைந்தமுறையிதே. (உசுகூ)

அறைந்தார்மாமுனியாயுறுவேதத்தில்,கறைந்தாருண்மையைக்கழறும்வடநூலில், திறந்தார்பாகங்கள்தீரவேமாந்தர்க்கு, சிறந்ததயிலங்கள்சிறக்குமின்னூலாமே. (உஎ௰)

சன்னிபதின்மூன்றுக்குமேற்பூசும் சாம்பிராணித்தயிலம்.

நூலாஞ்சித்தர்நுகன்றிட்டார்மாமுனி,காலாஞ்சாம்பிராணிகழறுமரக்குடன், வேலாம்வேப்பெண்ணெவிரும்புந்தசபலம், சாலாமூன்றையுந்தனிவாலையிறக்கிடே. (உஎக)

இறக்குந்தயிலமெழிலாகப்பூசிடில், பறக்குஞ்சன்னிபகரும்பதின்மூன்றும், சிறக்கயிசிவுசேரப்பறந்திடும், உறக்கமானவுயர்ந்தமுறையிதே. (உஎஉ)

கர்ப்பூரத்தயிலம்.

முறையாம்பாகமுரைக்கிறேன்மாந்தர்க்கு, நிறையாங்கற்பூரம்நேருமாலாத்தியாம், பறையாமுப்புபகரும்வெடியுப்பு, துறையாயிளகுதோன்றச்சரியெயடே. (உஎ௩)

எடுத்துக்காட்டாமணக்கன்பாலிலரை, தொடுத்துமேகுழி தயிலமிறக்கிடு, அடுத்தசன்னிக்கியன்பாகப்பூசிடில், படுத்தவியாதிபுகலப்பறக்குமே. (உஎச)

பறக்குமென்றல்லோபாடினார்மாமுனி, பறக்குமென்றல்லோபாடினர்சித்தரும், பறக்குமென்றல்லோபாடினார்மாந்தர்க்கு, பறக்குமென்றல்லோபகர்ந்தாரிஷிகளே. (உஎரு)

பகர்ந்தேன்தயிலம்பகருமைஞ்ஞூறதாம், பகர்ந்தேன்லேகியம் பகருமைஞ்ஞூறதாம், பகர்ந்தேன்செந்தூரம் பகருமைஞ்ஞூறதாம் பகர்ந்தேன்பற்பம்பகருமைஞ்ஞூறுமே. (உஎசு)

ஐஞ்ஞூறுரைவைந்தேன்கியாழமும், ஐஞ்ஞூறுரைவைந்தேன்கிருதமும், பன்னூலெல்லாம்பகர்ந்துதிரட்டியே, இன்னூல்மாந்தர்க்கெடுத்துவுரைத்ததே. (உஎஎ)

அண்டவாதத்தயிலம்.

உரைத்தேன்மாந்தர்க்குவுற்றதயிலமொன், றிரைத்தேன்வாதத்தினண்டப்பிணியற, கரைத்தவெள்ளுள்ளிகழறுங்கழல்பருப்,பரைத்தகாயமும்பாங்காகத்தூக்கிடே. (௨எ௮)

தூக்கிச்சிற்றண்டந்தோன்றவிருபதும், தாக்குமாமணக்கெண்ணெயிற்காச்சியே, போக்கில்லாமற்பொருந்தவடித்திடு,வாக்குதப்பாமல்வாகாகப்பூசிடே. (௨எ௯)

பூசியேபூவரசின்மூலியிலை, கூசிடாமல்குமுறவேகட்டிடு, வாசிநீர்வற்றிவாகாய்ப்பிணியறும், தேசில்மாந்தர்க்குத்தெளியச்செப்பினதே. (௨௮௰)

காமாலைக்குத்தயிலம்.

செப்புங்காமாலைசிறக்குமனிதர்க்கு, ஒப்புங்கையானுயர்ந்தமிளகுடன், அப்புஞ்சீரமறையுமதுரமாம், கப்புமஞ்சளுங்காணச்சமன்சேரே. (௨௮௧)

சேர்த்துநீர்முள்ளிச்சாற்றாலரைத்திடு, பார்த்துமேபசும்பாலிற்சமனெடை, கோர்த்துமெண்ணெய்குலாவுமவ்விடையாம், சார்த்துபாண்டந்தனிப்பதங்காச்சிடே. (௨௮௨)

பதமாமெழுகுபதத்தில்வடித்திடு, நிதமாம்வார மிருமுறைதப்பாது, சதமாமண்டலஞ்சார்ந்துமுழுகிடில், அதமாய்ப்போகுமறையுங்காமாலையே. (௨௮௩)

சசசஅ-வியாதிக்கும் ஏகமூலித்தயிலம்.

மாலையாந்தயிலம்முறையோர்பாகம், காலைமல்லிகருதுந்தொரட்டியும், வேலைநொச்சிவிரும்புமுசுக்கையும், ஆலைநெல்லியறையும்பற்பாடமே. (௨௮௪)

பாடம்வேலிப்பருத்தியுத்தாமணி, நீடகத்திநெருங்குங்காக்கணமாம், பூடகத்திப்புகழுஞ்செவ்வகத்தி, ஆடங்கத்திரியறையும்வுடுப்பையே. (௨௮௫)

உடுப்பைதொண்டையுரைக்குமாடாதோடை, கொடுப்டைமூலிகுறிக்குநற்பாலையாம், வடுப்பையூமத்தைவளருமிசங்குடன், தொடுப்பையானதோர்தோன்றுந்துராப்பூண்டே. (௨௮௬)

பூண்டுவேலிபுகலுங்கட்டுக்கொடி, ஆண்டுசென்றவறையும்பெருவேம்பு, நீண்டுசென்றநெடியவசலையும், தீண்டுபூராவுஞ்சேர்த்திடுதோடையே. (௨௮௭)

தோடைதய்யானுந்தோன்றுமறுகனும், ஆடையொட்டியலரி
யாற்றலரி, நீடுங்குப்பிநெடியசங்கங்குப்பி, தேடுமேனி தெளிந்த
வெட்பாலையே. (௨௮௮)

பாலைமூலிபகருங்குறிஞ்சானும், ஆலைபுன்குமறையுமூமத்தை
யும், வாலைபீநாறி வகுக்கும்வெள்ளறுகுடன், சோலைமுசுட்டை
தொடரும்நிலவேம்பே. (௨௮௯)

வேம்புயெழுத்தாணிவிரும்புஞ்சாணாக்கியும்,பாம்புமூலியகரு
நன்முல்லையாம், தீங்குசெய்யாததேர்ந்தபொன்னாங்கண்ணி, ஓங்கு
கையானுகரும்பூனைக்காலி. (௨௯௰)

காலிமூலிபகரும்பெருமூலி, நீலிபத்திரிநெருங்கும்பெருங்கு
மிழ், சோலிமிட்டான்சிறந்தபிரமியும், வாகுகொன்றைவகுக்குங்கி
ளாவுடன், நீலிமூலிநெருங்குந்தூதுளையே. (௨௯௧)

தூதுவாளைதுடிக்கும்பெருவாகை, வாதுதுளசி வகுக்குமாது
ளையாம், நீருமெட்டிநெருங்குமாவாளையாம், சாதுமேபனைசாற்று
முருங்கையே. (௨௯௨)

முருங்கைகாக்கணமுயலுஞ்சிறுகளா, கருங்கைகோவைகழறு
ஞ்செங்காலியாம், பருங்கையுருவிபகரும்நற்புன்குடன்,பெருங்கை
பாதிரிபெருகுநல்வில்வமே. (௨௯௩)

வில்வம்பாசிவிரும்புங்கடற்பாசி, கொல்லிமூலிகுறிக்குங்கலிக
மாம், வல்லிமல்லிவகுக்குநாகமல்லி, வில்லினோசைவிளங்குங்கிலுப்
பையே. (௨௯௪)

விளங்குங்கருணைமேவுங்கடம்பமாம், தளும்புங்காக்கணந்தா
ங்கும்விடமூங்கில், பளும்புகோங்குபகருங்கற்றாழையாம், நளும்பு
வீழியும்நாட்டில்பேயத்தியே. (௨௯௫)

அத்திகோரையறையுந்தேள்கொடுக்கும், சத்திமூலிசதாசிவன்
மூலியும், துத்திமூலியுந்தோன்றுமருக்காரை, வெத்திகொள்ளும்விரு
ம்பும்பேய்க்குமட்டி. (௨௯௬)

குமட்டிநரளைகூறும்புல்லுருவி, அமட்டிகாயத்திரிகருங்காலி
யாம், சமட்டிபாகலுஞ்சாற்றுகாஞ்சோறியும், கமட்டிவாழைகாணுங்
கிணைமூலியே. (௨௯௭)

மூலிகார்கோழிமுயலுக்காற்பாசமாம், சோலிகாலகஞ்சோரும் புனல்முருங், காலிகுவளைகாட்டுக்கொழிஞ்சியாம், வேலிகக்கரிவிரு ம்பும்பிரண்டையே. (உகஅ)

பிரண்டைகூந்தல்பிறங்குபாதிரியாம்; கரண்டைகோடகசாலை கமுகுடன், அரண்டைதாமரையறையும்நாணல்குன்றி, பரண்டை தோன்றிபகரும்பூசனியே. (உகக)

பகரும்நரளைபாட்டுந்தாளிசமாம், நுகருந்தும்பைநுணுவுடன் காட்டத்தி, நகருஞ்சின்னியும்நன்மாவிலிங்குடன், தகருந்தேக்குட ன்தாங்குஞ்சிவதையே. (௩ா)

சிவதைநிலவாகைசேர்ந்தநிலக்கடம்,பவதைகூரண்டம்பகருஞ் செம்பூவுடன்; அவதைகுறிஞ்சானறையுங்குருக்கத்தி, நவரைவெந் தோன்றி நாட்டில்பேய்ச்சுரையே. (௩ாக)

சுரையாங்காவட்டம்பூண்டுயிஞ்சியுடன், நரையாஞ்சிறுதாளி நவிலுஞ்சிறுகாஞ்சி, சுரையாம்வெள்ளெலிதோற்றுங்கோங்குடனே பரையாம்துராவுடன்பகருஞ்சாணுக்கியே. (௩ாஉ)

சாணுய்ப்பூண்டுதரிக்கும்பேய்மிரட்டி, காணுமூலிகழறுந்தே ள்கொடுக்கு, தோணுச்செங்கழுநீர்முள்ளிசெங்கீரை,நாணுய்க்கொ ழுந்துநாட்டுமசோகமே. (௩ா௩)

நாட்டும்நாய்வேளைநவிலும்வெள்ளாம்பலும்,கூட்டும்வெற்றி லைகூறுங்கொடிமூலம், நீட்டுமூலி நிகழும்நஞ்சறுப்பான், கோட்டு நெருஞ்சிகுறிக்குங்கடம்பமே. (௩ாச)

கடம்பங்கோரக்கர்கருதுமூலிகையாம், தடம்பம்பணைத்தவி க்குங்கோழிக்கொடி, சடம்பமாமூலி சாற்றுஞ்சிதேவியாம், அடம்ப டருமறையுங்கிளாப்பூவே. (௩ாரு)

பூவுடன்சதாமூர்க்கந்தண்ணீர்மிட்டான், நாவுநீர்ச்சுண்டி நவிலுமரிநெல்லி, பாவுந்தைவேளைபகருஞ்சடாதரி, ஆவுஞ்சடைச் சி யறையுமெருக்கையே. (௩ாகா)

எருக்கைமூலியெழிலாங்கவிழ்தும்பை, மருக்கைமுன்னைமகிழு ங்கொழுந்துடன், பருக்கைவன்னியும் பகருஞ்சடைக்கஞ்சா, சருக் கையானசமுத்திரோதயங்கூட்டே. (௩ாஎ)

கூட்டிவாதமடக்கிபெருமூலி, நீட்டுமுள்ளங்கிநிகழுஞ்செம்ப ருத்தி, காட்டுநொச்சிக்கருந்துளசியுடன், பூட்டுமூலிபுகலச்சமனதா ய், ஆட்டிச்சாற்களையன்பாய்ப்பிழிந்திடே. (௫௱அ)

இட்டேசாற்றையெழிலானபாண்டத்தில், இட்டமாகவே சேர வார்த்திடு, கட்டுமெள்ளெண்ணெய்கருதுமவ்விடையாம், சட்டமா கவேதணிப்பதங்காச்சிடே. (௫௱கூ)

காச்சியேமெழுகுபதம்வடித்து, ஆச்சிபாதமடிவணங்கிப்போ ற்றி, மூச்சுதப்பாமல்முசியவோர்மண்டலம், காச்சியெண்ணெயில் கடுகத்தானஞ்செய்யே. (௫௱ய)

செய்யும்போதுதிறமாய்ப்பிணியறும், வையுமீளவளையும்பெ ருமீளை, தொய்யுங்காந்தலுந்தோன்றுமிருமலும், பெய்யுக்கண்ணீர் பெரும்பாச்சலோடுமே. (௫௱யக)

ஓடுங்குன்ம முறையும்பதினெட்டு, நீடுமாந்தம்நிகலும்பெரு மாந்தம், கூடுங்குன்மங்குளைநோய்பெருக்குஷ்டம், சாடும்வாதந்த ணிப்பித்தம்நீங்குமே. (௫௱யஉ)

நீங்குங்காந்தல்நெடியபெருநோயும், தீங்குசெய்யுந்திமிர்வாத ரோகமும், ஆங்குகாசமறையுஞ்சுவாசமும், தேங்குகிரந்திதெறித் தோடிப்போகுமே. (௫௱யங)

போகும்வெட்டுப்புகலும்படலமும், ஏகுஞ்சூலையெழிலானமே கமும், சாகுமாந்தையுஞ்சாற்றும்பெரும்பாடு, வேகுமழலைவிசையா ய்ப்பறக்குமே. (௫௱யச)

பறக்குஞ்சன்னி பகாப்பதின்மூன்றும், திறக்கசேத்துமந்தோ ன்றத்தொண்ணூற்றும், வறக்கமேசுரம்வாகாயறுபதும், துறக்கும் பிரமியந்தோன்றுநீரிழிவே. (௫௱யரு)

தோன்றுவாதந்துடியாங்கழல்வாதம், சான்றயேணியிற் சாற்று ம்படைசொறி, நேன்றபீனிசம்நிகழும்நேத்திரவாய்வு, ஊன்றபல் நோயுறையுமளையாப்பே. (௫௱யசா)

ஆப்புடன்புளையறையுங்கண்டமாலை, மூப்புநோயுமுறையுமு சல்வலி, சேப்புகண்டன்சிறக்குநமர்க்கண்டன், வாய்ப்புண்ணூற்ற மும்வறைந்தோடிப்போகுமே. (௫௱யஎ)

போகும்நாலாயிரத்துச்சில்வாணமும், ஆகுந்தயிலமறைந்தேன்பெரும்பாகம், சாகுமாந்தர்சடுதியில்மாண்டிடார், வாகுதன்வந்திரிவகுத்ததுவுண்மையே. (௩௱௰அ)

புஷ்பபாணத்தயிலம்.

உண்மைகேளுமுரைக்கிறேன்மாந்தர்க்கு, தண்மையானதனிப்புஷ்பபாணமாம், கண்மையாமல்லிசழுநுழுசிமல்லி, வண்மையாகவறையுடகிழமே. (௩௱௰௯)

மகிழுமன்றுசி மணக்கும்பன்னீர்ப்பூவாம், நெகிழுங்கஸ்தூரிநேர்ந்தவாற்றலரி, தகிழுமுல்லையும்சாற்றும்பெருந்துரா, புகழும்தாமரைபுஷ்பம்அல்லியெடே. (௩௨௰)

எடுத்துச்செங்கழுநீருடனும்பலும், தொடுத்தபூவாஞ் சிறந்தசெம்முருக்கன், அடுத்தமுருங்கையானவகத்தியும், நடித்தபாதிரிநவிலும்பத்திராட்சியே. (௩௨௧)

பத்திராட்சிடகருங்கோங்கிலவன், சத்திமேவுந் தனிச்செம்பருத்தியாம், வெத்திகொள்ள விரும்புமனோரஞ்சிதந், துத்திப்பூவுடன்ரேன்றும்நுணப்பூவே. (௩௨௨)

பூவுடன்கலியாணங்காட்டாத்திப்பூ, நாவுதப்பாமல் நவிலச்சமனதாய், ஏவும்பாண்டமெழிலாய்ப்பொதிந்துமே, பாவுகியாழமும்பதமாகச்செய்திடே. (௩௨௩)

செய்யுங்கியாழஞ் சிறக்கவொருநாழி, பெய்யுமெள்ளெண்ணெய்பேசுமிருநாழி, துய்யுமேபசும்பாலுமனாநாழி, நையுமொன்றாகநவிலவேகாச்சிடே. (௩௨௪)

காச்சியேபதக்கழறவடித்திடு, பேச்சுதப்பாமல்பிரியமாய்முழுகிடு, போச்சுமேகம்புகலும்பிரமேகம், நீச்சுரோகம் நெகிழுமணக்குமே. (௩௨௫)

மணக்கும்பித்தமும்வாய்நீரூறலறும், தணிக்குமேதழல் தரியாப்பிணியறும், கணிக்கும்வியாதிகழுருமலோடிடும், செணிக்குந் தயிலந்திறமாகப்பார்த்திடே. (௩௨௬)

மகிழம்பட்டைத்தயிலம்.

பார்த்துமாந்தர்பகருமொருபாகம், ஆர்த்தும்பட்டை யறையுமகிழமாம், கோர்த்துவேர்ப்பட்டைகுறிக்குந்தசபலம், சேர்த்துக்கருஞ்சீரஞ்சிறக்கப்பலமெடே. (௩௨௭)

எடுத்துமாந்தர்க்கெழிலாந்தயிலமொன், றடுத்திடாமலே தாக்குமகிழுமாம், தொடுத்தபட்டையாந்தோன்றுந்தசபலம், விடுத்தகியாழரும்வேண்டியேசெய்திடே. (௩௨அ)

செய்துகியாழுஞ்சிறக்கவேயெட்டிலொன், றெய்துமேபசும்பாலுமிளநீரும், கொய்திடாமற் குறிக்குமாமவ்விடை, பெய்துமெள்ளெண்ணெய்பேசச்சமன்தூக்கே. (௩௨௯)

தூக்கிப்பாண்டத்திற்றுவளவேகாச்சிடு, தாக்குமேபதந் தனியவிறக்கிடு, நோக்குமம்பாளினுவல்பதம்போற்றியே,போக்கில்லாமற்பொருந்தத்தானஞ்செய்யே. (௩௩௰)

செய்யும்போதுசிறந்ததோர்பித்தமும், நையும்வாதநவிலுமயக்கமும், பெய்யும்வாய்நீர்பிதற்றல்மதமூர்ச்சை, தொய்யுமீளை துவண்டோடிப்போகுமே. (௩௩௧)

அகிற்கட்டைத்தயிலம்.

போகுமாந்தர்புகலும்பிணியற, ஆகுங்கட்டை யறையுமகிற்கட்டை, வேகுமேபதம்வெய்யவே நூறதாம், தேகுமேசலந் திறமாய்ப்பனிரண்டே. (௩௩௨)

பன்னிரண்டுடன்பகருஞ்செங்கரும்பு,வன்னிபாண்டத்தில்வாகாகப்பூட்டியே, சொன்னகியாழந்திறமாகவெட்டிலொன், றெண்ணியேபசும்பாலுமிளநீரே. (௩௩௩)

பாலுடன்கியாழம் பகருஞ்சமனதாம், சாலுடனெண்ணெய் சாற்றிடுமவ்விடை, மேலுந்தயிலம் விளம்பவேகாச்சிடு, நாலுசாமம் நவிலவிறக்கிடே. (௩௩௪)

இறக்கித்தாயாரொழில்பதம்போற்றியே, திறக்கமண்டலஞ் சிறப்பாய்முழுகிடில், உறக்கமுள்ளவுயர்பத்துசன்னியும், சிறக்கும்பீனிசஞ்சிதைந்தோடிப்போகுமே. (௩௩௫)

போகும்பித்தம்புகலுங்கருப்பித்தம், ஏகும்வாத மெழிலாஞ்சிலேத்துமம், நோகுமாந்தைநுவலுமிருமலும், போகுமென்று புகன்றனர்முனிவரே. (௩௩௬)

காஞ்சுருத்தயிலம்.

முனிவர்வாக்குமுறைகளிற்பொய்யாது, கனிவுடன்றயில்முமுறைக்கிறேன், பனியுமூலிபகருங்காஞ்சுருவாம், வலிதமாகவறையுமொருநாழி. (௩௩௭)

நாழிமூலிநவிலப்பிழிந்துமே, கோழியாவாரை குறிக்குஞ்சம னெடை, பாழிலாதபகருமிளநீரும், நாழியேபசும் பாலுங்கொடுத் திடே. (௧௩௮)

கொடுத்துவொன்றாய்க் குழறக்கலக்கியே, தொடுத்துமெள் ளெண்ணெய்தோன்றவவ்விடை, அடுத்துப்பாண் டமறையவேகாச் சிடு, வடுத்துமேபதம்வாகாய்வடித்திடே. (௧௩௯)

வடித்துமாயன்மலரடிபோற்றியே,தொடுத்துமண்டலந்தோன் றமுழுகிடில், அடுத்தகாசமறையும்ரத்தபித்தம், சடுத்தமந்தார காச முமேகுமே. (௧௪௰)

ஏகும்பாண்டுமெழிலாமலசன்னி, நீகுஞ்சூலைநெகிழுங்கபரோ கம், சோகைபாண்டுசொறிசிரங்கேகிடும், வாகுதன்வந்திரி வகுத்த துவுண்மையே. (௧௪௧)

நிலக்கடம்புத்தயிலம்.

உண்மையாகவுரைக்குந்தயிலமொன், றண்மையாகவே சாற் றுவேன்மாந்தர்க்கு, வெண்மையானவிரும்புநிலக்கடம், பண்மை யாம்பட்டைபகரத்தசமெடே. (௧௪௨)

எடுத்துப்பாண்டமெழிலாய்க்கியாழஞ்செய், அடுத்தவாமணக் கெண்ணைதசபலம், தொடுத்துமெள்ளெண்ணை தோன்றவேயவ்வி டை, கொடுத்துத்தயிலங்கூறவேகாச்சிடே. (௧௪௩)

காச்சுமேபதங்கழறவடித்திடு, பேச்சுதப்பாமல் பிசகறமண்ட லம், மூச்சிடாமல்முசியமுழுகிடில், போச்சுகுஷ்டமும்புகலப்பற க்குமே. (௧௪௪)

பறக்குந்திமிர்நோய்பகருங்கழல்வாதம், சிறக்குமாந்தர் சிறந் தநீராம்பலும்,திறக்கும்பீனிசந்தேர்ந்தநீர்ப்பாய்ச்சலும், துறக்கக் கானகம்துவண்டோடிநீங்குமே. (௧௪௫)

நுணாப்பட்டைத்தயிலம்.

நீங்குமாந்தர்நிறையுந்தயிலமொன், றாங்குபட்டையரியநுணா ப்பட்டை, பாங்குடன்பலம்பகருமிருபதாம், வாங்குதண்ணீர்வறை தாணிசேர்த்திடே. (௧௪௬)

சேர்த்துக்கியாழஞ்சிறக்கவிள்நீரும், பார்த்துநிம்பத்தின் பழச் சாறுமவ்விடை, ஆர்த்துமெள்ளெண்ணையறையச்சமனெடை,வார் த்துமெழுகுபதத்திலெடுத்திடே. (௧௪௭)

எடுத்துத்தயிலமெழிலாயிறக்கியே, அடுத்துமண்டல மன்பாய்முழுகிடில், தொடுத்தகாச்சல்தொடருமுறைக்காச்சல், படுத்தவியாதிபகர்குன்மம்போகுமே. (௫௪௮)

போகுமேரணம்புகலுமலையாப்பு, ஆகுங்கிரந்தியரியபெருஞ்சிரம், காகும்வியாதிகழறப்பறந்திடு, மேகுதன்வந்திரிவிரும்பியுரைத்ததே. (௫௪௯)

உரைத்தாரிம்முறையுலகத்தில்மாந்தர்க்கு, நினைத்தார்தயிலம் நிறையச்சரிபாகம், இனைத்தநூலிது தேறவேமாந்தர்க்கு, குறைத்ததைஞ்ஞூறுங்கூறியதன்மையே. (௫௫௰)

மனோரஞ்சிதபாணத்தயிலம்.

உண்மையாகவுரைக்கிறேன்மாந்தர்க்கு, தண்மையாமனோரஞ்சிதபாணமாம், இன்மையாகத்திறமாயொருசேரு, வெண்மையாய்ச்சலம்விரும்பிடக்காச்சிடே. (௫௫௧)

காச்சுராஜகனிப்பழஞ்சமனெடை, பேச்சுதப்பாமல் பிசகாப்பசும்பாலாம், ஆச்சுமெள்ளெண்ணெயதையுமவ்விடையாம், மூச்சுதப்பாமல்முதிரவேகாச்சிடே. (௫௫௨)

காச்சுமண்டலங்கருதிமுழுகிடில், போச்சுவியாதி புகலும்பிரமியம், நீச்சுநாற்றம்நெருங்குங்கடமீளை, வீச்சுகுளைநோய்மிகவாய்ப்பறக்குமே. (௫௫௩)

பறக்கக்கூந்தல்பதமாய்வளர்ந்திடும், சிறக்கவெண்மயிர் சேரக்கறுத்திடும், திறக்கத்திரோகந்தெளிந்தமணப்பாகம், பறக்கப்பல்நோய்ப்பறந்தோடிப்போகுமே. (௫௫௪)

பறக்கக்கூந்தல்பதமாய்வளர்ந்திடும், சிறக்கவெண்மயிர் சேரக்கறுத்திடும், திறக்கத்திரோகந்தெளிந்தமணப்பாகம், பறக்கப்பல்நோய்ப்பறந்தோடிப்போகுமே. (௫௫௪)

போகுமிளைப்புடன்பொல்லாவிருமலும், ஏகுங்காந்தலெழிலானபித்தமும், ஆகும்வாதமறையுங்கபரோகம், வாகுசேத்துமம் வாகாகநீங்குமே. (௫௫௫)

நீங்குமேகம்நெருங்கும்வாய்நாற்றமும், ஓங்குங்கிரந்தி யுயர்ந்தபெருநாற்றம், தீங்குசெய்யுஞ் சிலைப்புடைப்புற்றுவும், வாங்கிப்போமெனவகுத்தார்தன்வந்திரி. (௫௫௬)

பரிமளகெந்தித்தயிலம்.

வகுத்தார்மாந்தர் வரையுந்தன்வந்திரி, தொகுத்தார்பூஷணந்தோன்றும்பரிமளம், நிகுத்தார்குருவிவேர் நேருமருக்கொழுந்தகுத்தாரிருவேலிதாமிலாமிச்சியே. (௫௫௭)

மிச்சிகிச்சிலிவிரும்புர்தசபலம், கொச்சிப்பன்னீர்குறிக்குமிருநாழி, அச்சமில்லா தரையும்நல்லெண்ணெயாம், உச்சிதமா யுறுதியாய்க்காச்சிடே. (௫௫௮)

காச்சுதயிலங்கருதப்பதனஞ்செய், மூச்சிடாமல்முசியவோர்மண்டலம், தேச்சுவாரமிருமுறைமுழுகிடில், போச்சுகண்ணோய்புகலப்பறக்குமே. (௫௫௯)

பறக்கும்வியாதிபரிமளகெந்தியால், திறக்குங்கூந்தல்திறமாய்வளர்ந்திடும், உறக்கும்பித்தமுழங்குமதமூர்ச்சை, சிறக்கும்வாயூறல்சிதறியேயோடுமே. (௫௬௰)

ஓடுமேகப்பிரலாடசன்னியும், நீடுமேதழல்வாரியலறிடும், கூடுமேகபயீளையொதுங்கிடும், சாடுநேத்திரவாயுவகலுமே. (௫௬௧)

அகலுங்கண்ணோயறையுந்தொண்ணூற்றாறும், நிகலும்பீனிசம்நேருநீர்ப்பாய்ச்சலும், புகலுங்காக்கைபிறவலிசன்னியும், சகலநோய்களுந்தாண்டுமடவிதே. (௫௬௨)

சுகந்தவாரித்தயிலம்.

அடவாய்மாந்தர்க்கறையுஞ்சுகந்தமாம், சடமாங்கற்றாழைசாற்றுந்தண்ணீர்மிட்டான், திடமாமன்றுசிசேர்ந்தபழரசம், வடமாங்கிச்சிலிப்பழமும்ரசங்கூட்டே. (௫௬௩)

கூட்டியொன்றாய்க்குலாவச்சமனெடை, நீட்டுமெள்ளெண்ணெய்நெகிழவேயவ்விடை, பூட்டியொன்றாய்ப்புகழ்மெழுகுபதம்மூட்டிப்பாண்டமுசியவேகாச்சிடே. (௫௬௪)

பாண்டம்விட்டுப்பதமாய்வடித்திடு, ஆண்டுகாலமறையவேமூழ்கிடில், மூண்டபித்தமுதிரவேநாற்பதும், நீண்டவாதம்நெகிழப்பறக்குமே. (௫௬௫)

பறக்கும்வியாதிபகரும்பெருநோயும், இறக்கமானதோர் தேர்ந்தகபாலநோய், இறக்கநீரிழிவுரத்தமூத்திரம், பறக்குமென்றல்லோபாடினார்சித்தரோ. (௫௬௬)

மன்மதலீலைத்தயிலம்.

சித்தர்வாக்குதிசையிலும்பொய்யாது, சித்தர்மாந்தர்க்குத்திற ந்திட்டாரிம்மூன்றும், சித்தர்நூல்களிற் றெளிந்திட்டாரென்னாலும் சித்தரின்னூலிற்றெளியவேசெப்பினார். (௫௬௭)

செப்புமன்மதலீலைதயிலமாம், ஒப்புங்கிராம்புடனேங்குங்கரு வாவாம், தப்பிலாததனிப்பெருஞ்சாதிக்காய், கப்பும்வெள்ளரிகருது முருங்கையே. (௫௬அ)

முருங்கையேலமுகிழ்மருக்காரையாம், கருங்கையான்மூலிக ழுறுஞ்சதகுப்பை, பெருங்கைமூலியும்பேசும்பிரண்டையாம், தருங் கைமதுரந்தான்றிசமன்கூட்டே. (௫௬௯)

கூட்டிச்சாம்பிராணி குலவுங்கஸ்தூரியாம், நீட்டுங்குங்கும ம்நேரும்பச்சைப்பூரம், பூட்டும்பன்னீர்ப்பூபுகலும்பேதாறுவும், கா ட்டுமல்லியும்கருதச்சமன்தூக்கே. (௫௭௰)

தூக்கியேசலந்தோன்றப்படியிடு, தாக்கிப்பாண்டந்தனியக்கி யாழுஞ்செய், போக்கில்லாமற்புகலப்பசும்பாலும், நோக்குமெள்ளெ ண்ணெய்நுவலச்சரியெடே. (௫௭௧)

எடுத்துத்தயிலமெழில்ாகக்காச்சியே, அடுத்தமண்டலமன்பாய் முழுகிடில், தொடுத்தலீலையிற்றேன்றுப்புணர்ச்சியாம், கடுத்தமே கங்கழன்றோடிப்போகுமே. (௫௭௨)

போகும்பத்தியம்போற்றுங்காடைபுறா, ஆகுமுருங்கை யரிய கச்சலுடன், பாகுங்கத்திரிபகருங்கொத்தமல்லி, வாகுவெள்ளாட்டி றைச்சியுஞ்சேர்த்திடே. (௫௭௩)

சேர்த்துமேபசும்பாலுடனெய்யாகும், கோர்த்துமேவாதுமை குலாவுமுந்திரியாம், தீர்த்தமாகவேசேரவருந்திடு, வார்த்தைதப்பா துவரையுமாமுனியே. (௫௭௪)

சீதாதேவித்தயிலம்.

அறைந்தார்முனிவராயுறுவேதமாம், சிறந்தசீதேவித் தயிலமு ரைக்கிறேன்; கறந்தநன்னாரிகாட்டுக்கருஞ்சீரம், முறந்தாம்வேலி முகிழ்திலப்பனையே. (௫௭௫)

திலப்பனையுடனேருந்துளசிபாம்; கலப்பையெட்டியுங் கருது கோரகணியாம், பலப்பமாஞ்சில்பகருங்கிலுப்பையாம், சுலப்பமாகவே தோன்றச்சமனெடே. (௫௭௬)

எடுத்தூக்கியாழமெழிலாகக்காய்ச்சியே, தொடுத்தவெள்ளைச் செய்துகளக்கலக்கியே, அடுத்துப்பாண்டமடுப்பினிலேற்றியே சடுத்தயாகத்தணிட்டபதங்காய்ச்சிடே (ரூஎஎ)

காய்ச்சுமேதயிலமுழுமண்டலம், மூச்சிடாமல்முழுகியேவந்திடில், நோய்ச்சிப்பாகும நுவலும்வியாதிகள், கூச்சிடாமல்குறிப்பயுணர்த்ததே (ரூஎஅ)

உரைக்கும்வியாதியுறங்கும்வழிகளே, இரைக்குப்பித்தம்தெளிந்துமயங்கிடும், வரைக்கும்ரோகம்வகைகெட்டுஓடிடும், பரைக்குந்தன்வந்திரிபாடினதன்மையே (ரூஎகூ)

கோரைக்கிழங்குதயிலம்.

உண்மையாகவுரைக்குந்தயிலமொன், றின்மையாநதிரையுமுதிதக்காசு, வண்மையாகவகுக்கும்நூறுபலம், பண்மையாகவே பாங்காகத்தூக்கிடே (ரூஅய)

தூக்குங்கிச்சிலிதூய்மதசபலம், தாக்கும்வேலித்தணியவறுபலம், நோக்கும்பத்திரிநேராறுகத்தசபலம், தேக்குதாளிசந்தெளிவாயெடுத்திடே (ரூஅக)

எடுத்தசீரகம்எழிலாய்த்திரிபலம், அடுத்துக்கியாழும்அண்டாகச்செய்திடு, தொடுத்துப்பாண்டந்தனிகளவடித்திடு, கொடுத்துஎன்னெண்ணெய்குமுறவடித்திடே (ரூஅஉ)

வடித்துமண்டலம்வாகாய்முழுகிடில், பிடித்தரோகமும்போயமயக்கமும், நடித்தபித்தம்நலிவுங்கயரோகம். வெடித்தகுஷ்டமும்விலைத்தோடிப்போகுமே (ரூஅரூ)

மகாகீழாநெல்லித்தயிலம்.

போகும்நெல்லிபுகலும்மகாநெல்லி, ஆகுந்தயிலம்கறையுங்கீழாநெல்லி, பாகுதூக்குப்பகர்ந்திடுகாலதாய், எகும்வில்வமெழில்பஞ்சந்சேர்த்திடே (ரூஅச)

சேர்த்தவேலிசிறக்கவொருபலம், கோர்த்தசீரகங்கூறுமிரண்டரை, பார்த்தமுந்திரிபகருமொருபலம், தீர்த்தசந்தனத்தூள்பலந்தூக்கிடே (ரூஅரு)

தூக்கிடுஞ்சலந்தய்யபடியொட்டாறு, தாக்கிப்பாண்டந்தனிலடுப்பேற்றிடு, போக்கில்லாமற்புகலவெட்டிமொன்றாய், வாக்குத்தப்பாமல்வாகாயிறக்கிடே (ரூஅசா)

இக்கிக்கியாழுமெழிலெனுமெண்ணையும், திறக்கச்சமனெனட் சேராய்க்கலந்துமே, பிறக்குமேபதம்பேணிக்கடுகதாய், இறக்கித்தயில மெழில்பதம்போற்றிடே (௫௮௭)

போற்றுங்கிச்சிலிப்புகலுங்கிழங்குடன், ஏற்றும்பச்சிலைதுாளதைத் தூவியே, யாற்றுமேவடித்தேவடிகொண்டபின், போற்றுமாயன்புக ல்பதம்பணிந்திட்டே (௫௮௮)

பணிந்துகண்டலம்பகவொருமுறை, துணிந்தமுழுகிடத்துய் யவினையறும், கணிந்தபித்தக்கபாலச்சூடுமுதல், வணிந்தரோகம்வளை யும்வினைபோமே (௫௮௯)

போகும்வியாதிபுகலுக்காமாலையாம், ஏகுங்குலையெரிக்கண்பு கைச்சலும், வேகுமேகட்விருதாப்பியமாறும், ஆகுந்தயிலமறைவதுஉ ண்மையே (௫௯௰)

மகாதேவராஞ்சிதத்தயிலம்.

உண்மையாகவுரைக்குந்தயிலமொன், றின்மையாமிலவங்கப்ப ட்டைபலம், வண்மையாகவருக்குமரலம்பட்டை, இன்மையானதோ ர்த்தில்லைப்பட்டையெடே (௫௯௧)

எடுத்துமேசிவன்வேம்பின்பட்டைபலம், தொடுத்துமேயகிற்ப ட்டையறுபலம், கொடுத்துமேபழச்சாற்றுலிடித்திடு, அடுத்துமேம லைச்சாறிடித்திடே (௫௯௨)

இடித்துச்சாறுமெடுப்பாய்தசட்டலம், கொடுத்துமேபசும்பாலிற்ச மனெடு, வடித்தமென்னெண்ணெய்வாகாய்ச்சமனடை, கொடுத்து ப்பாண்டத்திற்குமுறக்கலக்கிடே (௫௯௩)

கலக்கித்திடம் கமுறவேகாச்சிடு, நலக்கிடாமல் நவிலுந்தயிலத் தைத். பிலக்கமுலண்டலம்பேசமுழுகிடில், துலக்கவியாதிபோம் துய்யவி னைகளே (௫௯௪)

துய்யபித்தம்துடிப்பெறுவாதமும், "நையரோகம் நவிலுங்குன்ம ரோகம், பெய்யகுலைபெரும்பாண்டுரத்தமும், செய்யநோய்கள்போய்த ன்வந்திரியுணர்த்ததே (௫௯௫)

உரைத்தவாக்குதிசையிலும்பொய்யாது, ரைக்கநாவுமிடையச சுமாணிலம், விரைக்கவாசடப்விருப்பியுரைக்கிறேன், திரைச்சவாலுமு ழுவைப்பலம்பத்தெடே (௫௯௬

வாலுழுவைத்தயிலம்.

எடுத்தவாலுழுவைப்பலம்பத்துடன், தொடுத்தசாம்புடன் தயிலமுத்தக்காசு, அடுத்தபோரமுட்டிப்பலமவ்விடை, கொடுத்ததுமே பசும்பாலிலரைத்திடே (௫௰௭)

அரைத்துளன்னெண்ணெயாவின்படியரை, கரைத்துமேயிளநீரிற்கலக்கியே, இரைத்துப்பாண்டந்திறமாகக்காய்ச்சியே, முறைதப்பாமல்முதிரயிறக்கிடே (௫௰௮)

இறக்கிமண்டலமியல்பாய்முழுகிடில், சிறக்கும்பித்தஞ்சிரநோயனந்தமும், பறக்கும்வாதம்பகருமகாரோகம், நிறக்குமேகப்படைகளுநீக்குமே. (௫௰௯)

நீக்குநட்டம்நிலக்குங்கடிரணம், தீங்குசெய்யும் திமிர்ப்படைதானறும், ஓங்குநோய்களுறைந்திடுங்காலகம், பாங்குதன்வந்திரிபகட்டுபொய்யாதிதே (௬௰)

பொய்யாதைபாபுகலுங்குருமொழி, ஐயாதன்வந்திரியன்பாயுரைக்கிறேன், பையமாணிடர்பாரிற்பிழைப்பதற், கையனிசல்கழறவுரைத்ததே (௬௰௧)

செந்தாவற்பட்டைத்தயிலம்.

உரைக்குந்தயிலமுறையுமுறைமைகேள், திரைக்குஞ்செந்நாவற்பட்டையறுபலம், கரைக்குமருதம்பட்டைதசபலம், முரைக்கவெண்டோன்றிப்பட்டைசமனெடே (௬௰௨)

எடுத்துப்பஞ்சாங்கப்பட்டைதசபலம், கொடுத்துமேபழச்சாற்றுலிடித்துமே, தொடுத்துமேபதக்குச்சாறெடுத்திடு, அடுத்துளள்ளெண்ணெயன்பாய்ச்சமன்கூட்டிடே (௬௰௩)

கூட்டியாவின்பால்கூறச்சமனெடை, நீட்டிப்பாண்டநெருக்கிப்பொதிந்துமே, தீட்டியேபதமாகவேகாய்ச்சிடு, வாட்டியேசம்பலர்ப்பதம்போற்றிட்டே (௬௰௪)

போற்றிமண்டலம்புகழாய்முழுகிடில், தூற்றுபெண்டிச் துடியாப்பெரும்பாண்டு, கூற்றும்பித்தங்குதிக்கும்பெருவாதம், தோறும்பார்வைநீர்துலைந்தோடிப்போகுமே (௬௰௫)

போகுங்குட்டம்பொருமலிளைப்புடன், ஏகும்வாந்தி பழில் பெருகாசமும், வேகுமேகம்விஷநீர்பறந்தோடும், சாகும் வாதிதள ரீந்தோயுநீக்குமே (௬௰௬)

நீர்க்கடுப்புகாந்தல்நிகலுங்கைவீச்சுடன், நீங்குசெய்கின்றதிராப்பிணிகளும், பாங்குமூலம்பகருமுளைமூலம், ஏங்கிக்காணகமெழிலாய்ப்பறக்குமே (௪௱எ)

உடல்தளர்ச்சிதீரசர்வாங்கராஜயோகத்தயிலம்.

பறக்கும்பாரின்பகர்ந்திடுமாந்தர்க்கு, சிறக்குமிராசாங்கத்தயிலமுரைக்கிறேன், செறக்கச்சந்தனந்தேர்ந்தவகிற்கட்டை, நிறக்கப்பூலாநெருங்கப்பலந்தூக்கே (௪௱அ)

தூக்கிப்பூலாவுந்தையபசெஞ்சந்தனம், தாக்குக்காசுடன் தக்கவிலாமிச்சு, தேக்குப்பத்திரிசேர்ந்தபஞ்சாங்கமும், போக்கில்லாமற்பொருந்தும்பலங்கூட்டே (௪௱கூ)

கூட்டிநன்னாரிகூறிடலவ்விடை, நீட்டிவாலுழுவையரிசிபலம், கோர்த்துக்கிச்சிலிகூறிடுவவ்விடை, ஆர்த்தமஞ்சளறையுந்திரிசாதம். (௪௱௰க)

சாதம்வால்மிளகுவகையோர்பலம், நீதமாக நெருங்குஞ்சதாபல்லி, வாதமானவகுக்கும்பற்பாடகம், பேதஞ்சொன்னவிதிப்படிபார்த்திடே (௪௱௰௨)

பார்த்துச்சாதுரியம்பலமவ்விடை, நேத்தியாகநெருங்கும்நந்திவர்க்கம், பூர்த்தியாகப்புகலப்படிச்சார்ந்தால். தீர்த்துமேயனாதிரச்சமனைடே (௪௱௰௩)

எடுத்துவெள்ளெண்ணெயெழிலாய்ச்சமனைடை- தொடுத்தப்பாண்டத்திட்டோன்றவேகாச்சிடு- அடுத்துமண்டல மன்பாய்முழுகிடில், சடுத்தமானசகலநோய்தீருமே (௪௱௰௪)

தீருங்ரோகம்திரையும்நேத்திரரோகம்-கூறுஞ்சன்னிகுலாவுமுத்ராங்கமும், மீறும்பித்தமிகைசந்தபிடரிநோய், தூறும்கண்ணெளைசைதூலங்கவறுமே (௪௱௰௫)

அறுகுங்காசமதையுஞ்சயகாசம் - குறுகும்கைகால்குறைநோய்குஷ்டங்களும், மறுகுந்தேமல்மறையுமித்தயிலத்தால், சறுகுமேகப்பிணிகளுந்தாழுமே (௪௱௰௬)

கபாலப்புற்றுபீநசம்-காதிற்சீழ்தீர்வதற்கு மகாபூர்வக்கியானதயிலம்.

தி மாந்தர்க்குத்தயிலமுரைக்கிறேன், ஆழும்பூர்வக்கியானமுறைமைகேள்-சூழுங்கோசலந்தையினொருபடி, நீழுமேபசும்பாலும்படிசேரே. (௪௱௰௭

சேருப்வெள்ளாட்டினீர்படி மூத்திரம், கூருமட்பாலுங்கூறப்ப டிபெடு, சிறுநிம்பழச்சார்படிதானெடு-வாருமேமணித்தக்காளியூத்தி டே. (௪௱௰௮)

ஊத்துப்பூலைவணங்கியொருபடி-சேத்துமுக்கண்ணின் பாலு ஞ்சயினடை-பெத்துவெள்ளெண்ணெய்பேசவொருபடி-மாத்துமா மணக்கெண்ணெய்சமன்கூட்டே (௪௱௰௯)

கூட்டுமாவினெய்கூறிடலவ்விலட்-நீட்டுப்பாண்டம்நெருங்கக் கலந்துமே-ஊட்டியேகமலாக்கினியாகவே -காட்டியேமெழுகுபதங் காய்ச்சிடே (௪௱௨௰)

காச்சிமண்டலங்களிப்பாய்முழுகிடல்-மூட்டிடாமல் முயன்றே டும்வியாதிகேள், பேச்சில்லாயல்பெருமூச்செறிவதும், மாச்சிழும்பி ணிமறைந்திடும்பித்தமே (௪௱௨௰௧)

